We Shine Academy™

guiding you to get through

# CURRENT AFFAIRS

# ஜூலை 2017

## தேசிய செய்திகள் :

### ஜூலை – 1

- சுதந்திர இந்தியாவின் மிகப்பெரிய பொருளாதார சீர்திருத்த நடவடிக்கையாகக் கருதப்படும் சரக்கு –சேவை வரிவிதிப்பு நடைமுறை நாடு முழுவதும் அமலுக்கு வந்தது. இதன் மூலம் கடந்த 70 ஆண்டுகளாக பின்பற்றப்பட்டு வந்த வரிவிதிப்பு கொள்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. ஜிஎஸ்டி சட்டம் அமலுக்கு வந்ததால் ஏற்கனவே நடைமுறையில் இருந்த 30க்கும் மேற்பட்ட மறைமுக வரிகள் ஒழிக்கப்பட்டுள்ளன.

- மத்திய அரசின் புதிய அட்டர்னி ஜெனரலாக மூத்த வழக்கறிஞர் கே.கே. வேணுகோபால் விரைவில் நியமிக்கப்பட உள்ளார். இவர் 15வது தலைமை வழக்கறிஞர் ஆவார். இதற்கான ஒப்புதலை குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி வழங்கியுள்ளார்.

- கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் சிறு சேமிப்பு திட்டங்களுக்கான வட்டி விகிதம் 3 மாதங்களுக்கு ஒரு முறை மாற்றி அமைக்கப்படுகிறது.

- வங்கிக் கணக்கு விவரங்களை அளிக்கும் படி, 3768 தன்னார்வு தொண்டு நிறுவனங்களுக்கு (என்ஜிஓ) மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

- பசி மற்றும் ஊட்டச்சத்து இன்மைக்கு எதிராகப் போராடி வரும் அங்கித் கவத்ரா (25) எனும் இந்திய இளைஞருக்கு இங்கிலாந்து ராணி இளம் தலைவர்கள் விருது வழங்கி கௌரவித்துள்ளார். இந்தியாவில் அங்கித் ‘ஃபீடிங் இந்தியா’ என்னும் அமைப்பைத் தொடங்கியுள்ளார். 2014ல் 5 பேரோடு ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு இன்று இந்தியா முழுக்க 43 நகரங்களில் செயல்பட்டு வருகிறது. இங்கிலாந்து ராணி இளம் தலைவர் விருதுக்காக உலகம் முழுவதுமுள்ள 60 தலைசிறந்த இளைஞர்களைத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்களின் வயது 18 முதல் 29க்குள் இருக்க வேண்டும்.

- மும்பையின் முக்கிய ரயில் நிலையமான சத்ரபதி சிவாஜி ரயில் முனையத்தின் பெயர் ‘சத்ரபதி சிவாஜி மகராஜ் ரயில் முனையம்’ என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

- தெற்கு காஷ்மீரில் கடல்மட்டத்திலிருந்து 3888 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள அமர்நாத் குகைக் கோயிலில் 500க்கும் மேற்பட்ட யாத்ரீகர்கள் பனிலிங்கத்தை தரிசனம் செய்தனர்.

### ஜூலை – 2

- ஆதார் பான் எண் (நிரந்தர கணக்கு எண்) ஆகியவற்றை இணைப்பதற்கு ஒருபக்க பாரத்தை பூர்த்தி செய்து அனுப்பும் புதிய நடைமுறையை வருமான வரித்துறை அறிமுகப்படித்தியுள்ளது.

- காவிரியிலிருந்து தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விட எதிர்ப்புத் தெரிவித்து கர்நாடகாவில் மண்டியா மாவட்டத்தில் 2-வது நாளாக விவசாயிகள் போராட்டத்தில் ஈடுப்பட்டுள்ளனர்.

➢ சரக்கு சேவை மற்றும் ஜி.எஸ்டி வரி விதிப்பு முறையால் இந்தியாவின் பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படும் என்று உத்தரகண்ட் மாநில பா.ஜ.க. முன்னாள் எம்.பி தருண் விஜய் தெரிவித்துள்ளர்.

➢ பாஜக ஆட்சிக்கு வந்த பிறகே சுவிஸ் வங்கியில் கணக்கு தொடங்குவது 45 சதவீதம் குறைந்துள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

➢ சரக்கு சேவை வரி நாடு முழுவதும் நடைமுறைக்கு வந்துள்ளது. இதில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் செல்போன்களின் சில குறிப்பிட்ட உதிரி பாகங்களுக்கு அடிப்படை சுங்க வரி 10 சதவீதம் விதிக்கப்பட்டு இருக்கிறது.

➢ காஷ்மீரைச் சேர்ந்த இளைஞர்களை பாதுகாப்புப் படையினருக்கு எதிராக கல்வீச்சில் ஈடுபடும்படி பிரிவினைவாதிகள் தூண்டிவிடுவதாக அஜ்மீர் தர்கா தலைமை மதகுரு ஜெய்னுல் அபேதின் அலிகான் குற்றஞ்சாட்டுகிறார்.

➢ இந்திய பெற்றோர்கள் தங்கள் குழந்தைககளின் படிப்பிற்கு (தொடக்கக்கல்வி முதல் இளங்களை பாடம் வரைக்கும்) ரூ.12.22 லட்சம் செலவு செய்கிறார்கள் என எச்.எஸ்.பி.சி நடத்திய கல்வி மதிப்பு என்ற ஆய்வில் தெரியவருகிறது.

➢ 2022 ஆம் ஆண்டு 75-வது சுதந்திர தினத்தை கொண்டாடும் போது நாடு தன்னிறைவு பெற வேண்டும் என்று பிரதமர் மோடி கூறியுள்ளார்.

**ஜூலை - 3**

➢ காவிரியிலிருந்து தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விடுவதை எதிர்த்து கர்நாடகாவில் விவசாயிகள் 3 வது நாளாக இன்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

➢ பயணிகளின் வசதிற்காக குறைந்த விலையில் குளிர்சாதன பெட்டிகள் கொண்ட இரயில்களை இயக்க இரயில்வே நிர்வாகம் திட்டமிட்டு உள்ளது.

➢ வரும் செப்டம்பர் மாதம் முதல் ஆதார் எண் பதிவு மையங்கள் அரசு கட்டிடங்களில் செயல்பட வேண்டும் என்று மாநில அரசுகளுக்கு இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (யுஐடிஏஐ) உத்தரவிட்டுள்ளது.

➢ ஊழல் புகாரில் சிக்கிய அதிகாரிகளின் தகவல்களை வெளியிட வேண்டும் என்று மத்திய அரசுக்கு தகவல் ஆணையம் உத்தரவு தெரிவித்துள்ளது.

➢ மராட்டிய மாநிலம் வார்தா மாவட்டத்தில் உள்ள காரன்கானா கிராமத்தில் மகாகாளி அணைப்பகுதி உள்ளது. அணையை சுற்றி பார்க்க சென்ற மாணவிகள் செல்பி மயக்கத்தால் அணையின் உள்ளே இறங்கி செல்பி எடுக்கப் போய் தண்ணீரில் மூழ்கி இறந்தனர்.இவர்கள் மூவரும் நர்சிங் கல்லூரி மாணவர்கள் என்பது தெரியவருகிறது.

- சாதாரண இந்தியர்களை அறிந்து கொள்வதற்காக (www.billionbeats.in) நூறு கோடி துடிப்புகள் என்ற இணையதளத்தை முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் **ஏ.பி.**ஜெ.அப்துல்கலாம் தொடங்கி நடத்தி வந்தார். சில காரணங்களால் இந்த இணையதளம் முடங்கி கிடந்தது.தற்போது மறுபடியும் செயல்படுத்தப்பட்டது.

- ஜிஎஸ்டி அமல் படுத்தப்பட்டிருப்பதால் முதல் மூன்று மாதங்களுக்கு ஒரு லட்சம் மக்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகும் என தொழிலாளர் நலத்துறை அமைச்சர் பண்டாரு தத்தாத்ரேயா தெரிவித்துள்ளார்.

**ஜுலை – 4**

- 1931 ம் ஆண்டு பிரிட்டனில் நடைபெற்ற வட்ட மேஜை மாநாட்டில் மகாத்மா காந்தி பங்கேற்றப்போது தரையில் அமர்ந்து ஏதோ எழுதி கொண்டிருந்தார்.அதை அப்படியே ஓவியமாக ஜான் ஹென்றி என்ற ஓவியர் பென்சிலால் வரைந்தார். இவ்வோவியம் தற்போது ஏலத்துக்கு வந்துள்ளது என்பது குறிப்பிடதக்கது.

- இந்திய இரயிலில் பயணம் செய்ய விரும்பும் வெளிநாட்டினர் தற்போது 120 நாட்களுக்கு முன்னதாக டிக்கெட்டுகளை பதிவு செய்யும் வசதி இருந்தது. இனிமேல் 360 நாட்களுக்கு முன்னதாக பதிவு செய்ய வேண்டும் என்ற அறிவிப்பை இந்திய இரயில்வே இந்த வாரத்தில் வெளியிடவுள்ளது.

- சென்னை உயர் நீதிமன்றம் அனைத்து விவசாயிகளின் பயிர்கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று ஆணைப் பிறப்பித்த உத்தரவுக்கு உச்ச நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

- மாற்று திறனாளிகள் பயன்படுத்தும் பொருட்களுக்கும் சரக்கு –சேவை வரி விதித்ததை திரும்ப பெற வேண்டும் என்று காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி வலியுறுத்துகிறார்.

- சுப்ரீம் கோர்ட்டு உத்தரவால் தமிழகத்திற்கு கொஞ்சம் தண்ணீர் திறந்து விட்டுள்ளோம் என்று மந்திரி சித்தராமையா விளக்கம் அளித்துள்ளார்.

- ஓடிஸா மாநிலம் சந்திப்பூர் கடல் பகுதியில கடந்த திங்கட்கிழமை ஏவுகணை சோதனை நடைப்பெற்றது. இச்சோதனையில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை குறிதவறாமல் தாக்கிய ஏவுகணை வெற்றியை தந்தது.

- ஜிஎஸ்டி வரி விலக்கு அமலுக்கு வந்த பின் தமிழ்நாடு கேரளா மற்றும் டெல்லி போன்ற 22 மாநிலங்களில் சோதனைச் சாவடிகள் மூடப்பட்டு வருகின்றன.

**ஜுலை – 5**

- நீட் தேர்வில் இருந்து தமிழக மாணவர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று தொடரப்பட்ட மனுவை சுப்ரீம் கோட் தலைமை நீதிபதி ஜே.எஸ்.கேஹர் மற்றும் நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் ஆகியோர் தள்ளுபடி செய்தனர்.

- இந்த வருடம் இறுதிக்குள் புதிய 200 ரூபாய் நோட்டுகள் வெளியிடப்படும் என்று ரிசர்வ் வங்கி வட்டாரம் தெரிவித்துள்ளது.

- நாட்டின் புதிய தலைமைத் தேர்தல் ஆணையராக அச்சல் குமார் ஜோதி(64) மத்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நாளை பதவியேர்க்கவுள்ளார்.

- நாடு முழுவதும் 18760 பேர் டெங்குவால் பாதிக்கப்பட்டிருப்பதாக மத்திய சுகாரத்துறை வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் இரண்டாவது இடத்தில் தமிழகம் இருக்கிறது என்பது குறிப்பிடதக்கது.

- சுதந்திர தினத்தை பெரும்பாலான கல்வி நிறுவனங்கள் அதற்கு முந்தைய நாளே (ஆக.14) கொண்டாடுவதைத் தடுப்பதற்காக விழிப்புணர்வு பிரசாரங்களை மேற்கொள்ள மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.ஆகஸ்ட் 14 ம் தேதி சுதந்திர தினம் கொண்டாடக்கூடாது என்பதை வலியுறுத்துவதாக இச்செய்தி தொகுப்பு அமைந்துள்ளது.

- மாவட்ட அளவில் சரக்கு சேவை வரி (ஜிஎஸ்டி) முறைப்படி அமல்படுத்துவதை கண்காணிக்க 200க்கும் மேற்பட்ட மூத்த அதிகாரிகளை மத்திய அரசு நியமனம் செய்துள்ளது என்பது குறிப்பிடதக்கது.

- தொழில்நுட்பக் கோளாறு அல்லது ஏதேனும் போலி காரணத்தைத் தெரிவித்து பொது மக்களுக்கு ஆதார் பதிவு செய்ய மறுப்பு தெரிவித்தால் அது ஊழல் நடவடிக்கையாக கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆதார் சேமை மையங்களுக்கு இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (யுஐடிஏஐ) எச்சரிக்கை விடுத்துள்ளது.

**ஜூலை – 6**

- சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பாக பொது மக்களின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கும் வகையில் 60 தேசிய நுகர்வோர் ஆலோசனை மையங்கள் திறக்கப்பட்டுள்ளன என்று மத்திய நுகர்வோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

- ஐஏஎஸ் மற்றும் ஐபிஎஸ் போன்ற சுகாதாரத் துறையை நிர்வகிப்பதற்கு அகில இந்திய மருத்துவ சேவை (ஏஐஎம்எஸ்) என்ற பதவியிடத்தை உருவாக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

- போலி சாதி சான்றிதழ் கொடுத்து அரசு பணியிலோ அல்லது இட ஒதுக்கீட்டில் கல்லூாயில் சேர்ந்திருந்தாலோ உடனடியாக அரசு பணி மற்றும் கல்லூரி பட்டத்தை பறிக்கலாம் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

- என்ஆர்ஐ, இந்திய குடிமக்கள் அல்லாதவர்கள் ,80 வயது அல்லது அதற்கு அதிக வயது உள்ளவர்கள், ஜம்மு காஷ்மீர் மேகலாய மாநிலங்களில் தனித்து வாழ்பவர்கள் ஆகியோர்க்கு ஆதார் இணைப்பிலிருந்து விலக்கம் அளிக்கப்பட்டுள்ளது என மத்திய அரசு விளக்கமளித்துள்ளது.

- குடியரசு தின வழாவில் ஆண்டுதோறும் வெளிநாட்டு தலைவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்பர் ஆனால் அடுத்த ஆண்டு (2018) ஜனவரி 26ம் தேதி நடைபெறும் குடியரசு தினவிழாவில் ‘ஆசியோன்’ அமைப்பை சேர்ந்த 10 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர் என தகவல்கள் வெளியாகிவுள்ளன.

- தொல்லியல் துறை அருங்காட்சியங்களில் செல்பி ஸ்டிக்குகளை எடுத்துச் செல்ல அத்துறை தடை விதித்துள்ளது.

- மத்திய அரசு கொண்டுவந்துள்ள சரக்கு சேவை வரி நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்யும் என்று யோகா குரு பாபா ராம்தேவ் கூறியுள்ளார்.

- இந்தியாவிலுள்ள மொத்த தொழிற்சாலைகளில் 16 சதவீதம் தமிழ்நாட்டில் உள்ளது என ரிசர்வங்கி தனது ஆய்வறிக்கையில் தெரியவித்துள்ளது.

**ஜூலை -7**

- கர்நாடகா மற்றும் அதனை சுற்றியுள்ள மாவட்டங்களில் உள்ள தொழிற்சாலை கழிவுகள் காவிரியை மாசுபடுத்துகின்றன. இதனால் தமிழகத்திற்கு வரும் தண்ணீர் மாசு கலந்து வருவதால் பயிர்கள் அளிகின்றன. இதுகுறித்து மாசு கட்டுபாட்டு வாரியம் பதிலளிக்க வேண்டும் என்று சுப்ரிம் கோட் உத்தரவு பிறப்பித்துள்ளது.

- தமிழக சட்டசபையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதியால் ஒப்புதல் வழங்கப்பட்ட ஜல்லிகட்டு சட்டத்துக்கு தடை விதிக்ககோரி ‘பீட்டா’’ அமைப்பு நேற்று சுப்ரீம் கோட்டில் மீண்டும் மனு தாக்கல் செய்துள்ளது.

- விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வதை தடுக்கும் விதமாக விவசாயிகளுக்கான நலத்திட்டங்களை செய்ய மத்திய அரசுக்கு சுப்ரீம் கோர்ட் ஆணை பிறப்பித்துள்ளது.

- நாட்டில் அடிப்படை கல்வியின் தரம் மோசமடைந்து வருவதால் அடுத்த கல்வி ஆண்டில் முதல் 8ம் வகுப்பு வரை கட்டாய தேர்ச்சி முறை ரத்து செய்யப்பட உள்ளதாக மத்திய மனித வள மேம்பாட்டுத்துறை இணை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

- விமானக் கடத்தலின்போது யாருக்கு உயிரிழப்பு ஏற்பட்டாலும் கடத்தல் காரர்களுக்கு மரண தண்டனை விதிக்க வகை செய்யும் புதிய விமானக் கடத்தல் தடுப்புச் சட்டம் அமலுக்கு வந்துள்ளது.

- ரெயில் டிக்கெட்டில் மூத்த குடிமக்களுக்கான கட்டண சலுகையில் புதிய முறையை அமல்படுத்த ரெயில்வே துறை திட்டமிட்டுள்ளது.

- தமிழக விவசாயிகளை கட்டாயப்படுத்தி கடனை வசூலிப்பது கூடாது என்று வங்கிகளுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு அளித்துள்ளது.

**ஜூலை - 8**

- இந்தியாவின் மிக நெருங்கிய நட்பு நாடு வங்கதேசம் தான் என்று குடியரசு தலைவர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

- நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள காப்பகங்களில் வசிக்கும் கணவரை இழந்த பெண்களின் நிலையை மேம்படுத்துவதற்கான வரைவுத் திட்டம் தயார் நிலையில் உள்ளது என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

- இரயில்வேயில் பணி நியமனம் செய்வதற்கு ஆன்லைனில் தேர்வுகள் நடத்தப்பட்டதால் 4 இலட்சம் மரங்கள் மற்றும் 319 கோடி தாள்கள் பாதுகாக்கப்பட்டதாக இரயில்வே துறை தெரிவித்துள்ளது.

- மத்திய அரசின் சமூகநலத்திட்டப் பயன்களை பெறுவதற்க்கு ஆதார் எண் கட்டாயம் மாக்கப்பட்டது.ஆதார் எண் தொடர்பான அனைத்து பிரச்சனைகள் குறித்தும் அரசியல் சாசன அமர்வு முடிவு எடுக்கும் என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அறிவுறுத்தினர்.

- இந்திய தொழிநுட்ப நிறுவனமான (ஐஐடி) மாணவர் சேர்க்கைக்காக நடத்தப்பட்ட நுழைவுத்தேர்வில் கருணை மதிப்பெண் வழங்கப்பட்ட விவகாரத்தில் மாணவர் சேர்க்கை கலந்தாய்வுக்கு உச்ச நீதிமன்றம் இடைக்கால தடைவிதித்துள்ளது.

- இந்திய- பாகிஸ்தான் எல்லையை திறப்பது பஞ்சாப் மாநிலத்திற்கு உதவிகரமாக இருக்கும் என்று அம்மாநில முதலமைச்சர் அமரிந்தர் சிங் கூறியுள்ளார்.

- மருத்துவ கல்விக்கான மாணவர் சேர்க்கையில் மாநில பாடத்திட்ட மாணவர்க்களுக்கு 85 சதவீதம் இடங்களை ஒதுக்கிய தமிழக அரசின் அரசாணைக்கு எதிரான மனுவை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு இந்த வழக்கில் சென்னை ஐகோர்ட்டு விரைந்து முடிவெடுக்க வேண்டும் என அறிவுறுத்தியது.

- தேசிய அளவில் விவசாயிகள் தங்கள் விளைப்பொருட்களை நேரடியாக விற்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில் விவசாயிகளின் தற்கொலையைத் தடுப்பது அரசின் கடமையாகும் எனவே மத்திய மாநில அரசுகள் இதற்கான போதுமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு கருத்து தெரிவித்துள்ளது.

**ஜூலை -9**

- யுனெஸ்கோ உலக பாரம்பரிய கமிட்டியின் 41வது கூட்டம் போலந்தில் நடைபெற்றது. இதில் இந்தியாவின் முதல் பாரம்பரிய நகரம் என்ற பெருமையை அகமதாபாத் பெற்றுள்ளது. துருக்கி, போர்ச்சுக்கல், தென்கொரியா, ஜிம்பாப்வே, க்யூபா உள்ளிட்ட 20 நாடுகளின் பரிந்துரையின் போரில் மத ஒருங்கிணைப்பிற்கு எடுத்துக் காட்டாக திகழும் அகமதாபாத் நகரம் உலக பாரம்பரிய நகரங்களின் பட்டியலில் 287வது நகரமாக இடம் பெற்றுள்ளது.

- 5 நாள் அரசு முறை சுற்று பயணமாக வெளிநாடு சென்றிருந்த பிரதமர் நரேந்திர மோடி இன்று காலை இந்தியா திரும்பினார்.

- ராணுவத்தில் எதிரிகள் மீது தாக்குதல் நடத்த பயன்படுத்தப்படும் போர் வாகனங்களை ரூ. 2400 கோடி செலவில் அதி நவீனமயமாக்க பாதுகாப்புத் துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் 'கேரியர் கமேண்ட் போஸ்ட் வெய்க்கிள்' எனப்படும் மற்றொரு வகையான தாக்குதல் வாகனங்களை ரூ.406 கோடி செலவில் புதிதாக கொள்முதல் செய்வதற்கும் ஒப்புதல் அளித்துள்ளது.

- சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த பெண்களுக்கு திருமண நிதி உதவியாக ரூ 51000 வழங்கும் திட்டத்தை அறிமுகம் செய்ய முடிவு செய்துள்ளது என மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் முக்தார் அப்பாஸ் நக்வி தெரிவித்துள்ளார்.

- ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் சரக்கு மற்றும் சேவை வரிவிதிப்பு (ஜிஎஸ்டி) முறை ஜூலை 8 முதல் அமலுக்கு வந்துள்ளது.

- உத்தரப் பிரதேச மாநிலத்தில் சொந்தமாக வீடு இல்லாத 10 லட்சம் பேருக்கு 2019ஆம் ஆண்டுக்குள் வீடுகள் கட்டித் தரப்படும் என்று அம்மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் உறுதியளித்துள்ளார்.

- காஷ்மீர் மாநிலத்தில் இந்தியா பாகிஸ்தான் எல்லையில் ஜூலை 8 மதியம் 3.42 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்நிலநடுக்கம் பூமிக்கடியில் 10 கிமீ ஆழத்தில் ஏற்பட்டது.

- 'வைஸ்ராய் ஹவுஸ்' என்ற ஆங்கில படத்தின் ஒலிப்பதிவுக்காக பிரபல இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் உலக ஒலிப்பதிவு விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்.

- பர்கான் வானி நினைவு தினம் ஜூலை 8 (நேற்று) அன்ற அனுசரிக்கப்பட்டதையொட்டி காஷ்மீரில் முடக்கி வைக்கப்பட்டிருந்த இணையதள சேவை மீண்டும் தொடங்கியது.

**ஜூலை -10**

- டெல்லியில் நடந்த விழாவில் கல்வித்துறையை மின்னணு மயமாக்கும் திட்டத்தை ஜனாதிபதி தொடங்கிவைத்தார். கல்வி உபகரணங்கள் இலவசம் கல்வியை நவீன தொழில்நுட்பங்களின் உதவியுடன் தொலைதூர பகுதிகளுக்கும் கொண்டு சேர்க்கும் நடவடிக்கைகளை மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் உருவாக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

- ஜிஎஸ்டி வரி அமைப்பு ஜவுளிகளுக்கு 5 சதவீதம் வரியை விதித்துள்ளதை எதிர்த்து வர்த்தகர்கள் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தை நாளை முதல் மேற்கொள்ள உள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

- ஜிஎஸ்டி அமலாகிய பின்னர் சத்திஸ்கர் மாநிலம் சரக்கு போக்குவரத்து மையமாக மாறும் வாய்ப்பிருப்பதாக நிதிஅமைச்சர் அருண் ஜெட்லி தெரிவித்துள்ளார்.

- தில்லியில் முக்கிய நகரங்களில் தாக்குதல் நடத்த பயங்கரவாத இயக்கம் சதித் திட்டம் தீட்டியுள்ளதாக மத்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. இதையெடுத்து முக்கிய நகரங்களில் பாதுகாப்பு கண்காணிப்பு நடவடிக்கைகளை பலப்படுத்துமாறு மாநில அரசை மத்திய உள்துறை கேட்டு கொண்டுள்ளது.

- புது தில்லி இரயில் நிலையத்தில் மாதந்தோறும் சராசரியாக 600 ‘இரயில்வே குழந்தைகள்’ அடைக்கலம் ஆவதாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

- இரயில்களில் 3 வது நிலை குளிர் வசதி பெட்டிகளில் (3ஏசி) மாற்றுத் திறனாளிகளுக்கு கீழ் வரிசைப் படுக்கைகளில் இட ஒதுக்கீடு செய்ய இந்திய இரயில்வே முடிவு செய்துள்ளது.

- நாடு முழுவதும் நக்ஸலைட் தீவிரவாதிகள் கடந்த 20 ஆண்டுகளில் நடத்திய தாக்குதல்களில் 2700 பாதுகாப்புப் படையினர் உள்பட 12000 பேர் கொல்லப்பட்டு விட்டனர் என்ற புள்ளி விவரத்தை மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

- ஆயுதங்களை ஆடம்பரத்திற்காகவும் அந்தஸ்தின் அடையாளமாகவும் வைத்திருக்க யாருக்கும் உரிமை இல்லை என்று தில்லி உயர் நீதி மன்றம் தெரிவித்துள்ளது. மேலும் துப்பாக்கி வைத்திருப்பதற்கான உரிமம் கோரி விண்ணப்பித்த விண்ணப்பங்களும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன என தகவல்கள் தெரிவிக்கின்றன.

**ஜுலை -11**

- கீழ்கோட்டு நீதிபதிகள் நியமிப்பதில் புதிய நடைமுறையை பின்பற்றுவது தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள யோசனை குறித்து சுப்ரீம் கோர்ட்டு விசாரணை நடத்தி வருகிறது.

- சட்டப்பேரவை விவகாரத்தில் அரசியல் சாசனப்படி நீதிமன்றங்கள் தலையிடக்கூடாது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- இந்திய தொழில்நுட்ப நிறுவன (ஐஐடி) மாணவர் சேர்க்கைக்கான நடத்தப்பட்ட நுழைவுத்தேர்வில் கருணை மதிப்பெண் வழங்கப்பட்ட விவகாரத்தில் மாணவர் சேர்க்கை கலந்தாய்வுக்கு இடைக்கால தடையை நீக்கி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

- ஜம்மு – காஷ்மீர் மாநிலம் அனந்த்நாக்கில் அமர்சாத் யாத்ரீகர்கள் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதையடுத்து ஜம்முவில் செல்போன் இணைய சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

➢ அரசியல் மோதல்கள் அதிகம் இருந்த கேரளா காவல் நிலையம் இன்று இசை நூலக வசதிகள் மரக்கன்று வழங்குவது என்று புதுமை படைத்து வருகிறது. இங்கு பணிபுரியும் அதிகாரிகள் காவல் நிலையத்தை மக்களுக்கு உகந்த இடமாக மாற்ற முடிவெடுத்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

➢ வெளிநாட்டு நன்கொடை ஒழுங்குமுறைச் சட்டத்தின் (எப்சிஆர்ஏ) கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தன்னார்வ அமைப்புகளில் (என்ஜிஓ) 18523 அமைப்புகள் கடந்த ஆண்டுகளாக வரவு-செலவு கணக்கை தாக்கல் செய்யாததை உள்துறை அமைச்சகம் கண்டறிந்தது. நாட்டில் எப்சிஆர் சட்டத்தின் கீழ் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தன்னார்வ அமைப்புகள் பதிவு செய்துள்ளன. இந்த அமைப்புகள் எப்சிஆர் இணைய தளத்தில் ஆண்டுதோறும் வரவு செலவு கணக்கை தாக்கல் செய்வது கட்டாயம் என உள்த்துறை அதிகாரி தெரிவித்துள்ளார்.

➢ சர்ச்சைக்குரிய எல்லைப்பகுதியிலிருந்து சீன படைகள் வெளியேறாவிட்டால் டோகாலா பகுதியில் தொடர்ந்து முகாமிட்டிருக்க இந்திய இராணுவம் முடிவு செய்துள்ளது.

**ஜுலை -12**

➢ மத்திய மாநில அரசுகள் சமூக நலத்திட்டங்களை பெறுவதற்க்காக ஆதார் அட்டையை கட்டாயம் ஆக்கியுள்ளது. ஆதார் தொடர்பான வழக்குகளை அரசியல் சாசன அமர்வுக்கு உச்ச நீதிமன்றம் மாற்றியுள்ளது.

➢ காற்றாடிகளை பறக்கவிட பயன்படுத்தும் மாஞ்சா நூலுக்கு நாடு முழுவதும் தடை விதிக்க தேசிய பசுமை தீர்பாயம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

➢ டெல்லியில் இருந்து ஜார்கண்ட் மாநில தலைநகர் ராஞ்சிக்கு ஏர்ஏஷியா விமான நிறுவனத்தின் விமானம் ஒன்று சென்று கொண்டிருந்தது.நடுவானில் விமானம் செல்லும் போது விமானத்தின் அவசரகால கதவை பயணி ஒருவர் திறக்க முயன்றார். அதிஷ்டவசமாக சில காயங்களுடன் விமானம் பத்திரமாக தரையிறங்கியது.

➢ வருங்காலத்தில் சொத்துக்களை வாங்கவும் விற்கவும் ஆதார் எண் கட்டாயமாக்கப்படும் என்று இந்தியாவின் தனிப்பட்ட அடையாள ஆணையத்தின் தலைமைச் செயல் அதிகாரி அஜய்பூஷன் பாண்டே தெரிவித்துள்ளார்.

➢ சண்டீகரில் மதுவகைகளை விற்பனை செய்வதை அனுமதிக்கும் வகையில் நெடுஞ்சாலைகளை மாவட்ட சாலைகளாக்க பிறப்பிக்கப்பட்ட உத்தரவு செல்லும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

➢ உத்திரபிரதேசம் மாநிலம் அலகாபாத் திரிவேணி சங்கமத்தின் தென்கரை சாலைக்கு தமிழ் கேசந்த் திருவள்ளுவர் மார்க் (தமிழ் ஐயன் திருவள்ளுவர் சாலை) எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நேற்று முன்தினம் நடைப்பெற்றது.

- டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையிலுள்ள எலும்பு வங்கிக்கு இரண்டரை ஆண்டுகள் இடைவெளிக்கு பிறகு இப்போது தான் ஒரு பெண்ணின் எலும்புகளும் தோலும் தானமாக கிடைத்துள்ளது என்று அம்மருத்துவமனை தகவல்கள் தெரிவித்துள்ளன.

**ஜுலை - 13**

- செல்லாத ரூபாய் நோட்டுகளை எண்ணும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்று ரிசர்வ் வங்கி கவர்னர் தெரிவித்துள்ளார்.

- நாட்டை பசுமையாக்கும் பணியில் மாணவர்களின் பங்கேற்பை உறுதி செய்யும் வகையில் ‘ஒரு மாணவருக்கு ஒரு மரம்’ என்ற திட்டம் பெரியார் பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்டது.

- முன்னாள் குடியரசுத் தலைவரும் புகழ்பெற்ற விஞ்ஞானியுமான ஏ.பி.ஜெ. அப்துல்கலாம் அவர்களின் பெயரிலான அருட்காட்சியகம் கேரள மாநிலம் திருவனந்த புரத்தில் இன்று திறக்கப்படுகிறது.

- பிரதமர் நரேந்திர மோடியின் வெளிநாட்டுப் பயணங்களால் உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பு உயர்ந்துள்ளது என மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- ஆகஸ்ட் 15ந் தேதிக்குள் அனைத்து வர்த்தகர்களும் ஜி.எஸ்.டி யின் கீழ் பதிவு செய்வதை உறுதிப்படுத்துங்கள் என்று மாநில அரசுகளின் தலைமை செயலாளர்களை பிரதமர் மோடி கேட்டுக்கொண்டார்.

- காவிரி நதி நீர்ப் பங்கீடு தொர்பான வழக்கை நாங்களே விசாரிப்போம் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

- தன்னார்வ தொண்டு அமைப்புகளை ஒழுங்குப்படுத்த சட்டம் நிறைவேற்ற வேண்டும் என்று மத்திய அரசுக்கு 4 வார அவகாசத்தை உச்ச நீதிமன்றம் அளித்துள்ளது.

**ஜுலை -14**

- காஷ்மீர் பிரச்சனையில் சீனாவின் தலையீடு தேவையில்லை என்று இந்திய அரசு திட்டவட்டமாக கூறியுள்ளது.

- நாடு முழுவதும் அரசுக்கு எதிராக 135060 வழக்குகள் பதிவாகியுள்ளன. இதில் 369 வழக்குகள் நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் என்று மத்திய சட்ட அமைச்சகம் தகவல் தெரிவித்துள்ளது.

- ஆளும் அரசு மீது அதிக நம்பிக்கை கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்தியாவிற்கு முதலிடம்.

- பிரதமர் நரேந்திர மோடியை இன்னொரு மகாத்மா காந்தியாக பார்க்கிறேன் என்று மத்திய அமைச்சர் மகேஷ் சர்மா கூறியுள்ளார்.

- அஞ்சல் துறையின் சார்பில் பள்ளி மாணவ மாணவிகளை கவரும் விதமாக மறைந்த முன்னாள் குடியரசு தலைவர் அப்துல்கலாம் உருவம் பதிக்கப்பட்ட லேபிள் வெளியிடப்பட்டுள்ளது.

- 20 மில்லியன் அதிகமான சூரிய ஒளி போன்ற பெரிய விண்மீன் கூட்டத்தைஇந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். தற்போது அவ்விண்மீன் கூட்டத்திற்கு சரஸ்வதி என்று பெயரிட்டுள்ளனர்.

- கங்கை நதியில் குப்பை கொட்டினால் ரூ.50 ஆயிரம் அபராதம் என்று பசுமை தீர்ப்பாயம் பரிந்துரை செய்துள்ளது.

- பெண்களுக்கான மருத்துவ அட்டைகள் : ஆதார் அட்டையுடன் இணைந்த மருத்துவ அட்டைகள் விரைவில் வழங்கப்படும் என்று மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

**ஜுலை - 15**

- மிசோரம் மாநிலத்தில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மக்களுக்கு அலவசமாக மழை நீர் சேகரிப்புத் தொட்டி வழங்கப்படும் என்று அம்மாநில முதல்வர் தெரிவித்துள்ளார்.

- பருவ மழைக் காரணமாக இந்தியாவின் அஸ்ஸாம் மாநிலத்தில் காஸிரங்கா தேசிய வன உயிரியல் பூங்கா வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இங்குள்ள வன விலங்குகள் வெள்ளத்தில் போராடி வருகின்றன என தகவல்கள் வெளியாகின.

- இரயில்வே சேவைக்களுக்கான இரயில் டிக்கெட் முன்பதிவு இரயிலில் பயணிக்கும் போதே உணவு வகைகளைப் பெறுவது மற்றும் துப்புரவு பணிகளுக்கான ஒருங்கிணைந்த புதிய செயலியை “ரயில் சாரதி” என்ற ஆப்யை இரயில்வேத் துறை அமைச்சர் நேற்று தில்லியில் தொடங்கிவைத்தார்.

- சூரிய மின்சக்தியுடன் கூடிய இரயில் சேவையை இரயில்வேத்துறை தில்லியில் அறிமுகம் செய்தது.

- சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டம் - 2017(ஜிஎஸ்டி) குறித்த டிப்ளமோ படிப்பு வணிகவியல் துறையில் விரைவில் அறிமுகம் செய்ய உள்ளதாக தில்லி பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

- உத்திரப் பிரதேச மாநில அரசின் 4 விவசாயப் பல்கலைக்கழகங்களில் 43 சதவீதம் மாணவர் சேர்க்கை நிரம்பாத நிலை ஏற்பட்டுள்ளதாக அம்மாநில விவசாயத்துறை அமைச்சர் சூர்ய பிரதாப் ஷாஹி கூறியுள்ளார்.

- தமிழக்கத்தில் சென்னை கிண்டியில் அமைந்துள்ள ஆளுநர் மாளிகையில் புகழ் பெற்ற சங்ககால பெண்புலவரான ஔவையாரின் சிலையை தமிழக பொறுப்பு ஆளுநர் வித்யாசாகர் ராவ் திறந்து வைத்தார்.

## ஜூலை - 16

- உலக இளைஞர்கள் திறன் மேம்பாடு தினம் ஜூலை 15ம் தேதி அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி உத்திரப் பிரதேசத்தில் 5 ஆண்டுகளில் 70 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக உத்திரப் பிரதேச மாநில முதல்வர் யோகி ஆதித்ய நாத் தெரிவித்தார்.

- காற்று மாசுபாடு காரணமாக ஏற்படும் பருவநிலை மாற்றத்தினால் ஆசிய பசிபிக் பகுதிகளில் கடும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் தென் இந்தியாவில் வரும் 2030 ஆம் ஆண்டுகளில் நெல் விளைச்சல் வீழ்ச்சியடையும் எனவும் புதிய ஆய்வறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

- மத்திய அரசின் உஜ்வாலா யோஜனா திட்டத்தின் கீழ் ஏழைப் பெண்களுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்புகளை குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி வழங்கினார். இந்த இணைப்புகளையும் சேர்த்து இத்திட்டத்தின் பயனாளிகள் எண்ணிக்கை 2.5 கோடியாக உயர்ந்துள்ளது.

- சரக்கு – சேவை வரிவிதிப்பின் கீழ் வரும் 30ம் தேதிக்குள் பதிவு செய்ய வேண்டும் என வர்த்தகர்களை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

- எதிர்காலத்தில் ஒவ்வொரு 50 கி.மீ தொலைவுக்கும் ஒரு கடவுச்சீட்டு மையம் அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது என வெளியுறவுத் துறை இணையமைச்சர் எம்.ஜே.அக்பர் கூறினார்.

- மத்திய அமைச்சரவைச் செயலராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற மூத்த அரசு அதிகாரி நரேஷ் சந்திர சேக்ஸேனா (82) ஐஏஎஸ் மறைந்து விட்டார். இவர் வெவ்வேறு துறைகளில் முக்கியப் பதவிகளை வகித்தவர். ஒன்பது பிரதமர்களுடன் பணியாற்றியிருக்கிறார்.

- நாட்டின் 14வது குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நாளை நடக்கிறது. தேர்தல் முடிவு 20ம் தேதி வெளியாகும்.

- கனடா நாட்டில் வசிக்கும் இந்திய வம்சாவளி பெண்ணாண லில்லி சிங் யூனிசெ.்.ப் அமைப்பின் நல்லெண்ண தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- சுப்ரீம் கோர்ட்டில் தமிழ்நாடு தொடர்பான வழக்குகளில் மாநில அரசின் சார்பில் ஆஜராகி வாதாடுவதற்காக எம்.யோகேஷ் கன்னா, கே.வி.விஜயகுமார், டிஆர்பி. சிவகுமார் ஆகிய 3 பேர் அரசு வக்கீலாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## ஜூலை 17

- அடுத்தடுத்த மிகப் பெரிய வெற்றிகளை கண்டு வரும் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ). இந்த ஆண்டு மேலும் 2 செயற்கை கோள்களை ஏவ ஆயத்தமாகி வருகிறது.

- பிளாஸ்டிக் குப்பைகள் இல்லாத தெருக்களாக திகழும் மயிலாப்பூர்

- ஆப்டிகல்ஸ் கடைகளுக்கான விதி முறைகளை வரையறை செய்து அவற்றை முறைப்படுத்த அதிகாரிகளுக்கு மத்திய சுகாதார அமைச்சர் ஜே.பி.நட்டா உத்தரவிட்டுள்ளார்.

- தில்லி உயிரியல் பூங்காவில் உள்ள பெண் சிம்பன்ஸி ஒன்று தனது 56 வது பிறந்த நாளை விரைவில் கொண்டாடவுள்ளது. பூங்காவில் உள்ள விலங்குகளில் மிகவும் வயதான விலங்கு என்பதால் இந்த சிம்பன்ஸியின் பிறந்த நாளை விமரிசையாக கொண்டாட பூங்கா நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

- ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம் சார்பில் கோவை - இலங்கை தலைநகர் கொழும்பு இடையே வாரத்திற்கு நான்கு நாள் விமான சேவை நேற்று தொடங்கியது.

- ஜுலை மாத இறுதிக்குள் அனைத்து அஞ்சலகங்களிலும் ஆதார் திருத்தம் மேற்கொள்ளும் வசதி செய்யப்பட உள்ளது. அது போல் புதிய ஆதார் அட்டை பெறுவதற்கும் அங்கு விண்ணப்பிக்கலாம் என அஞ்சல்துறை அறிவித்துள்ளது.

- மேற்கு வங்க மாநிலம் டார்ஜீலிங் மலைப்பகுதியில் வசிக்கும் கோரக்கா சமூகத்தினர் தங்களுக்கு தனிமாநிலம் தரக் கோரி 32 வது நாளாக ஓயாத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். எங்கள் கோரிக்கை வெற்றி பெறும் வரை நாங்கள் போராட்டத்தை கைவிடமாட்டோம் என்று ஜிஜேஎம் கட்சித் தலைவர் விமல் குருக் கூறியுள்ளார்.

- இந்தியாவின் 14 வது ஜனாதிபதி தேர்தல் ஓட்டுபதிவு (17-07-17) இன்று துவங்கியது.

- செயல்படாத 245 வருமான வரித்துறை கமிஷனர்களின் இடமாற்றம் அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஜுலை -18**

- குடியரசுத் தலைவர் தேர்தலில் நாடு முழுவதும் 99 சதவீத வாக்குகள் பதிவானதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. வாக்கு பதிவின் முடிவுகள் நாளை மறுதினம் வெளியாகிறது என்று தேர்தல் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

- வங்க கடலை அதிர வைத்த இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் கூட்டு கடற்பயிற்சி நேற்று நிறைவு பெற்றது.

- கிரானைட் முறைகேடு விசாரணை வழக்கில் பங்கெடுத்த ஓய்வுபெற்ற தாசில்தாருக்கு எட்டு மாதங்களுக்கு சம்பளம் வழங்கவில்லை என்று உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு.

- கார்கில் போர் வெற்றி தினத்தின் நினைவினையொட்டி 1100 கி.மீ தூர இமயமலை சைக்கிள் பயணம் அனுசரிக்கப்பட்டது.

- கோவாவில் சமூக ஆர்வலருக்கு எதிராக பதிவான உரிமை மீறல் புகார்.

- இந்தியாவின் முன்னாள் குடியரசு தலைவர் ஏ.பி.ஜே அப்துல்கலாம் அவர்களின் நினைவகத்தை ஜுலை 27ம் தேதி பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைக்கிறார்.

- அரசு சட்டக் கல்லூரிகளில் இந்த ஆண்டு முதல் தமிழ் வழியில் சட்டப்படிப்புகள் தொடங்கப்படவுள்ளன. இதனால் கிராமப்புற மாணவர்கள் சட்டம் படிக்க நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

- பணக்காரர்களிடமிருந்து திருடி ஏழைக்களுக்கு உதவும் "ராபின்ஹுட் ஸ்டைல் திருடன்" டெல்லி போலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

- தில்லியில் - மலைப் போல் குவியும் குப்பைகள் : அறிக்கை கேட்கிறது பசுமைத் தீர்ப்பாயம்.

- தில்லியில் மலேரியா காய்ச்சல் - 200 க்கும் மேற்ப்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**ஜுலை – 19**

- இந்திய மருத்துவ கவுன்சில் செயல்பாட்டை கண்காணிப்பதற்காக அமைக்கப்பட்ட மேற்பார்வைக் குழுவை மாற்றி அமைக்க மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

- குடியரசுத் துணைத் தலைவர் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வெங்கய்யா நாயுடு தனது அமைச்சர் பதவியை நேற்று ராஜிநாமா செய்தார். அவர் வகித்து வந்த தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை ஜவுளித் துறை அமைச்சராக உள்ள ஸ்மிருதி இராணியிடமும், நகர்ப்புற மேம்பாட்டுத் துறை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சராப உள்ள நரேந்திர சிங் தோமரிடமும் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

- புதிய 20 ரூபாய் நோட்டுகள் விரைவில் வெளியிடப்படும் என ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது. புழக்கத்தில் உள்ள பழைய 20 ரூபாய் நோட்டுக்களும் செல்லுபடியாகும் என ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

- நாகலாந்தின் புதிய முதல்வராக ஜெலியாங் பதவியேற்றுக் கொண்டார். இவர் 12வது முதல்வர் ஆவார்.

- கடந்த 2014 ஆம் ஆண்டு பிரதமராக பொறுப்பேற்ற நரேந்திர மோடி மாதத்தின் கடைசி ஞாயிற்றுக் கிழமைகளில் மன்கிபாத் நிகழ்ச்சியின் மூலம் நாட்டு மக்களுடன் உரையாற்றி வருகிறார். இந்த நிகழ்ச்சியால் அகில இந்திய ரேடியோவிற்கு ரூ 10 கோடி வருமானம் கிடைத்துள்ளது.

- கேரளாவில் உள்ள சபரிமலை கோவிலுக்கு பக்தர்கள் செல்ல வசதியாக கோட்டயத்தில் விமான நிலையம் அமைக்க கேரள அரசு முடிவு செய்துள்ளது.

- ஒடிஸா மாநிலத்தின் மிக நீளமான பாலத்தை முதல்வா் நவீன் பட்நாயக் திறந்து வைத்தாா். சுமாா் 2.81 கிமீ நீளமுள்ள இந்த பாலம் தலைநகா் புவனேசுவரத்தை கட்டாக் நகருடன் இணைக்கிறது. தலைநகரை கட்டாக்குடன் இணைக்கும் 2வது பாலம் இது. நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் என இப்பாலத்துக்குப் பெயா் சூட்டப்பட்டுள்ளது. சுமாா் ரூ 114 கோடியில் 6 ஆண்டுகளில் இப்பாலம் கட்டி முடிக்கப்பட்டது.

**ஜூலை - 20**

- பள்ளி மாணவ மாணவிகளின் புத்தகச் சுமையைக் குறைக்கும் விதமாக, இனி 5ம் வகுப்பு வரை வீட்டுப்பாடம் கிடையாது என்று தெலுங்கானா அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

- மது விற்பனை மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு சமூக நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன .மேலும் மது விற்பனைக்கு தடைவிதிக்கப்பட்டால் சட்ட விரோதமாக கள்ளச்சாராயம் விற்பனை செய்யப்படும். எனவே மது விற்பனைக்குத் தடை விதிப்பது சாத்தியமல்ல என்று உத்தரப் பிரதேச அரசு தெரிவித்துள்ளது.

- பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு மானிய விலையில் 4.820 மெட்ரிக் டன் பருப்பு வகைகளை விநியோகிக்க ஹரியானா அரசு முடிவு செய்துள்ளது. மாநில பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அவற்றை வழங்கவும் திட்டமிட்டுள்ளதாகவும் அம்மாநில உணவு மற்றும் நுகா்வோா் விவகாரத் துறை தெரிவித்துள்ளது.

- குடியரசுத் தலைவா் பதவிக்கான தோ்தல் கடந்த நாட்களில் நடைபெற்றது. இன்று(20.07.2017) வாக்குகள் எண்ணும் பணி நடைபெறுகின்றன. இந்தியாவின் புதிய குடியரசுத் தலைவா் யாா் என்ற செய்தி இன்று மாலை தெரியவரும் என்று எதிா்பாா்க்கப்படுகிறது.

- நாகலாந்து முதல்வராக டி.ஆா்.ஜீலியாங் மீண்டும் பதவியேற்றுள்ளாா்.

- திறன்களை வளா்க்க விளையாட்டு போட்டிகளை நடத்த வேண்டும் என்று மத்திய நிதியமைச்சா் அருண் ஜெட்லி வலியுறுத்தி உள்ளாா்.

- ஓய்வு பெற்ற பத்திரிக்கையாளா்கள் அனைவருக்கும் மாதம் ரூ.15000 ஓய்வூதியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக நிறுவனா் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளாா்.

- புதுவை மாநிலத்தின் ஒரே பறவைகள் சரணாலயமாக திகழும் ஊசுட்டேரியில் விஷம் வைத்து பறவைகளை வேட்டையாடுவதால் இனப் பெருக்கத்திற்காக இங்கு வரும் பறவைகளின் எண்ணிக்கை குறைகிறது என்று இயற்கை ஆா்வலா்கள் கூறுகின்றனா்.

## ஜுலை - 21

- நாட்டின் 14-ஆவது குடியரசுத் தலைவராக தேசிய ஜனநாயகக் கூட்டணயின் வேட்பாளரான ராம்நாத் கோவிந்த் தேர்ந்தெடுக்கப் பட்டார். இவர் வருகிற 25ம் தேதி பதவியேற்கவுள்ளார்.

- புதுடெல்லியில் ரயில்வே துறை சார்பாக வழங்கப்படும் உணவு மனிதர்கள் சாப்பிடுவதற்கு ஏற்றதல்ல அவை அசுத்தமானவை என சிஏஜி அதிர்ச்சியான தகவலை வெளியிட்டுள்ளது.

- சாலைகளால் அமைக்கப்பட்டிருக்கும் வேகத் தடைகளால் இந்தியாவில் தினமும் 9 பேர் உயிரிழந்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- நாடு முழுவதும் பள்ளி மாணவர்களின் புத்தகச் சுமையைக் குறைக்கும் வகையில் விரைவில் டிஜிட்டல் கல்வி திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- தனிமாநிலமாக்கக் கோரி ஆர்ப்பாட்டம் நடைபெற்றுவரும் டார்ஜீலிங்கில் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ள இணையச் சேவையை மீண்டும் செயல்பட செய்ய வேண்டும் என்று கோரக்கா ஜனமுக்தி மோர்ச்சா (ஜிஜேஎம்)கட்சியினர் வலியுறுத்தினர்.

- தமிழகம் உள்ளிட்ட சில மாநிலங்களில் 2000 ரூபாய்கள் நோட்டுகள் புழக்கம் குறைந்து, வங்கி மற்றும் ஏடிஎம்களில் தட்டுபாடு ஏற்பட்டுள்ள நிலையில் விரைவில் 200 ரூபாய்கள் நோட்டுகள் அறிமுகம் செய்யப்படும் என ரிசர்வ் வங்கி அதிகாரி தெரிவித்துள்ளார்.

- பஞ்சாப் மாநிலத்தில் ஆன்லைன் பேங்கிங் மூலம் தொழிலதிபர் ஒருவரின் வங்கி கணக்கில் இருந்து ரூ.70 லட்சத்தை திருடிய ஹேக்கர்கள் அவற்றை தங்கள் கணக்கிற்கு மாற்றி அமைத்த செய்தி அங்குள்ள மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

- முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாமின் 2 ஆம் ஆண்டு நினைவு தினத்தை அனுசரிக்கும் வகையில் ராமநாதபுரம் நேஷனல் அகாடெமி பள்ளிகள் சார்பில் ஒரு லட்சம் விதைப் பந்துகள் தயாரிக்கும் பணியில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## ஜுலை - 22

- நாடு முழுதும் அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பணியாற்றும் சுமார் 8.5 லட்சம் ஆசிரியர்கள் வரும் 2019 ம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் குறைந்தபட்ச கல்வித் தகுதியைப் பெற வேண்டும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- உலக சுகாதார நிறுவனத்தின் கணக்குப்படி இந்தியாவில் ஆயிரம் பேருக்கு ஒரு மருத்துவர் கூட இல்லை, மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று மக்களவையில் சுகாரத்துத் துறை இணை அமைச்சர் தெரிவித்துள்ளர்.

- பொது மக்களின் அந்தரங்க தகவல்கள், வாழ்வுரிமையின் அங்கம் ஆகியவை சமூக வலைதளங்களான வாட்ஸ்அப் மற்றும் பேஸ்புக் போன்றவற்றில் பகிர்ந்து கொள்ள முடியாது என்று மத்திய அரசு தகவல் தெரிவித்துள்ளது.

- மூத்த குடிமக்களுகக்கான ஓய்வூதியத் திட்டம் - இத்திட்டத்தின் கீழ் முதலீடு செய்யும் மூத்த குடிமக்களுக்கு ஆண்டுக்கு 8 சதவீதம் வட்டி என்ற அடிப்படையில் 10 ஆண்டுகளுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படும்.

- இரயில்களில் விற்பனை செய்யப்படும் உணவுகள், கரப்பான் மற்றும் எலிகள் சுற்றித்திரியும் சுகாதார சீர்கேடான இடத்தில் தயாரிக்கப்படுவதாகவும் தரகுறைவான இத்தகைய உணவுகள் மனிதர்கள் உண்ணுவதற்கு உகந்தல்ல என்று தலைமைக் கணக்கு தணிக்கை அலுவலகம் (சிஏஜி) குற்றஞ்சாட்டுகிறது.

- நாட்டின் 14 வது குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ராம்நாத் கோவிந்தின் புதிய செயலாளராக சஞ்சய் கோத்தாரி நியமிக்கப்பட்டுள்ளார.

- தமிழகத்தில் மின்னணு குடும்ப அட்டைகள் கிடைக்காதவர்கள் ரேஷன் கடைகளில் குடும்ப அட்டை நகலுடன்,புகைப்படத்தை வழங்கலாம் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

- தமிழகத்தில் சென்னை மாவட்டத்தில் 4 குடும்பநலக் கோர்ட் - தலைமை நீதிபதி திறந்து வைத்தார்.

**ஜூலை - 23**

- 5 மற்றும் 8 வகுப்புகளில் கட்டாய தேர்ச்சி அளிக்கும் முறை மாநில அரசுகளின் ஒத்துழைப்புடன் விரைவில் ரத்து செய்யப்படும் என மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர் கூறினார்.

- நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவருமான சிவாஜிராவ் பாட்டீல் (92) ஜூலை 22ல் காலமானார். கடந்த 1992 முதல் 1998 வரை மாநிலங்களவை உறுப்பினராகப் பொறுப்பு வகித்த சிவாஜிராவ் பாட்டீல் மகாராஷ்டிர மாநில சட்டப் பேரவை உறுப்பினராகவும், மாநில அமைச்சராகவும் பொறுப்பு வகித்துள்ளார்.

- நாகலாந்து மாநிலத்தின் புதிய முதல்வராகப் பதவியேற்ற டி.ஆர்.ஜீலியாங் தனது அமைச்சரவையை ஜூலை 22ல் விரிவாக்கம் செய்தார். அதன்படி, புதிதாக 10 கேபினட் அமைச்சர்கள் பதவியேற்றுள்ளனர்.

- மத்திய அரசுத் துறைகளில் உயர் பொறுப்புகள் வகித்து வரும் ஐஏஎஸ் அதிகாரிகள் 35 பேருக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை மத்திய பணியாளர் நலத்துறை அமைச்சம் ஜூலை 22ல் பிறப்பித்தது.

➢ உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட போபர்ஸ் ரக 'தனுஷ்' பீரங்கிகளுக்கு ஜெர்மனியில் தயாரிக்கப்பட்டதாக ஏமாற்றி சீனாவிலிருந்து வாங்கிய உதிரி பாகங்களை சப்ளை செய்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது குறித்து சிபிஐ அதிகாரிகள் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

➢ எதிரி நாடுகளுடன் போர் மூண்டால் இந்திய ராணுவத்தின் வெடிபொருட்கள் பத்தே நாட்களில் காலியாகி விடும் என்று தலைமை கணக்குத் தணிக்கை அதிகாரி (சிஏஜி) அறிக்கையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

➢ நாடாளுமன்ற கூட்டத்தொடர்களின் போது எம்.பிக்கள் குறைந்தபட்சம் 100 நாள்களாவது பங்கேற்பதை உறுதிசெய்ய சட்டம் இயற்றப்பட வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி தெரிவித்தார்.

**ஜூலை - 24**

➢ நாடு முழுவதும் அறிவியல் ஆய்வுகளுக்கு சர்வதேச தரத்திலான கணினிகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக உள்நாட்டுத் தொழில்நுட்பத்திலான "சூப்பர் கம்ப்யூட்டரை" ரூ.4500 கோடி செலவில் இந்தியாவிலே தயாரிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

➢ பிரிவுசாரா விழாவில் பேசிய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி - ஒரு தாழ்மையான ஊழியராக மக்களுக்கு சேவையாற்றிய பரிபூரணமான உணர்வுடனும் மகிழ்ச்சியுடனும் "வானவில் நினைவுகளுடன் விடை பெறுகிறேன்" என்று உருக்கமாக கூறினார்.

➢ புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ராம்நாத் கோவிந்த் நாளை பதவியேற்க உள்ளார்.

➢ நாட்டிலேயே முதன்முறையாக மேற்கு வங்க மாநிலத்தில் லோக் அதாலத் நீதிபதியாக, ஜோயிதா மோண்டல்(திருநங்கை) நியமிக்கப்பட்டுள்ளார்.

➢ மருந்துகளின் பலன் பற்றி மிகைப்படுத்தப்பட்ட விளம்பரங்களை ஒளிபரப்பும் சேனல்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

➢ மத்திய அரசு அறிமுகம் செய்த "புகையிலைப் பழக்கத்தைக் கைவிடும் திட்டம்" முதலாம் ஆண்டில் சுமார் 20 லட்சத்துக்கும் மேற்பட்டோர் தங்கள் பெயர்களைப் பதிவு செய்திருப்பதாக உலக சுகாதார அமைப்பு (டபிள்யூஹெச்ஓ) தெரிவித்துள்ளது.

➢ புகழ்பெற்ற விஞ்ஞானியும் இஸ்ரோவின் முன்னாள் சேர்மனுமான யூ.ஆர்.ராவ் இன்று காலமானார். இந்தியாவின் முதல் செயற்கைகோளான ஆர்யப்பட்டா ஏவுதலில் முக்கிய பங்கு வகித்தார். 2017ம் ஆண்டு இந்தியாவின் மிகப் பெரிய விருதான பத்ம விபூஷன் விருது வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

➢ பணியிட மாறுதலுக்காக அரசியல் செல்வாக்கை நாடக்கூடாது என வருமான வரி இலகாவினருக்கு, நேரடி வரிகள் வாரியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

- ‘நிதி ஆயோக்’ பரிந்துரையை ஏற்று மத்திய அரசு துறைகளில் தனியார் வல்லுனர்களை நியமனம் செய்ய மோடி அரசு முடிவு எடுத்துள்ளது.

- அடுத்த ஆண்டு முதல் நீட் தேர்வுக்கான கேள்வித்தாள் அனைத்து மொழிகளிலும் ஒரே மாதிரியாக இருக்கும் என்று மத்திய மனிதவள மேம்பாட்டு துறை மந்திரி பிரகாஷ் ஜவடேகர் கூறியுள்ளார்.

- ராணுவ பீரங்கிகள் உள்ளிட்ட முக்கிய ஆயுதங்களுக்கான உதிரி பாகங்களை உள்நாட்டிலேயே தயாரிக்க இந்திய இராணுவம் முடிவு செய்துள்ளது.

**ஜுலை - 25**

- மும்பை சிறைகளில் நிலவும் நெரிசலை குறைக்க 7 ஆயிரம் விசாரணை கைதிகளை வெளியில் விட மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

- பாஸ்போர்ட் பெற இனி பிறப்பு சான்றிதழ் கட்டாயம் இல்லை என பாராளுமன்றத்தில் மத்திய மந்திரி வி.கே.சிங் கூறியுள்ளார்.

- பண மதிப்பு நீக்கத்தை ஒட்டி டிஜிட்டல் பணப்பரிமாற்றத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்ட செயலியை “பீம் செயலி” இதுவரை 16 மில்லியன் பேர் பதிவிறக்கம் செய்துள்ளனர் என பணபரிமாற்ற வாரியம் தெரிவித்துள்ளது.

- மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்களின் மெழுகு சிலை ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் உருவாக்கப்பட்டு ஜெய்ப்பூர் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்தது, தற்போது அச்சிலை அப்துல்கலாம் அவர்களின் குடும்பத்தாரின் விருப்பத்திற்கிணங்க இராமேஸ்வரத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என அருங்காட்சியக நிறுவனர் கூறியுள்ளார்.

- கங்கையை சுத்தப்படுத்தும் பணியை செய்யும் “நவாமி கங்கே திட்டத்தை” விரைவு படுத்தும் நோக்கத்தில் புதிய சட்டம் தயாராகி இருப்பதாக அமைச்சர் உமாபாரதி நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

- தலைநகர் டெல்லியில் டெங்கு, சிக்கன்குனியாவைவிட மலேரியாவின் தாக்கம் சற்று அதிகமாக உள்ளதாகவும் இந்நோயால் இதுவரை 230 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

- மத்திய அரசின் பெண் ஊழியர்கள் பணியிடத்தில் நேரக் கூடிய பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பாக புகார் அளிக்க “ஷீ– பாக்ஸ்” வலைதளத்தை மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சகம் தொடங்கியுள்ளது.

- அரபு நாடுகளுக்குப் வேலைத் தேடி போகும் இந்தியர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக அந்நாடுகளின் ஒருங்கிணைப்புக் கழகம் தெரிவித்துள்ளது.

- தமிழக பள்ளி, கல்லூரி, அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் கட்டாயமாக வந்தே மாதரம் என்ற பாடலைப் பாட வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

**ஜூலை – 26**

- ஐபிஎஸ் அதிகாரிகளின் பதவி உயர்வின்போது அவர்கள் உடல் தகுதியையும் கட்டாயமாக்கும் திட்டத்தை மத்திய அரசு பரிசீலித்து வருகிறது. இதனால் ஐபிஎஸ் அதிகாரிகளின் பதவி உயர்வின் போது அவர்கள் உடல் தகுதியையும் மத்திய அரசு கவனிக்கும் என்று மக்களவையில் உள்துறை இணையமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

- பள்ளிப் பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ள ரவீந்திரநாத்தாகூரின் படைப்புகள் எதுவும் நீக்கப்படமாட்டாது என மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர் கூறியுள்ளார்.

- தமிழகத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராமேசுவரத்தில் முன்னாள் ஜனாதிபதி ஏபிஜே அப்துல்கலாம் அவர்களின் நினைவாக ரூ.15 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள மணிமண்டபத்தை பிரதமர் மோடி நாளை(வியாழக்கிழமை) திறந்து வைக்கின்றார்.

- சிறந்த விஞ்ஞானியும், பல்கலைக்கழக மானியக் குழுவின் முன்னாள் தலைவருமான யஷ் பால்(90) உடல்நலக் குறைவால் திங்கட்கிழமை(24-07-17) காலமானர்.

- புது டெல்லியில் செயல்படாத ஐஏஎஸ் மற்றும் ஐபிஎஸ் போன்ற உயர் பதவிகளில் பணியாற்றும் அதிகாரிகள் மீது மத்தியப் பணியாளர் நலத்துறை அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்துள்ளது.

- தூர்தர்ஷன் லோகோவை மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. பழைய லோகோவுக்கு பதிலாக, புதிய சின்னத்தை வடிவமைக்கும் போட்டி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சிறந்த வடிவமைப்பாளருக்கு ரூ.1 லட்சம் பரிசு வழங்கப்படும், புதிய சின்னங்களைச் சமர்ப்பிக்க ஆகஸ்ட் 13-ம் தேதி கடைசி நாள் ஆகும்.

- நக்லஸ் தீவிரவாதிகள் ஆதிக்கம் நிறைந்த பகுதிகளில் கடந்த 20 ஆண்டுகளில் 2.753 பாதுகாப்புப் படை வீரர்கள் கொல்லப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை இணையமைச்சர் ஹன்ஸ்ராஜ் ஆஹிர் கூறியுள்ளார்.

- சட்ட விரோத பணபரிமாற்றத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பாகிஸ்தான் தீவிரவாதிக்கு 7 ஆண்டுகள் ஜெயில் தண்டனை விதித்து கர்நாடக கோர்ட்டு தீர்ப்பளித்துள்ளது.

- கார்கில் போரில் உயிர் நீத்த வீரர்களின் உயிர் தியாகத்தை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 26ம் தேதி கார்கில் போர் வெற்றி தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

## ஜூலை – 27

- பீகார் மாநில முதல் மந்திரியாக நிதிஷ் குமார் ஆறாவது முறையாக பதவியேற்றார்.

- முன்னாள் குடியரசு தலைவர் ஏபிஜே அப்துல்கலாம் அவர்களின் இரண்டாவது நினைவு தினமான(27.07.17) இன்று, ராமேசுவரத்தில் கட்டப்பட்டுள்ள அவரது நினைவு மணிமண்டபத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்துவைத்தார்.

- ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் தங்களது வீரர்கள் பயணிக்கும் வாகனங்களுக்கு உலோகத் தகடுகள், மரம் மற்றும் கான்கிரீட் பலகை மூலம் பாதுகாப்பு கவசம் அமைக்கும் முயற்சியை மத்திய ரிசர்வ் போலீஸ் படை (சிஆர்பிஎ.ஃ.ப்) மேற்கொண்டுள்ளது.

- இனம், மதம், மொழி ஆகியவற்றின் அடிப்படையில் நடத்தப்படும் வன்முறை அல்லது தாக்குதல் போன்றவற்றைக் கையாள்வதற்கு இந்திய தண்டனைச் சட்டத்தில் (ஐபிசி) புதிய ஷரத்துக்களை சேர்ப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- திருமணத்தைப் பதிவு செய்வதை கட்டாயமாக்குவதற்கு, மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

- மாற்றுத் திறனாளி அமைப்பினர் நடத்திய போராட்டத்தின் விளைவாக மனநலம் குன்றிய இளைஞருக்கு உதவித் தொகை வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

- செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தை திருவாரூர் மத்தியப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு செல்ல இருப்பதாக செய்திகள் வெளிவந்தன. தமிழ்மொழியின் மேன்மையை ஆராய்ச்சி மூலம் உலகுக்குத் தெரிவிக்கும் இந்த நிறுவனத்தை சென்னையில் இருந்து மாற்றம் செய்யக் கூடாது என்று தமிழக முதலமைச்சர் கூறியுள்ளார்.

- அண்ணா பல்கலைக்கழகம் 'அரியர்' முறையை கைவிட்டு பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளுக்கு (விருப்பப் பாடத் தேர்வு முறை) புதிய பாடத் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

## ஜூலை - 28

- ஒவ்வொரு ஆண்டும் 5 லட்சம் சாலை விபத்துகளில் சுமார் ஒன்றரை லட்சம் இந்தியர்கள் பலியாவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- ஜல்லிக்கட்டுக்கு அவசர சட்டம் நிறைவேற்றியது போல நீட் தேர்வுக்கும் அவசரச் சட்டம் இயற்ற மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

- கீழடியில் நடைபெற்ற அகழ்வராய்ச்சியில் கிடைத்த பொருட்கள் 2200 ஆண்டுகள் பழைமையானது என மத்திய சுற்றுலா மற்றும் கலாச்சாரத்துறை இணை அமைச்சர் மகேஷ் சர்மா தகவல் தெரிவித்துள்ளார்.

- ஆதார் தொடர்பான விவகாரங்களை விசாரிக்க அமைக்கப்பட்ட 9 நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்றத்தில் தனிநபர் உரிமை(பிரைவசி) என்பது பன்முகத்தன்மை வாய்ந்ததால் அதனை அடிப்படை உரிமையாகக் கருத முடியாது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- பெரம்பலூர் நகராட்சி சார்பில் நடத்தப்படும் அம்மா உணவகங்களுக்கு மாதந்தோறும் 60 காஸ் சிலிண்டர்கள் தேவைப்படுவதால் செலவை குறைக்கும் வகையில் நவீன இந்திரங்கள் மூலம் மனிதக் கழிவுகளிலிருந்து தயாரிக்கப்படும் "பயோ காஸ்" தயாரிக்கும் திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

- ஒடிசா மாநிலத்தில் உள்ள வீலர் தீவுக்கு முன்னாள் குடியரசு தலைவர் ஏபிஜே. அப்துல்கலாம் அவர்களின் பெயரை அம்மாநில அரசு அதிகாரபூர்வமாக சூட்டியுள்ளது.

- கர்நாடக முன்னாள் முதல்வரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான தரம் சிங் மாரப்படைப்பால் மரணம் அடைந்தார்.

- தமிழகத்தில் அம்மா உணவகத்தைப் போல் ஆந்திர மாநிலத்தில் அண்ணா கேண்டீனை அமைச்சர் நாராயணா தொடங்கி வைத்தார்.

**ஜூலை - 29**

- **விமானப்படை, கடற்படை, தரைப்படைகளின் தளபதிகளுக்கு முக்கியமான 'சிவில்' பணிகளை குறிப்பிட்ட காலத்துக்குள் விரைந்து முடிக்கும் வகையில் ஆண்டுக்கு தலா ரூ.800 கோடி வரை செலவிட அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதாக ராணுவ அமைச்சகம் தெரிவித்துள்ளது.**

- வரதட்சணை புகாருக்கு உடனே கைது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

- கர்நாடகாவில் இயங்கி வரும் மெட்ரோ ரயில் நிலையங்களில் இருக்கும் பெயர்ப் பலகைகளில் ஹிந்தி வார்த்தைகளை நீக்கி விட வேண்டும் என்று மத்திய அரசிடம் அம்மாநில முதல்வர் சித்தாராமையா கூறியுள்ளார்.

- இந்திய நதிகளின் வெள்ளப் பெருக்கை அறிவதற்காக அமைக்கப்பட்டுள்ள 375 தொலைத் தொடர்பு நிலையங்களில் 222 நிலையங்கள் இயங்கவில்லை என மத்திய கணக்கு தணிக்கை குழு(சிஏஜி) கூறியுள்ளது.

- **உலகளவில், தமிழாய்வுக்கு சிறந்து விளங்கும் நூலகம் - மதுரை பாண்டியன் நூலகம்**

- மலைப்பிரதேசங்களுக்கு சுற்றுலா செல்லும் பயணிகளுக்கு உதவும் வகையில் ஐஆர்சிடிசி சார்பில் இயக்கப்படும் இரயில் பெட்டிகளின் மேற்க்கூரை கண்ணாடியால் தயாரிக்கப்பட பெரம்பூர் ஐசிஎப்.க்கு இரயில்வே வாரியம் உத்தரவிட்டுள்ளது.

- 2015 மற்றும் 2016ம் ஆண்டுகளில் - மாற்று திறனாளிகள் நலனுக்காகச் சிறப்பாக பணிபுரிந்த திண்டுக்கல் ஆட்சியர் ந.வெங்கடாசலம், கிருஷ்ணகிரி ஆட்சியர் த.பொ.ராஜேஷ், மதுரை ஆட்சியர் இல.சுப்பிரமணியன், சிவகங்கை மாவட்ட ஆட்சியர் எஸ் மலர்விழி ஆகியோர்க்கு தமிழக அரசு சார்பில் "மாநில விருது" வழங்கப்பட்டது.

- திருநெல்வேலி அரசு அருங்காட்சியகத்தில் மாணவர்,மாணவிகளை ஊக்கப்படுத்தும் விதமாக பழங்கால பொருள்கள் மற்றும் பணத்தாள்கள் குறித்த கண்காட்சி தொடங்கியது.

**ஜூலை – 30**

- இந்திய உயர்கல்வி தொடர்பான 2 நாள் தேசிய கருத்தரங்கு தில்லியில் சனிக்கிழமை தொடங்கியது. கல்லூரி ஆசிரியர்களின் பதவி உயர்வுக்கு, ஆராய்ச்சியை இனி கட்டாயமாக்குவதில்லை என மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- பிகாரில் 2 நாட்களுக்கு முன்பு பதவியேற்ற முதல்வர் நிதீஷ் குமார் அமைச்சரவை இன்று விரிவாக்கம் செய்யப்பட்டது. ஐக்கிய ஜனதா தளத்தைச் சேர்ந்த 14 பேர் பாஜக வைச் சேர்ந்த 12 பேரும், புதிய அமைச்சர்களாக பதவியேற்றனர்.

- இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் கேப்டன் மிதாலி ராஜுக்கு ரூ 1 கோடி பரிசுத் தொகையும், ஹைதராபாத்தில் வீட்டு மனைப்பட்டாவும் வழங்கப்படும் என தெலங்கானா முதல்வர் கே.சந்திர சேகர ராவ் அறிவித்துள்ளார்.

- நாடு முழுவதும் உள்ள சாலைகள் அனைத்தும் சிமெண்ட் கான்க்ரீட் சாலைகளாக மாற்றப்படும் என மத்திய போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரி அறிவித்தார்.

- சரக்கு – சேவை வரிவிதிப்பு நடைமுறையின் கீழ் புதிதாக பதிவு செய்ய 12 லட்சத்துக்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் விண்ணப்பித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. அவற்றில் 10 லட்சம் விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ளவற்றை பரிசீலித்து வருவதாகவும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

- உள்நாட்டு தயாரிப்பான ஆகாஷ் ஏவுகணை அடிப்படை சோதனைகளில் தோல்வி அடைந்திருப்பதை சிஏஜி அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. இந்தியா – சீனா எல்லையில் ஏற்பட்டிருக்கும் பதற்றமான சூழ்நிலையில், சிஏஜயின் இந்த அறிக்கை அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

**ஜூலை - 31**

- புதுடெல்லி முன்சிபல் கவுன்சில் - ஒரே நாளில் 56 ஆயிரம் மரக்கன்றுகள் நட்டியது.

- நாடு முழுவதும் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட நகரங்களில், மாநில அரசுகள் மூலம் உலகத் தரத்திலான பேருந்து நிலையங்களை அமைக்கவும் அத்திட்டத்திற்கு ரூ.1,000 கோடி நிதியை அளிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக மத்திய சாலைப் போக்குவரத்து துறை அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

- மத்திய மனித வள மேம்பாட்டுத்துறை மூலம் நாட்டின் சிறந்த பொறியியல் கல்வி நிலையங்களுக்கான தரவரிசை பட்டியல் இன்று(31.07.2017) வெளியிடப்பட்டது, இதில் சென்னை ஐஐடி முதலிடத்தையும், கிண்டி அண்ணா பல்கலைக்கழகம் 6வது இடத்தையும், கோவை வேளாண் பல்கலைக்கழகம் 20வது இடத்தை பிடித்துள்ளது.

- கல்லூரி ஆசிரியர்களின் பதவி உயர்வுக்கு, ஆராய்ச்சியை இனிக் கட்டாயமாக்குவதில்லை என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

- பிரதமரின் தேசிய திறன் மேம்பாடு திட்டத்தின் கீழ் பிளஸ்-2 முடித்தவர்களுக்கும், கல்லூரி படிப்பை பாதியில் விட்டவர்களுக்கும் ஒரு வேலை வாய்ப்பு திட்டத்தை அளிக்க மத்திய அரசு திட்மிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் “இயற்கை வழிகாட்டி” என்னும் பயிற்சி அளிக்கப் பட உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- சென்னையை சேர்ந்த, கை கால்களை இழந்த மாற்றுத்திறனாளி இளைஞர் ஜனார்த்தனன் ஓவியம், வரைகலை, எடிட்டங் என பல்வேறு துறைகளில் வெற்றி பெற்று நூற்றுக்கும் அதிகமான விருதுகளை பெற்று சாதனைப் படைத்துள்ளார்.

- போபர்ஸ் பீரங்கி ஊழல் வழக்கு தொடர்பாக காணாமல் போன அனைத்து கோப்புகளையும் கண்டுபிடித்து தாக்கல் செய்யுமாறு பாதுகாப்பு அமைச்சகத்துக்கு பொது கணக்குக் குழு(பிஏசி) உத்தரவிட்டுள்ளது.

- “எய்ம்ஸ் இந்தியா” அமைப்பின் மூலம் தமிழகத்தில் வறட்சி மற்றும் விவசாயக்கடனால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளைக் காக்கவும், நீர்நிலைகளை மீட்டு உதவிடும் வகையில் அமெரிக்க வாழ் தமிழர்களிடம் விழிப்புணர்வு நடத்தப்பட்டு நிதி திரட்டப்படுகிறது.

- தமிழகத்தின் சுற்றுலாத் தளமான இராமமேஸ்வரத்தில் 53 ஆண்டுகளுக்குப் பிறகு, முகுந்தராயர் சத்திரம் முதல் தனுஷ்கோடி(24.கி.மீ) வரை புதிய சாலை அமைக்கப்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்துள்ளது.

## உலக செய்திகள்:

### ஜூலை – 1

- அமெரிக்க வாழ் இந்தியர்களுக்கு சிறந்த குடியேற்றவாசி விருது வழங்கப்பட உள்ளது. அடோப் தலைவர் சாந்தனு நாராயண், அமெரிக்க சர்ஜன் ஜென்ரல் விவேக் மூர்த்தி ஆகியோர் இந்த விருதுக்கு தேர்வு பெற்றுள்ளனர். அமெரிக்க சுதந்திர தினமான ஜூலை 4 அன்று இந்த விருது வழங்கப்பட உள்ளது.

- தெற்கு பிரிட்டனின் ரீடிங் டௌன் நகரைச் சேர்ந்தவர் அர்னவ் சர்மா இவர் அறிவுக் கூர்மையைக் கண்டறிய ‘மென்ஸா’ தேர்வை எழுதினார். இத்தேர்வில் வெளிப்படும் நுண்ணறிவு எண் (ஐ.கியூ) மூலம் ஒருவரின் அறிவுத் திறனை எளிதாக அறிந்து கொள்ள முடியும். இந்நிலையில் அர்னவ் சர்மாவின் ஐ.கியூ -162 என கண்டறியப்பட்டது. மறைந்த விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், பிரபல இயற்பியல் மேதை ஸ்டீ.ஃபன் ஹாக்கிங் ஐ.கியூ -160 என்பது குறிப்பிடத்தக்கது.

- சிரியாவில் சரீன் விஷ வாயுவைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தியிருப்பது உண்மை தான் என ரசாயன ஆயுதங்கள் தடை கண்காணிப்பு உறுதிப்படுத்தி உள்ளது.

- தைவானுக்கு 1400 கோடி டாலர் மதிப்பிலான கப்பல் அழிப்பு ஏவுகணைகள், விமானக் கண்காணிப்பு ரேடார்கள் உள்ளிட்ட 7 வகை ராணுவ தளவாடங்கள் வழங்க அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

- கணினிகளின் செயல்பாட்டை முடக்கும் புதிய வகை ரான்சம்வேர் இணைய வைரஸ் உலகின் பல பாகங்களில் கடந்த சில நாட்களாக பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. உலகெங்கும் பொருளாதார பேரழிவை ஏற்படுத்துவதே புதிய ‘பெட்யா’ இணைய வைரஸைப் பரப்பியவர்களின் நோக்கம் என ஐரோப்பிய யூனியனின் இணைய பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

- ஆஸ்திரேலிய ராணுவத்தில் இணையதள பிரிவு ஒன்று புதிதாக தொடங்கப்பட்டுள்ளது. ஐ.எஸ். உள்ளிட்ட அன்னிய பயங்கரவாத அமைப்புகளை ஒடுக்குவதே இதன் நோக்கமாகும்.

- கனடாவில் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண அரசின் மீதான நம்பிக்கை இல்லா தீர்மானம் வெற்றி பெற்றது. இதனால் அங்கு ஆட்சியில் இருந்த அரசு கவிழ்ந்தது.

- ஜெர்மனியில் அடுத்த வாரம் ஜி-20 மாநாடு நடைபெற உள்ளது. அதில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், ரஷிய அதிபர் விளாதிமீர் புதினை முதல் முறையாக சந்தித்துப் பேசவுள்ளார்.

**ஜூலை - 2**

- அமெரிக்காவிற்கு இடம் பெயர்ந்து சென்று அந்த நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைத்த பிற நாட்டவர்களுக்கு அந்த நாட்டின் சுதந்திர தினத்தன்று “மாபெரும் இடம் பெயர்ந்தோர் விருது” வழங்கி சிறப்பிக்கஉள்ளனர். மொத்தம் 39 தேர்வு செய்யப்பட்டுள்ளனர் இதில் இரண்டு பேர் இந்திய வம்சாவழியினர் ஆவார்கள்.

- தெற்கு அமெரிக்கா நாடான சிலியில் உள்ள மருத்துவமனையில் மருத்துவர்கள் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டே ஆப்ரேஷன் செய்யும் வீடியோ காட்சி இணையத்தில் வெளியாயின. இக்காட்சி அங்குள்ள மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

- மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கல்லூரி வளாகத்தில் துப்பாக்கியை கைக்கொள்ளலாம். இதனால் கல்லூரி வளாகத்தில் ஏற்படும் துப்பாக்கி சூட்டை தடுக்கலாம் என்று அமெரிக்காவின் சிகாகோ மாநில அரசு தெரிவித்துள்ளது.

- உலக நாடுகளின் கடும் எதிர்ப்பை மீறி அணு ஆயுதம் தயாரித்து சோதனை மேற்கொள்ளும் வட கொரியா மீது காட்டிய பொறுமையை அமெரிக்கா இழந்துவிட்டது என்று அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் கூறியுள்ளார்.

- எல்லை தாண்டி மீன்பிடித்தால் தமிழக படகு உரிமையாளர்க்கு ரூ.20 இலட்சம் அபராதம் விதிக்கப்படலாம் என்று இலங்கை மீன்வளத்துறை மந்திரி தெரிவித்துள்ளார்.

- ஐ.நா அமைதி மேம்பாட்டு நிதியத்துக்கு இந்தியா மேலும் 5 இலட்சம் டாலர்(சுமார் 32 கோடி) நிதி வழங்கியுள்ளது.இத்தகைய பங்களிப்பு உலக நாடுகளில் அமைதியை நிலைநாட்டும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- சிக்கிம் மாநில எல்லையில் குவிக்கப்பட்டுள்ள இந்திய இராணுவத்தை திரும்ப பெறப்பட்ட பிறகே அந்நாட்டுடன் பேச்சவார்த்தை என்று சீனா அரசு தெரிவித்துள்ளது.

**ஜுலை – 3**

- அதி நவீன கார்டியன் ஆளில்லா விமானங்களை இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்ய அமெரிக்க அயலுறவுத் துறை உரிமம் வழங்கியுள்ளது.

- சுவிஸ் வங்கியில் பணம் வைத்திருப்போர் பற்றிய தரவரிசையில் இந்தியா 88-வது இடத்திற்கு பின்தங்கி சென்றுவுள்ளது.

- 127 ஆண்டுகளுக்கு முன்பு உள்ள வரைபடத்தை காட்டி இந்திய பகுதியை சொந்தம் கொண்டாடுகிறது சீன அரசு.

- ஜெர்மன் சர்வதிகாரி என வருணிக்கப்படும் அடால்ப் ஹிட்லர் தீட்டிய ஓவியங்கள் பிரிட்டனில் ஏலத்துக்கு வரவுள்ளன. அதில் 'ஏ.ஹிட்லா' என்று அவரின் கையெழுத்து இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடதக்கது.
- பிரிட்டனின் கட்டுபாட்டில் இருந்த ஹாங்காங் கடந்த 1997 ஜுலை 1ம் தேதி பிரித்து சீனாவிடம் கொடுக்கப்பட்டது. 2014 ம் ஆண்டில் இருந்து சீனாவின் ஆட்சிக்கு எதிராக ஹாங்காங் மக்களின் போராட்டம் தீவிரமடைந்தது. இந்நிலையில் சீன எல்லையை கடந்தால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று ஹாங்காங் மக்களுக்கு சீன அதிபர் ஜி ஜின்பிங் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

- சூரிய மண்டலத்தில் உள்ள வியாழன் கோளின் (ஜுபிடர்) வளிமண்டலத்தில் ஒளி மற்றும் இருள் மேகங்கள் சூழ்ந்து இருக்கும் அரிய புகைப்படத்தை நாசாவின் ஜெமினி தொலைநோக்கி எடுத்துள்ளது. இக்கோளைப்பற்றிய ஆய்வுகளை ஜுனோ விண்கலம் தொடர்ந்து நாசாவிற்கு அனுப்பிவருகிறது.

- தேசிய கீதம் பாடும் போது உற்சாகத்துடன் பாட வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கும் படி சட்டம் ஒன்றை பிலிப்பின்ஸ் நாடாளுமன்றம் அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளது.

**ஜுலை - 4**

- ஜப்பான் கடற்பகுதியை நோக்கி கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகனையை வீசி வடகொரியா சோதனையை மேற்கொண்டது. உலக நாடுகளின் எதிப்பை மீறி வடகொரியா செயல்படுகிறது என்று ஜப்பான் தெரிவித்துள்ளது.

- தென் சீனக் கடல் எல்லைக்குள் அமெரிக்க போர் கப்பல் நுழைந்தது. அமெரிக்காவின் இத்தகைய செயலுக்கு சீனா கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

- அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தனது அதிகாரபூர்வமான டுவிட்டர் பக்கத்தில் பிரபல செய்தி ஊடகத்தை கிண்டல் செய்யும் விதத்தில் வீடியோ காட்சி ஒன்றை பதிவு செய்துள்ளார். இந்த வீடியோ காட்சி உலக அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.
- போரினால் பாதிக்கப்பட்டுள்ள சிரியாவின் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் கூட்டணி நாடுகளுடன் அமெரிக்காவிற்கு பதிலடி கொடுக்கப்படும் என்று சிரியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

- பிரதமர் மோடியின் பயணத்தின் போது இந்தியா - இஸ்ரேல் சைபர் பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து ஆலோசிக்கிறது என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாஹு தெரிவித்துள்ளார்.

- சீனாவில் உள்ள தொழிற்சாலையை மறுகட்டமைப்பு செய்வதை முன்னிட்டு கடந்த 7 ஆண்டுகளில் முதல் முறையாக சாம்சங் நிறுவனம் ஆட்குறைப்பில் ஈடுபட்டுள்ளது.

- அமெரிக்காவில் இந்த ஆண்டுக்கான தேசிய பேச்சு மற்றும் விவாதப் போட்டியில் இந்தியாவை பூர்விகமாக கொண்ட சீக்கிய மாணவரான ஜே.ஜே.கபூர் வெற்றி பெற்றுள்ளார்.

**ஜூலை - 5**

- இலங்கை வடக்கு பகுதியில் குடியிருந்த தமிழர்களிடமிருந்து ஆக்கிரமித்த 187 தமிழர் குடும்பங்களின் 54 ஏக்கர் நிலத்தையும் அதன் உரிமையாளரிடம் நேற்று இலங்கை இராணுவம் ஒப்படைத்தது.

- வட கொரியா மற்றும் அமெரிக்கா தத்தமது இராணுவ ஒத்திகை ஏவுகனை சோதனை அணு ஆயுத பரிசோதனை ஆகியவற்றை நிறுத்தி பேச்சு வார்த்தையில் ஈடுபட வேண்டும் என்று சீனா மற்றும் ரஷ்ய அரசு வலியுறுத்துகின்றது.

- இலங்கை பாதுகாப்புத்துறை செயலராக ஜெனரல் கபில வைத்திய ரத்னம் அவர்களை இலங்கை அரசு நியமனம் செய்துள்ளது.

- வியட்நாம் தலைநகரில் போக்குவரத்து நெரிசலை தடுக்கும் விதத்தில் மோட்டார் சைக்கிள் உபயோகிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது. இத்தடை 2030 ம் ஆண்டுக்குள் முழுவதுமாக நிறைவடையும் என்று ஹனோய் மகாண சட்டமன்றம் தெரிவித்துள்ளது.

- சிக்கிம் மாநில எல்லை பிரச்சனையில் சீனாவின் கருத்துக்களை இந்தியா ஏற்காவிட்டால் அந்நாட்டின் மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சீன பாதுகாப்பு துறை வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர்.

➢ உகாண்டாவில் அரசு பணியாளர்கள் கன்னியமான உடையணிந்து வர வேண்டும். பெண்கள் தங்கள் உடல் முழுவதையும் மறைக்கும் விதமாகவும் ஆண்கள் தலை முடியை ஒட்டவெட்டி டை மற்றும் கோட் அணிந்தும் தங்கள் பணிகளுக்கு வர வேண்டும் என்று உகாண்டா அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

➢ முக நூலிலிருந்து லாக் அவுட் செய்த பிறகும் இணையத்தில் நீங்கள் மேற்கொள்ளும் பிற தேடல்களையும் முகநூல் பின் தொடரலாம் என்று அமெரிக்க நீதிமன்றம் ஒன்று அதிர்ச்சியான தீர்ப்பு அளித்துள்ளது.

**ஜூலை - 6**

➢ சிக்கிம் எல்லை பகுதியில் உள்ள பிரச்சனையை பேச்சு வார்த்தை மூலம் தீர்த்து கொள்ள முடியும். தற்போது அப்பகுதியில் உள்ள பதட்டத்தை குறைப்பதற்கு சீன இராணுவம் பூடான் பகுதியில் இருந்து வெளியேர வேண்டும் என்று இந்திய பாதுகாப்பு துறை இணை மந்திரி சுபாஷ் பாம்ரே தெரிவித்துள்ளார்.

➢ தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி வந்து இலங்கை கடற்பகுதியில் மீன் பிடித்தால் ரூ.2 கோடிமுதல் ரூ.20 கோடி வரை அபராதம் விதிக்க வேண்டும் என்று சட்டமன்ற மசோதா இலங்கை நாடாளுமன்றத்தில் இன்று தாக்கல் செய்யப்பட்டது. இச்செய்தி தமிழக மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்திவுள்ளது.

➢ இந்தியா பாகிஸ்தான் இடையே போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி எல்லை தாண்டி தாக்குதலில் ஈடுபடுவதாக இரு நாடுகளும் தொடர்ந்து குற்றசாட்டுகளை கூறி வருகிறது. இதற்கிடையே பாகிஸ்தான் குறைந்த தூரம் சென்று இலக்கை தாக்கும் “நாஸ்ர்” ஏவுகனையை பரிசோதனை செய்தது. அச்சோதனை வெற்றிகரமானதாக அந்நாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

➢ இலங்கையில் சிறுபான்மையினராக இருக்கும் தமிழர்களுக்கு தன்னாட்சி அதிகாரம் வழங்கப்படும் என்று அந்நாட்டு அரசு உறுதியளித்துள்ளது.

➢ இந்தியா மற்றும் இஸ்ரேல் இடையே விண்வெளி தொழில்நுட்பம் மற்றும் நீர் மேலாண்மை தொடர்பான 7 ஒப்பந்தங்களில் இந்திய பிரதமர் மோடி மற்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் கையெழுத்திட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

➢ இலங்கை இராணுவத்தின் புதிய தளபதியாக மகேஷ் சேனநாயகே நியமிக்கப்பட்டுள்ளார் என்று அதிபர் சிறிசேனா தெரிவித்துள்ளார்.

➢ புதிய ஏவுகனை சோதனை அமெரிக்காவிற்கு கிடைத்த சுதந்திர தின பரிசு என்று வடகொரியா கூறியுள்ளது. வடகொரியாவின் இச்செயல் அமெரிக்க அரசை இன்னும் எரிச்சலுட்டும் வகையில் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜூலை -7

- 2040 ஆம் ஆண்டுக்குள் பெட்ரோல் - டீசல் வாகனங்கள் விற்பனை செய்வதற்கு தடை செய்ய பிரான்ஸ் அரசு முடிவு செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

- ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் விதித்த பல்வேறு தடைகளையும் மீறி அணுகுண்டு ஏவுகணை சோதனையில் ஈடுபடும் வட கொரியாவின் இராணுவத்தை தடை செய்ய வேண்டும் என்ற அமெரிக்காவின் கருத்திற்கு ரஷ்யா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

- பாகிஸ்தான் தலிபான் பயங்கரவாத இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்று ஐ.எஸ் பயங்கரவாத அமைப்புடன் தொடப்பு கொண்டுள்ள ஜமாத் உல் அஹரார் பயங்கரவாத இயக்கத்திற்கு ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் பொருளாதார தடைவிதித்து உள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

- உப்பு கலந்த அல்லது மாசு கலந்த நீரில் இருந்து உயர்தரமான குடிநீரை தயாரிப்பதற்காக நீர் சுத்திகரிப்பு தொழில்நுட்பத்துடன் 'கால்-மொபைல்' சிறப்பு வாகனம் வடிவமைக்கப்பட்டுள்ளது.இந்த வாகனத்திலிருந்து நாளொன்றுக்கு 20000 லிட்டர் கடல்நீரையும் 80000 லிட்டர் வண்டல் கலந்த கலங்கிய ஆற்று நீரையும் சுத்திகரிக்க முடியும் இவ்வியந்திரம் தற்போது இஸ்ரேல் நாட்டில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

- இந்தியா ஜோர்டான் இடையே தொழில் மற்றும் வர்த்தக முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக இரு நாடுகளுக்கும் இடையே வரி விதிப்பு விசா வழங்குவதில் ஒத்துழைப்பை அதிகரிக்கச் செய்வதற்கான வழிமுறைகள் குறித்து இருநாடுகளும் தங்கள் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் மேற்கொண்டனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

- ஐ.நா மற்றும் உலக நாடுகளின் எதிர்பை மீறி அணுகுண்டு ஆராய்ச்சி மற்றும் ஏவுகனை ஆராய்ச்சி செய்துவருகிறது வடகொரியா இந்நிலை தொடர்ந்து நீடித்தால் வடகொரியா கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்.

- வடகொரியாவின் ஏவுகனை பரிசோதனையை சம்மாளிக்க தென் கொரியாவும் போர் விமானம் போர் கப்பல் ஹெலி காப்டர் மூலம் ஏவுகனைளை செலுத்தி ஒத்திகை செய்தனர். வடகொரியாவின் செயலுக்கு தென் கொரியாவும் அமெரிக்காவும் சேர்ந்து கூட்டு போர் மற்றும் பயிர்ச்சியிலும் ஈடுபட்டுள்ளன என தென் கொரியா கப்பல் படை அதிகாரி தெரிவித்துள்ளார்.

## ஜூலை - 8

- ஐ.நா சபையின் 120 நாடுகள் ஒன்று சேர்ந்து அணு ஆயுதங்களை தடை செய்யும் ஒப்பந்தத்தை ஏற்படுத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டன என அம்மாநாட்டின் தலைவர் அறிவித்துள்ளார்.

- ஐ.நா பாதுகாப்பு அவையில் ஜி-20 மாநாட்டில் அமெரிக்கா ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகள் வட கொரியா மீது கூடுதல் தடைகள் கொண்டு வர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளன.

- மைக்ரோசாப்ட் நிறுவனத்தில் 4000 ஊழியர்களை அதிரடியாக பணி நீக்கம் செய்ய அந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது என தகவல்கள் வெளியாகின.இதில் அதிகமானவர்கள் இந்தியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

- ஜி-20 நாடுகளின் இரண்டு நாள் உச்சி மாநாடு ஜெர்மனியில் உள்ள ஹாம்பர்க் நகரில் தொடங்கியது. இம்மாநாட்டில் உலகில் எந்த மூலையில் இருந்தாலும் பயங்கரவாதிகளின் புகலிடங்கள் சர்வதேச அளவில் தகவல்கள் பரிமாறிக் கொள்வது நிதியுதவி கிடைப்பதைத் தடுப்பது போன்ற தீவிரவாத செயல்கள் அழிக்கப்பட வேண்டும் என்று 21 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

- இந்தியாவில் ஜிஎஸ்டி வரி விதிப்பால் 70 வருடங்களில் இல்லாத புரட்சி தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் இந்தியாவின் பொருளாதார நிலை 7 சதவீதம் ஜிடிபி –யுடன் வளர்ச்சியடைந்து வருகிறது எனவும் ஜி-20 மாநாட்டில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- பயங்கரவாதத்திற்கு எதிராக சர்வதேச நடவடிக்கைகள் பலவீனமாக உள்ளன என பிரதமர் மோடி ஆக்கபூர்வமான கருத்துக்களை ஜி-20 மாநாட்டில் வெளிகொணர்தார்.

- பாகிஸ்தானில் மரண தண்டனைக்கு எதிரான தடை 2014ம் ஆண்டு விலக்கிக் கொள்ளப்பட்ட பிறகு கடந்த இரண்டு வருடங்களில் 465 பேருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது என்று அதிர்ச்சியான தகவல்களை பாகிஸ்தானின் அரசு சாரா தொண்டு நிறுவனம் தற்போது வெளியிட்டுள்ளது.

- பிரிட்டனில் தீவிரவாதம் மற்றும் மத பயங்கரவாதக் குற்றச்சாட்டுகளின் கீழ் தண்டிக்கப்படுபவர்களைத் தனிச்சிறையில் அடைக்கும் திட்டம் அந்நாட்டில் நடைமுறைக்கு வந்துள்ளது.

**ஜூலை -9**

- எகிப்தில் பல்வேறு இடங்களில் ஜூலை 7 அன்று நிகழ்த்தப்பட்ட வெடிகுண்டு தாக்குதலுக்கு இஸ்லாமிய தேச பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றது.

- சர்வதேச நாடுகள் மற்றும் ஐ.நாவின் எதிர்ப்பை மீறி தொடர்ந்து வடகொரியா அணு ஆயுத சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றது. இந்நிலையில் தென்கொரியா ராணுவத்துடன் இணைந்து அமெரிக்க படைகளும் கூட்டாக போர் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

- உலகம் முழுவதும் அணுசக்தி ஆயுதங்களை தடை செய்ய இன்று உறுப்பு நாடுகளுடன் ஐ.நாவில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. 192 உறுப்பினர்கள் கொண்ட ஐ.நா சபையின் மூன்றில் இரண்டு பங்கு நாடுகளின் ஒப்புதலோடு இந்த வார இறுதியில் அணு ஆயுதங்களை தடை செய்வதற்கான 10 பக்க ஒப்பந்தம் ஐ.நாவில் நிறைவேற்றப்பட்டது.

- பருவகால மாற்றம் குறித்த பாரிஸ் ஒப்பந்தத்தை கடைபிடிக்க போவதாக ஜி-20 உறுப்பு மாநாடுகள் தெரிவித்தன. இதனால் அமெரிக்கா தனித்து விடப்பட்டுள்ளது. பாரிஸ் பருவகால மாநாடு புவி வெப்பமடைதலை சராசரியாக 2 டிகிரி செல்ஷியஸ்க்கு கீழாக வைத்திருக்கும் நோக்கத்தை கொண்டுள்ளது. இதை 2015 ஆம் ஆண்டில் 195 நாடுகள் இணைந்து ஏற்படுத்தின. அடுத்த ஜி20 மாநாடுகள் 2018ஆம் ஆண்டில் அர்ஜெண்டினாவிலும், 2019ஆம் ஆண்டில் ஜப்பானிலும், 2020ம் ஆண்டில் சவூதி அரேபியாவிலும் சந்திக்கவுள்ளன.

- துருக்கி தெற்கு எல்லைக்கு அச்சுறுத்தலாக இருக்கும் குர்திஷ் போராளிகளுக்கு அமெரிக்கா ஆயுதங்களை வாங்குவதற்கு துருக்கி அதிபர் எர்டோகன் எதிர்ப்பு தெரிவித்தார்.

- ஈராக் நாட்டின் மிகப்பெரிய நகரங்களில் ஒன்றான மொசூல் டைக்ரிஸ் நதிக்கரையில் அமைந்துள்ளது. ஐ.எஸ் பயங்கரவாதிகளின் பிடியில் இருந்த மொசூல் நகரை ஈரான் ராணுவம் நேற்று முற்றிலுமாக மீட்டது.

- ஜி20 அமைப்பின் 2 நாள் உச்சி மாநாடு ஜெர்மனியின் ஹம்பர்க் நகரில் தொடங்கியது. இம்மாநாட்டில் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே மற்றும் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ருடியூவுடன் இந்திய பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்தினார். மேலும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க முன்வருமாறு ஜி20 நாடுகளுக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

**ஜுலை -10**

- அமெரிக்க இராணுவத்தில் சேருவதற்காக தவறான தகவல்களை தந்ததாக கூறி இந்திய வம்சாவழியை சேர்ந்த சிவம் பட்டேல் என்ற வாலிபர் அமெரிக்க போலிசாரால் கைது செய்யப்பட்டார். இவர் ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்துடன் சேர முயற்சி செய்தவர் என்பதும் அந்நாட்டின் உளவுத் துறையால் கண்டறியப்பட்டது என தகவல்கள் வெளியாகின.

- அமெரிக்காவும் ரஷ்யாவும் இணைந்து கொண்டு வந்துள்ள போர் நிறுத்தம் தெற்கு சிரியாவில் துவங்கியுள்ளது. அமெரிக்க அதிபர் டிரம்ப் பதவியேற்றப்பின் அமலுக்கு வந்துள்ள முதல் போர் நிறுத்தம் இதுவாகும். இதுவரை மூன்று லட்சத்திற்கும் அதிகமான பேர் இப்போரினால் இறந்து விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

- அரபிக்கடலில் எல்லை தாண்டி வந்து மீன் பிடித்ததாக இந்திய மீனவர்களை பாகிஸ்தானும் பாகிஸ்தான் மீனவர்களை இந்தியாவும் அவ்வப்போது கைது செய்து வருகின்றன. இந்நிலையில் பாகிஸ்தான் சிறையிலிருந்து 78 இந்திய மீனவர்கள் இன்று விடுவிக்கப்பட்டுள்ளனர் என அந்நாட்டின் உள்துறை செயலாளர் நசீம் சித்திக் கூறியுள்ளார்.

- உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி அணு ஆயுத சோதனையை மேற்காள்ளும் வட கொரியாவின் செயலுக்கு எதிராக அமெரிக்காவுடன் இணைந்து செயல்பட சீன அரசு முடிவு செய்துள்ளது.

- டோக்கியோவில் நடைப்பெறவுள்ள 2020 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் அகதிகள் அணி ஒன்றை பங்கேற்க வைக்க சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

- போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி தங்கள் நாட்டு எல்லைப் பகுதியில் இந்திய இராணுவம் தாக்குதல் நடத்தியதாகக் கூறி இந்தியத் துணைத் தூதரை நேரில் அழைத்து அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

- பிரிட்டனுக்கும் அமெரிக்காவிற்கும் இடையே புதிய வர்த்தக உடன்படிக்கை விரைவில் ஏற்படும் என்று பிரிட்ன் பிரதமர் தெரசாமே மற்றும் அமெரிக்க அதிபர் டிரம்ப் ஆகியோர் தெரிவித்துள்ளார்.

- அணு ஆயுதங்களைத் தடை செய்வதற்கு வழிவகுக்கும் உலகின் முதல் ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான ஐ.நா.தீர்மானத்தை ஆதரித்து 120 க்கும் மேற்பட்ட நாடுகள் வாக்களித்துள்ளன.இதன் மூலம் இத்தீர்மானம் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளது. இருப்பினும் இந்தியா அமெரிக்கா பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் இத்தீர்மானத்தை புறக்கணிப்பு செய்தனர்.

**ஜுலை -11**

- வளைகுடாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக கத்தார் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பொருளாதார ரீதியாக தம்மை தனிமைப்படுத்தியமைக்கு எதிராக வளைகுடாவின் நான்கு நாடுகளிலும் இழப்பீடு கோரவுள்ளதாக கத்தார் அரசாங்கம் அறிவித்துள்ளது.

- மொசூலில் ஈராக்கிய அரசு படைக்கு எதிராக தோல்வியை தழுவிவரும் ஐ.எஸ் பயங்கரவாதிகள் தப்பிசெல்வதற்காக அங்குள்ள டைகரிஸ் நதியில் விழுந்தனர். இராணுவத்தின் தாக்குதலில் இருந்து தப்பிக்கப் போய் நதியில் விழுந்து தற்கொலை செய்துகொள்ளவதாக தகவல்கள் வெளியாகின.

- ஜி-20 மாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் சீன அதிபர் ஜி ஜின்பிங் இருநாட்டு விவகாரங்கள் குறித்தும் எவ்வித அதிகாரபூர்வமான பேச்சு வார்த்தையும் மேற்கொள்ளவில்லை என்று சீனா விளக்கமளித்து உள்ளது.

- அமெரிக்காவின் மிசிசிப்பி மாகாணத்தில் கேசி -130 ரக கற்படை விமானம் விழுந்து விபத்திற்குள்ளானது. இதில் விமானத்தில் பயணித்தவர்களில் 16 பேர் உயிரிழந்தனர் என தகவல்கள் வெளியாகி உள்ளன.

- மின் உற்பத்தியில் ஈடுபட்டு வரும் பல அணு உலைகளை மூட பிரான்ஸ் அரசு திட்டமிட்டுள்ளதாக அந்நாட்டு சுற்றுசூச்சூழல் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள நிக்கோலஸ் ஹுலோட் தெரிவித்துள்ளார்.

- இந்தியா ஜப்பான் அமெரிக்கா ஆகிய நாடுகள் இணைந்து 'மலபார் கூட்டு கப்பல் போர் பயிற்சியை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வங்கக்கடல் மற்றும் அரபிக்கடலில் நடத்தி வருகின்றன. சீனாவுடான எல்லைப்பிரச்சனைக்கும் மலபார் கூட்டுப்பிற்சிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று இந்திய அமெரிக்க மற்றும் ஜப்பான் கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

- பெண்களுக்கு முற்றிலும் அனுமதி இல்லாத ஜப்பானின் வினோத தீவான 'ஒகினோஷிமாவை' உலக பாரம்பரிய சின்னமாக அங்கீகாரமளித்து யுனோஸ்கோ அறிவிப்பு வெளியிட்டது.

- இந்தியாவுடனான அனைத்து பிரச்சனைகளுக்கும் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காண விரும்புவதாக பாகிஸ்தான் பிரதமரின் ஆலோசகர் சர்தாஜ் அஜீத் கூறியுள்ளார்.

**ஜுலை -12**

- அமெரிக்காவும் கத்தாரும் தீவிரவாதத்தை எதிர்க்க உடன்பாடு ஒன்றை எட்டியுள்ளன. அண்டை நாடுகளின் தீவிரவாதத்தை தடுக்கவே இத்தகைய உடன்படிக்கை என்று அமெரிக்க வெளியுறவுச் செயலர் ரெக்ஸ் டில்லர்சனும் கத்தாரின் அயலுறவுத்துறை அமைச்சர் ஷேக் முகம்மது அல் தானியும் இத்தகைய அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

- இந்திய பிரதமர் மோடியின் மேக் இன் இந்தியா மற்றும் ஜி.எஸ்.டி வரி விதிப்பு முறை ஆகிய திட்டங்களை சீனாவின் அரசு ஊடகம் பாராட்டு தெரிவித்துள்ளது.

- உலகிலேயே மிகச் சிறிய ராஜியம் மத்திய தரைக்கடல் பகுதியில் அமைந்துள்ள ஒரு குட்டித் தீவான தவோலாரா ஆகும். இதன் பரப்பளவு ஐந்து சதுர கிலோ மீட்டர் தான் . இங்குள்ள மக்களின் எண்ணிக்கை வெறும் 11 தான். சாதாரண கால்சட்டை மற்றும் ரப்பர் செருப்பணிந்து வாழ்ந்து வரும் அரசரின் ஆட்சிக்கு உட்பட்டது.

- 2026 ஆம் ஆண்டில் இந்தியாவின் பால் உற்பத்தி மூன்று மடங்காக அதிகரிக்கும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- லண்டனில் உள்ள ஸதபி சர்வதேச ஏல மையத்தில் பென்சிலால் வரையப்பட்ட மகாத்மா காந்தியின் அரிய ஓவியம் ரூ.27 இலட்சத்திற்கு விற்பனையானது.

- ஜுலை 11 - உலக மக்கள் தொகை தினம் . உலக அளவில் மக்கள் தொகை மீதான விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக ஐக்கிய நாடுகள் சபையின் சார்பாக உருவாக்கப்பட்டது.

- இந்தியா சீனா இடையே தற்போது எழுந்துள்ள எல்லைப் பிரச்சனையை இரு நாடுகளும் திறம்பட கையாளுவதற்கு எந்த காரணமும் இல்லை என்று வெளியுறவுத் துறைச் செயலர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

**ஜுலை – 13**

- உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் காவிரி பிரச்சனையில் இந்தியா பாகிஸ்தான் இடையேயான உறவை மேம்படுத்த உதவி செய்ய தயாராக இருப்பதாக சீன அரசு தெரிவித்துள்ளது.

- வெளிநாட்டு மாணவர்கள் அமெரிக்காவில் தங்கியிருந்து படிப்பதற்கு புதிய நிபந்தனை ஒன்றை அமெரிக்க அதிபர் டிரம்ப் வெளியிட்டுள்ளார். புதிய நிபந்தனை என்னவெனில் அமெரிக்காவில் தங்கியிருந்து படிக்கும் மாணவர்கள் தாங்கள் படிக்கும் காலம் வரைக்கும் தங்கள் படிப்பிற்கான பதிவை ஆண்டுதோறும் மறு பதிவு செய்ய வேண்டும் என்பதாகும்.

- அண்டார்ட்டிக்காவில் சென்னையை விட 13மடங்கு பெரிய பனிப்பாறை உடைந்தது. இதனால் கடல் மட்டம் உயரும் ஆபத்தான நிலை ஏற்பட்டுள்ளது.

- பாகிஸ்தான் பிரதமர் ஆகிறார் நவாஸ் சகோதரர்.

- அமெரிக்க அரசியல் சட்ட விதிமுறைகள் சீர்திருத்தத்துறை தலைவராக இந்திய வம்சாவழி வழக்கறிஞர் நியோமி ராவ் நியமிக்கப்பட்டதற்கு அமெரிக்க செனட் அவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

- ஜெர்மனியில் வசிக்கும் 72 வயது இர்மெலா மென்சா – வெறுப்புக்களை அழிக்கும் தேவதை என அழைக்கப்படுகிறார்.வித்தியாசமான முறைகளில் தெருக்களைச் சுத்தம் செய்துவருகிறார்.

- பாகிஸ்தான் பிரதமர் நவாஸ்ஷெரீப் மீதான 'பனாமா பேப்பர்ஸ்' ஊழல் வழக்கில் அந்த நாட்டு உச்ச நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

- இலங்கையில் பாலித்தினுக்குத் தடை வருகிறது.

## ஜூலை -14

- சீனாவை இலக்காக இந்தியா தனது அணு ஆயுதங்களை நவீனமாக்கி வருகிறது என அமெரிக்க நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்

- சூரியனின் மேற்பரப்பில் பெரிய கருந்துளைகள் தோன்றுகின்றன.

- உலகில் அதிக சோம்பேறிகளை கொண்ட நாடுகள் பட்டியலில் இந்தியா 39 வது இடத்தை பிடித்துள்ளது.

- சீனாவின் மனித உரிமைப் போராளி 'லியு-ஷியாவ்போ' – புற்றுநோயால் மரணம்.

- சவூதியில் பெண்களுக்கு எதிரான கட்டுபாட்டுகள் அதிகமாக நிகழ்கின்றன. அரேபியப் பள்ளிகளில் படிக்கும் மாணவிகள் விளையாட்டுகளில் ஈடுபடுவது தற்போது தான் அறிமுகம் செய்யப்படுகிறது. அதுவும் ஷரியா மதக்கோட்பாடுகளுக்கு உட்பட்டே இருக்கும் என்று அந்நாட்டு கல்வித்துறை அறிவித்துள்ளது.

- பார்வையற்றவர்களுக்கு உதவும் வகையில் 'செயற்கை நுண்ணறிவு' முறையில் செயல்படும் புதிய 'ஆப்' (சீயிங் ஏஐ) மைக்ரோசாப்ட் நிறுவனம் அறிமுகம் செய்வுள்ளது.

- இத்தாலிக்கு அகதிகள் அதிக அளவில் வருவதால் பெரும் நெருக்கடி ஏற்படுவதாகவும் அகதிகளை ஏற்கும் விஷயத்தில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அனைத்தும் தனது பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் அந்நாட்டு பிரதமர் பாலோ ஜென்டிலோனி தெரிவித்துள்ளார்.

- அமெரிக்க அதிபர் டெனொல்ட் டிரம்ப்பின் தீவிர ரசிகர் ஒருவர் வங்கதேசத்தில் தான் ஆரம்பித்த புதிய உணவகத்திற்கு டிரம்ப்பின் பெயரை வைத்துள்ளார். இச்செய்தி அந்நாட்டு மக்களிடையே பெரும் பரப்பரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## ஜூலை - 15

- ஆர்டிக் பனிப்பிரதேசத்தில் எண்ணெய் கிணறு அமைக்க அமெரிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. எண்ணெய் கிணறு அமைப்பதால் அங்குள்ள இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் இன்னும் அதிகமான ஆபத்தை சந்திக்க நேரிடும் என்று அமெரிக்காவின் இயற்கை ஆர்வலர்கள் மற்றும் இயற்கை பாதுகாப்பு கூட்டமைப்பின் தலைவர் கிறிஸ்டன் மான்செல் கூறியுள்ளார்.
- உலக அளவில் அதிக முகநூல் பயன்பட்டாளர்களைக் கொண்ட நாடுகளில் இந்தியா முதலிடம் பிடித்துள்ளது. ஏறத்தாழ 24.1 கோடி பேர் இந்தியாவில் முகநூலைப் பயன்படுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- இத்தாலியின் மிகப்பெரிய எரிமலை பகுதியில் ஏற்பட்ட காட்டுத்தீ புகையில் அரக்கன் போன்ற உருவம் தோன்றியது.

- ஆமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் ஈரான் லிபியா சோமாலியா சூடான் சிரியா மற்றும் ஆகிய 6 நாடுகளை சேர்ந்தவர்கள் அமெரிக்காவிற்குள் நுழைவதற்கு தடைவிதித்து உத்தரவு பிறப்பித்தார்.

- காஷ்மீர் தொடர்பாக நிலவும் பிரச்சனையை இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சு வார்த்தை நடத்தி தீர்வு காண வேண்டும் என்று ஐ.நா.பொதுச் செயலாளர் அன்டோனியா குட்டெரஸ் வலியுறுத்தியுள்ளார்.

- அமெரிக்காவுக்குள் மெக்ஸிக்கோ அகதிகள் வருவதை தடுக்க சூரிய மின்சக்தி சுவர் அமைக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

- வடகொரியா மீது ஐ.நா சபை மேலும் தடைகளை கொண்டு வந்தால் அவற்றை எதிர் நடவடிக்கைகள் மூலம் சந்திப்போம் என்று அந்நாடு அதிகாரபூர்வமான அறிக்கையை வெளியிட்டுள்ளது.

- சிங்கப்பூரில் 15 கிராமங்களுக்கு அதிகமாக ‘டயாமார்பின்’ போதைப்பொருளை கடத்திய தமிழ்நாட்டை பூர்விகமாக கொண்ட பிரபாகரன் ஸ்ரீவிஜயன் என்ற வாலிபர் அந்நாட்டு போலிசாரால் கைது செய்யப்பட்டிருந்தார் இந்நிலையில் நேற்று சாங்கி சிறைச்சாலை வளாகத்தில் அவர் தூக்கில் போடப்பட்டார். முரண தண்டனை விதிக்க அந்த நாட்டு சட்டம் வழி செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**ஜூலை – 16**

- உலக அளவில் அதிக முகநூல் பயன்பாட்டாளர்களைக் கொண்ட நாடுகளில் இந்தியா முதலிடம் பிடித்துள்ளது. ஏறத்தாழ 24.1 கோடி பேர் இந்தியாவில் முகநூலைப் பயன்படுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது வரை அமெரிக்காவே முகநூல் பயன்பாட்டில் முன்னிலையில் இருந்து வந்து குறிப்பிடத்தக்கது.

- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பு (ஓஇசிடி) கடந்த 1961-ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பில் 35க்கும் மேற்பட்டப நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. பிரான்ஸ் தலைநகர் பாரிஸை தலைமையிடமாக கொண்டுள்ளது இந்த அமைப்பு. அரசின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை அடிப்படையில் இந்த அமைப்பு நடத்திய ஆய்வில் பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசுக்கு 3 வது இடம் கிடைத்துள்ளது.

- வடகொரியாவிடம் முன்பு இருந்ததாகக் கருதியதை விட அதிகளவில் புளுட்டோனியம் உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அமெரிக்காவின் ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தின் ஆதரவில் செயல்படும் அணு ஆயுதக் கண்காணிப்பு அமைப்பு இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

- ரஷியா 73 செயற்கைக்கோள்களை சனிக்கிழமை (ஜூலை 15) மதியம் 12.13 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. சுமார் 8 மணி நேர பயணத்துக்குப் பிறகு அனைத்து செயற்கைக் கோள்களும் முன்னர் தீர்மானிக்கப்பட்ட அதனதன் சுற்றுவட்டப் பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது.

➢ அமெரிக்க எம்பிக்கள் 621.5 பில்லியன் டாலர் பாதுகாப்பு கொள்கை மசோதாவை நிறைவேற்றியுள்ளது. இந்த மசோதா இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பை முன்னெடுக்க முன்மொழிகிறது.

➢ சோங்கிங் மாகாண கம்யூனிஸ்டு கட்சியின் தலைவராக அரசியல் நட்சத்திரம் சென் மைனர் அறிவிக்கப்பட்டுள்ளார்.

➢ விண்வெளி வீரர்கள் மற்றும் அமெரிக்கன் இன்ஸ்டிடியூட் ஆப் ஏரோனாடிக்ஸ் அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டம் 12ம் தேதி நடைபெற்றது. இதில் நாசா போதிய நிதி ஆதாரம் இல்லாததால் செவ்வாய் கிரகத்திற்கு மனிதர்களை அனுப்ப முடியாது என ஒப்புக் கொண்டுள்ளது.

➢ துருக்கியில் ராணுவ வீரர்கள், காவல் துறையினர் உள்பட 7563 பேரைப் பணிநீக்கம் செய்து அரசு உத்தரவிட்டது.

**ஜூலை 17**

➢ அமெரிக்காவில் ஏடிஎம் எந்திரத்தினுள் தவறுதலாக மாட்டிக் கொண்ட டெக்ஸாஸ் நபர் ஒருவர் பண விவரம் வழங்கும் தாளில் உதவி குறிப்பு எழுதி அனுப்பி வெளியே வந்த வினோதமான செய்தி அங்குள்ள மக்களிடையே பரப்பரப்பை ஏற்படுத்தியுள்ளது.

➢ ஈரானில் பிறந்த கணிதவியலாளர் ஃபீல்ட்ஸ் மெடல் விருதை வென்ற முதல் பெண்மணி கணித மேதை மார்யம் மிர்ஸாகாணி அமெரிக்காவில் காலமானார்.

➢ அதிக வட்டியில் சிறு வணிக கடன் காரணமாக புதைக்குழிலில் சிக்கி கொண்டு வாழும் இலங்கை தமிழர்கள் - கடன் பிரச்சனையால் சிறுநீரகம் விற்க மற்றும் தற்கொலை செய்ய துணிந்துள்ளனர்.

➢ பசிபிக் பெருங்கடல் மற்றும் ஆசிய பகுதிகளில் ஏற்பட்ட பருவநிலை மாற்றம் மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தும் இதனால் உலக அளவில் கடலோரத்தில் இருக்கும் சீனா, இந்தியா, வங்கதேசம், இந்தோனேஷியா போன்ற பெரு நகரங்கள் கடலில் மூழ்கும் அபாயம் உள்ளதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

➢ ஜெருசலேமில் இரு இஸ்ரேல் வீரர்கள் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்ததைத் தொடர்ந்து மூடப்பட்ட புனிதத் தலத்தில் முஸ்லிம்கள் மீண்டும் தொழுகை நடத்தலாம் என்று இஸ்ரேல் அரசு அனுமதி அளித்து உரிமம் வழங்கியுள்ளது.

➢ இலங்கையில் கடந்த 2009ம் ஆண்டு நடந்த இறுதிக்கட்ட போரின் போது ஆயிரக்கனக்கான அப்பாவி தமிழர்கள் கொல்லப்பட்டனர். ஏராளமானோர் காணாமல் போயினர். இதன் காரணமாக இலங்கை கடற்படை அதிகாரிகள் 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

- செனேகல் நாட்டின் தலைநகரான டாகரில் கால்பந்து போட்டி - ரசிகர்கள் இடையே மோதல் ஏற்பட்டதை அடுத்து ரசிகர்கள் வெளியே செல்ல முயற்சித்த போது அங்குள்ள சுவர் இடிந்து விழுந்து 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

- அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில் சான் ஜோஷ் நகரில் உள்ள கம்பிரியன் பார்க்கில் பூனைகளை கொன்ற வாலிபருக்கு 16 ஆண்டுகள் சிறை தண்டனை அளிக்கப்பட்டது.

**ஜுலை -18**

- உலகில் சிறந்த பேட்ஸ் மேன் - இந்திய அணியின் கேப்டன் விராட்கோலி என்று பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் முகமது அமீர் புகழாரம் சூட்டினார்.

- பூமிக்கு மிக அருகில் உள்ள நட்சத்திரத்தில் இருந்து வந்த வேற்று கிரகவாசி சமிக்ஞையை இஸ்ரோ கண்டுப்பிடித்தது.

- 1.7 மில்லியன் ஆண்டு பழைமையான ராமர் பாலம் மனிதன் நீண்டகாலமாக வாழ்ந்திருக்க வேண்டும் என்பதை உணர்த்துவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

- சூப்பர் மனிதனை உருவாக்கும் முயற்சியில் சீனா - திரண்ட தசை உடைய நாய்களை உருவாக்கி சாதனைப் படைத்துள்ளது.

- பணக்காரர்கள் ஏழைகள் இடையிலான இடைவெளி குறைக்கும் நாடுகள் பட்டியலில் இந்தியா கடைசி இடத்தை பிடித்துள்ளது.

- ஈரானில் ஊடுருவி உளவு வேலையில் ஈடுப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்ட சீன வம்சாவழியைச் சேர்ந்த அமெரிக்கருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

- பெருவில் கண்டுபிடிக்கப்பட்ட மம்மிக்கு 3 விரல்கள் மட்டும் உள்ளதால் ஏலியன் மம்மியாக இருக்கலாம் என்று தொல்லியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**ஜுலை – 19**

- பாகிஸ்தானில் இந்திய தொலைக்காட்சி தொடர்களை ஒளிபரப்புவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி பாகிஸ்தான் நாட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

- குறுகிய கால பணிகளுக்கான வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஹெச் - 2பி விசாக்களின் எண்ணிக்கையை 15 ஆயிரமாக அமெரிக்கா அதிகரித்தது.

- டொனெட்ஸ்க், லுஹான்ஸ்க் பகுதிகளட இணைந்த மலோரோஸியா என்ற புதிய நாடு உருவாக்கப்படுகிறது. அந்த நாட்டுக்கான புதிய அரசியல் சாசனம் விரைவில் இயற்றப்படும் என டொனெட்ஸ்க் மக்கள் குடியரசின் தலைவர் அலெக்ஸாண்டர் ஸகர்சென்கோ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

➢ இந்திய – பிரிட்டன் உள்துறைச் செயலர்கள் அளவிலான பேச்சுவார்த்தை பிரிட்டன் தலைநகர் லண்டனில் நிறைவடைந்தது.

➢ சீனாவை சேர்ந்த ஹூனான் பல்கலைக்கழக அறிவியல் அகாடமி, பனி சிறுத்தை சரணாலயம் ஆகியவை இணைந்து நடத்திய ஆய்வில் பூமி வெப்பமடைவதால் எவரெஸ்ட் பனிமலை உருகிவருகிறது. இதனால் கடல்நீர்மட்டம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதால் அதிகம் பாதிப்புக்குள்ளாகும் நாடுகளில் அமெரிக்காவும், சீனாவும், இந்தியாவும் இருக்கின்றன.

➢ முன்னாள் உத்தா மாகாண ஆளுநரான ஜோன் ஹண்ட்ஸ்மேனை ரஷ்யாவிற்கான தூதராக டிரம்ப் நியமித்துள்ளார். ஹண்ட்ஸ்மேன் 2009 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை சீனாவிற்கான அமெரிக்க தூதராக பணியாற்றியுள்ளார்.

➢ உலக கச்சா எண்ணெய் உற்பத்தியில் சந்தை நிலவரம் நிலையாக இருக்க வைப்பதே சவூதியின் இலக்கு என சவுதி தெரிவித்துள்ளது. சமீபத்தில் நைஜூரியாவும், லிபியாவும் தங்களது எண்ணெய் உற்பத்தியை அதிகரித்துள்ளன. அந்த இரு நாடுகளுடனும் பிற நாடுகளுடனும் ஒத்துழைத்து தங்களது உற்பத்தியை மேற்கொள்ளப் போவதாக சவுதி தெரிவித்துள்ளது.

➢ அமெரிக்காவின் தீவிரவாதத்தை ஆதரிக்கும் நாடுகள் பட்டியலில் தொடர்ந்து ஈரான், சிரியா மற்றும் சூடான் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

**ஜூலை – 20**

➢ அமெரிக்கா, வாஷிங்டன் நகரில் முதலாவது உலகலாவிய ‘ரோபாட்டிக்ஸ்’ போட்டி நடந்தது. இதில் 157 நாடுகள் கலந்து கொண்டன. இந்திய மாணவர்கள் இப்போட்டியில் தங்கப் பதக்கம் வென்று ஜாங் ஹெங் என்ஜினீயரிங் டிசைன் விருதினைப் பெற்று சாதனை படைத்தனர்.

➢ ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேற 115 பில்லியன் டாலர்களை கொடுக்க வேண்டும் என்று பிரான்ஸ் பொருளாதார அமைச்சர் லீ மெயர் தெரிவித்துள்ளார்.

➢ பயங்கரவாதம் குறித்த வருடாந்திர அறிக்கையை அமெரிக்க வெளியுறவுத்துறை தயார் செய்துள்ளது. இதில் பயங்கரவாதத்திற்கு புகலிடம் அளிக்கும் நாடுகள் பட்டியலில் பாகிஸ்தான், ஈராக், லிபியா, ஏமன் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன என்றும் இதனால் இந்தியா பலவிதமான சிக்கல்களை சந்தித்து வருகிறது என்றும் அமெரிக்க வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது.

➢ வடகொரியாவில் தொழிற்சாலையிலிருந்த தாமிரங்களை திருடி விற்றவர்கள் மற்றும் தென் கொரியாவில் தயாராகிற பத்திரிக்கைகளை விற்பனை செய்தவர்களுக்கும் பொது இடத்தில் வைத்து துப்பாக்கியால் சுட்டுக்கொள்ளும் மரண தண்டனையை அந்நாட்டு அரசு நிறைவேற்றியுள்ளது.

➢ மாஸ்கோவில் தற்போது பாதுகாப்புத் துறை துணை அமைச்சராக உள்ள ‘அனடோலி அண்டோநோவ்’ என்பவரை அமெரிக்காவிற்க்கான புதிய தூதராக ரிஷிய அரசு நியமித்துள்ளது.

➢ விண்வெளி, கணினி பாதுகாப்பு ஆகிய துறைகளில் இந்தியாவுடன் அமெரிக்கா இணைந்து செயல்பட வேண்டும் என்று அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகத்திடம் செனட் அவைக் குழு வலியுறுத்துகிறது.

➢ பாகிஸ்தானுடன் தற்போது சீனா கைக்கோர்த்துவிட்டது. இனி இந்தியாவை தாக்குவதற்கு சீனா தயாராகி விட்டதாகவும் சமாஜவாதி கட்சியின் நிறுவனறும் முன்னாள் பாதுகாப்புத் துறை அமைச்சருமான முலாயம் சிங் யாதவ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

➢ 5 ஆம் தலைமுறை போர் விமானம் தயாரித்தலில் 2 –ஆவது கட்டப் பணியை தொடங்குவது தொடர்பான ஒப்பந்தத்தில் இந்தியாவும் ரஷியாவும் விரைவில் கையெழுத்திட உள்ளன என்று ரஷிய அரசு நிறுவனமான ரோஸ்டக்கைச் சேர்ந்த அதிகாரி செர்ஜி செமிஜோவ் கூறியுள்ளார்.

**ஜுலை – 21**

➢ உலகையே அச்சுறுத்தி வரும் எய்ட்ஸ் நோய்க்கு 2016ம் ஆண்டு உலகம் முழுவதும் 10 லட்சம் பேர் பலியாகி உள்ளதாக ஐ.நா. அறிக்கை மூலம் தெரியவருகிறது.

➢ பாகிஸ்தான் அணு ஆயுத சோதனைகளை நிகழ்த்தாமல் இருந்தால் அதற்கு பணம் தருவதாக முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டன் கூறியதாக பாகிஸ்தான் பிரதமர் தகவல் வெளியிட்டு உள்ளார்.

➢ இலங்கையில் வேகமாகப் பரவி வரும் டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்த அந்த நாட்டுக்கு 3.77 லட்சம் டாலர் (சுமார் ரூ.24 கோடி) நிதியுதவி அளிக்க ஆஸ்திரேலியா முன்வந்துள்ளது.

➢ மாயமான மலேசியா விமானத்தை (எச்ஹெச் 370) தேடும் பணியின் போது கடலுக்குள் புதைந்து கிடக்கும் புதிய உலகத்தை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இதில் எரிமலைகள், பள்ளத்தாக்குகள் மற்றும் உயரமான முகடுகள் இருப்பது போன்ற வரைபடத்தை ஆஸ்திரேலியா வெளியிட்டுள்ளது.

➢ பிரிட்டனில் ஷெஃபீல்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆர்பன் தோஷி தனது 21 வயதில் மருத்துவராகி சாதனை படைத்துள்ளார். இவர் ஒரு இந்திய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

➢ சௌதி அரேபியாவில் இருந்து அமெரிக்காவிற்கு செல்லும் நேரடி விமானங்களின் உள்ளே லேப்டாப் எடுத்து செல்ல கூடாது என விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளதாக சௌதி அரேபியா ஏர்லைன்ஸ் தெரிவித்துள்ளது.

➢ இந்து தேசியவாதத்தால் இந்தியா சீனா இடையே போர் ஏற்படும் அபாயம் உருவாகி உள்ளது என்று சீன அரசு ஊடகமான ‘குளோபல் டைம்ஸ்’ தெரிவித்துள்ளது.

**ஜூலை – 22**

➢ அண்டார்டிக்கா - பனிப்பாறை பனித்தட்டில் இருந்து விலகியது இதன் காரணமாக கடல்நீர் மட்டம் உயரும் அபாயம் உள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

➢ அமெரிக்காவில் இருந்து கொரியா டூர்ஸ் மற்றும் யங் பயோனீர் டூர்ஸ் ஆகிய நிறுவனங்கள் மூலம் வடகொரியாவுக்கு பயணம் செய்ய அமெரிக்க குடிமக்களுக்கு அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது.

➢ பாகிஸ்தான், அமெரிக்கா கூட்டு நடவடிக்கை நிதிக்காக அமெரிக்கா தரப்பில் ஆண்டுதோறும் நிதி வழங்கப்படுகிறது. அதன்படி 2016 ஆம் ஆண்டு கூட்டு நடவடிக்கை நிதிக்கு சுமார் ரூ.2300 கோடி நிதியை பாகிஸ்தானுக்கு வழங்க அமெரிக்கா திட்டமிட்டிருந்தது தற்போது அந்த நிதி வழங்குவதை நிறுத்தி வைப்பதற்கு அமெரிக்க அரசு முடிவு செய்துள்ளது.

➢ இலங்கையில் போரின் போது காணாமல் போனவர்களை கண்டறிவதற்காக தனி அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்புக்காக அந்நாட்டு அதிபர் மைத்ரிபால சிறீசேனை ஐ.நா பாராட்டியுள்ளது.

➢ சந்திரனில் கால் பதித்த முதல் விண்வெளி வீரர் ஆம்ஸ்ட்ராங் சந்திரனில் உள்ள தூசி மற்றும் சிறு பாறைகளை ஒரு பையில் போட்டு எடுத்து வந்தார். தற்போது அந்த தூசிப்பை 11 கோடியே 70 இலட்சத்திற்கு விற்பனை செய்யப் பட்டுள்ளது.

➢ யேமனில் காலாரா நோயின் தாக்கம் கடுமையாக உள்ளது. உலகளவில் இல்லாத வகையில் அங்கு மூன்று லட்சத்துக்கும் அதிகமானவர்கள் காலராவால் பாதிக்கப்பட்டுள்ளனர். மூன்று மாதங்களில் குறைந்தது இரண்டாயிரம் பேர் காலராவால் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு புள்ளி விவரம் குறிப்பிடுகின்றது.

➢ வடகொரியா தொடர்ந்து அணு ஆயுத திட்டங்களை நிறைவேற்றி வருவதால் ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் அந்நாட்டின் மீது கடுமையான பொருளாதார தடைகளை விதித்தது, இருப்பினும் 2016 ஆம் ஆண்டிற்கான பொருளாதாரத்தில் 3.9 சதவீதம் வளர்ச்சி அடைந்து சாதனை படைத்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

➢ ஆமெரிக்காவின் எ.ஃப்-35 விமானத்தை ஐரோப்பாவில் இயக்க கூட்டணி நாடுகள் முடிவு செய்துள்ளனர்.

**ஜூலை – 23**

➢ 99 ஆண்டுகளுக்கு பின்னர் தோன்றும் முழு சூரிய கிரகணம் வரும் ஆகஸ்ட் 21 ஆம் தேதி தோன்ற உள்ளது. சூரிய கிரகணம் நிகழும் போது சூரியனின் விளிம்புகள் மட்டுமே தெரியும். இதனை வெறும் கண்களால் பார்க்க கூடாது. பிரத்யேகமாக தயாரிக்கப்பட்டுள்ள சூரிய ஒளித்தடுப்புக் கண்ணாடிகளால் மட்டுமே காண வேண்டும்.

சூரியனின் மைய பகுதியை முழுமையாக நிலா மறைக்கிறது. இந்த சூரிய கிரகணத்தை உலகம் முழுவதும் உள்ள 30 கோடி மக்களால் இந்த கிரகணத்தை பார்க்க முடியும் என நாசா தெரிவித்துள்ளது.

- ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தைக் குறிப்பிடும் போது முன்னுக்குப் பின் முரணான சொற்களைப் பயன்படுத்துவதை அமெரிக்கா ஒப்புக் கொண்டுள்ளது.

- அமெரிக்க அதிபரின் செய்தித் தொடர்புப் பிரிவுக்கு அந்தோணி ஸ்காரமூச்சி இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். வரும் ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி பொறுப்பேற்கிறார்.

- பாகிஸ்தானுக்கு அளிக்கப்பட இருந்த சுமார் ரூ2300 கோடி (350 மில்லியன் அமெரிக்க டாலர்) நிதியை நிறுத்தி வைப்பதற்கு அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

- இந்தியாவின் நகரங்களில் அதிவேகமாக உயர்ந்து வரும் மக்கள் தொகையை கருத்தில் கொண்டு நாடு முழுவதும் 100 பொலிவுறு நகரங்களை அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. உள்கட்டமைப்பு மற்றும் மக்களின் பயன்பாட்டுத் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படா விட்டால் இந்தியாவின் 'பொலிவுறு நகரங்கள்' திட்டம் சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தும் என பிரிட்டனின் லிங்கன் பல்கலைக்கழக சுற்றுச்சூழல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

- அமெரிக்காவிற்கான ரஷ்ய தூதர் செர்கி கிஸ்லியாக் தனது பதவி காலத்தை நிறைவு செய்தார்.

- பதற்றத்தை தணிக்க நேரடியான பேச்சுவார்த்தையில் ஈடுபட இந்தியா – சீனாவை ஊக்குவிக்கிறோம் என அமெரிக்காவின் பெண்டகன் கூறியுள்ளது.

**ஜூலை – 24**

- எகிப்தின் மிகப் பெரிய இராணுவத் தளத்தை அந்நாட்டு அதிபர் அப்தெல் ஃபதா அல்-சிசி நாட்டுக்காக அர்பணித்தார். எகிப்தின் மத்திய கிழக்குப் பகுதியிலே இந்த இராணுவத் தளம் மிகப் பெரியது என்பது குறிப்பிடத்தக்கது.

- பாகிஸ்தானுக்கு அதிநவின ஹெலிகாப்டரை ரஷியா விற்பனை செய்துள்ளது. இந்த நிகழாண்டில் பாகிஸ்தானுக்கு ரஷியா விற்பனை செய்யும் இரண்டாவது ஹெலிகாப்டர் ஆகும். இது இரு நாடுகளுக்கு இடையே உள்ள உறவில் மேலும் நெருக்கம் ஏற்பட்டிருப்பதை வெளிப்படுத்துகிறது.

- ரஷியாவின் "மிக் ஏர்கிராப்ட் கார்ப்பரேஷன" மிக் ரக விமானங்களை தயாரித்து அளிக்கிறது. இந்த நிறுவனத்தின் மிக் ரக போர் விமானங்களை இந்தியா கடந்த 50 ஆண்டுகளாக வாங்கி பயன்படுத்தி வருகிறது. எந்தவொரு தனது புதிய தயாரிப்பையும் இந்தியாவுக்கு சப்ளை செய்வதில் இந்த நிறுவனம் ஆர்வம் கொண்டுள்ளதாக மிக் ஏர்கிராப்ட் கார்பரேஷன் தலைமை செயல் அதிகாரி இல்யா தாராசெங்கோ தெரிவித்துள்ளார்.

- நிலநடுக்கம் மற்றும் சுனாமியால் தகர்ந்த ஜப்பானில், கடந்த ஆறு வருடங்களாக தூய்மைப்படுத்தும் பணி நடந்து வருகிறது. “லிட்டில் கன்பிஷ்” எனும் ரோபாவின் உதவியுடன் ஆய்வு நடத்தியப் போது ஃபூகுஷிமா அணு உலையில் உறைந்த நிலையில் அணு எரிபொருள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

- அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் போது தலையிட்ட விவகாரத்தில் ரஷியா மீது புதிய பொருளாதார தடைகள் விதிப்பதற்கு குடியரசு, ஜனநாயக கட்சிகள் இடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

- இந்தோனேசியாவின் அதிபர் ஜோகோ விடோடோ போதை பொருள் கடத்தல்காரர்களை ஒடுக்குவதற்க்காக கடும் நடவடிக்கை எடுத்து வருகிறார். உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனை செய்வதில் யாராவது ஈடுபட்டிருந்தால் அவர்களை சுட்டுகொலை செய்வதற்கு உரிமை அளிக்கப்பட்டது.

- இந்தியாவில் அதிவேகமாக உயர்ந்த வரும் மக்கள் தொகையை கருத்தில் கொண்டு, நாடு முழுவதும் 100 “பொலிவுறு நகரங்கள்”(ஸ்மார்ட் சிட்டி) அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இந்நிலையில் உள்கட்டமைப்பு மற்றும் மக்களின் பயன்பாட்டுத் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காவிட்டால் இந்தியாவின் “பொலிவுறு நகரங்கள்” திட்டம் சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தும் என்று பிரிட்டனில் உள்ள லிங்கன் பல்கலைக்கழக சுற்றுச்சூழல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

- சிரியா ராணுவம் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்தே ரசாயன ஆயுதங்களைப் பயன்படத்தவில்லை, ரசாயன ஆயுதங்கள் யாவும் அழிக்கப்பட்டன எனவும் பென்டகனின் உயர் அதிகாரிகளின் தலைவர் ஜோசப் டன்ஃபோர்ட் தெரிவித்துள்ளார்.

**ஜூலை – 25**

- பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து கனிமங்களை ஏற்றுமதி செய்வதை தடை செய்ய வேண்டும் என்று அந்நாட்டு அதிபர் டுடர்டே தெரிவித்துள்ளார்.

- பாகிஸ்தானில் செயல்பட்டு வரும் சீன தூதரகத்தின் உதவியோடு பாகிஸ்தான் ஆசிரியர்களுக்கு சீன மொழி கற்பிக்கப்பட்டு வருகிறது. இந்த பயிற்சி வகுப்புகள் சீன அரசாங்கத்தால் நடத்தபட்டு வருகிறது.

- மியான்மரில் பெய்து வருகின்ற கனமழை காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதால், அந்நாட்டின் மத்தியிலுள்ள பௌத்த தேவாலயம் ஒன்று வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

- இந்தியாவுடன் உறவுகளை மேம்படுத்த பாகிஸ்தானுக்கு, அமெரிக்கா அறிவுரை கூறி உள்ளதாக பாகிஸ்தானின் “தி நேஷன்” பத்திரிக்கை, செய்தி வெளியிட்டுள்ளது.

- சீன மக்கள் “விடுதலை இராணுவ படையை” அசைக்கக்கூட முடியாது என இந்தியாவுக்கு நேரடியாக சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

➢ துருக்கியில் அரசுக்கு எதிரான தினசரி நாளிதழில் பணியாற்றி வந்த 17 பத்திரிக்கையாளர்கள் பயங்கரவாத அமைப்புடன் தொடர்பு வைத்திருந்ததால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

➢ ஐஎஸ் தீவிரவாதிகளின் கோட்டையாக விளங்கிய மொசூல் நகரை ஈராக் இராணுவப்படையினர் கைப்பற்றியப்பின் அங்குள்ள ஐஎஸ் தீவிரவாதிகள் பெண்கள் போன்று வேஷமிட்டு அந்நகரை விட்டு தப்பி செல்ல முயற்சி செய்த போது ஈராக் இராணுவப் படையிடம் சிக்கி கொண்டனர்.

➢ தென் சீனக் கடலின் கதிர்வீச்சைக் கண்டறியும் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க விமானத்தை சீனாவின் 2 போர் விமானங்கள் இடைமறித்ததால் பதற்றம் ஏற்பட்டு அமெரிக்க விமானம் வேறு வழியில் திருப்பி விடப்பட்டது.

➢ இஸ்ரேல் அல்-அக்ஷா மசூதியில் பொருத்தப்பட்டுள்ள மெட்டல் டிடெக்டர்களை அகற்றுமாறு நடத்தப்பட்ட போராட்டத்தின் விளைவாக இஸ்ரேல் அரசு மசூதியின் மெட்டல் டிடெக்டர்களை அகற்றியுள்ளது.

**ஜூலை – 26**

➢ அமெரிக்க குடியுரிமையின்றி, அங்கு தங்கி வேலை செய்பவர்களுக்கு 'எச்1பி' விசா, ''பிரிமியம் பிராசசிங்'' முறையில் வழங்கப்படுகிறது.

➢ 'ஆல்.ஃ.பபெட்' நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவராக கூகுள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி (சிஇஓ) சுந்தர் பிச்சை நியமிக்கப்பட்டுள்ளார். ஆல்.ஃ.பபெட் நிறுவனம் கூகுளின் தாய் நிறுவனமாகும்.

➢ அமெரிக்கர்கள் வடகொரியாவுக்கு வருவதற்கு அமெரிக்க அரசு தடை செய்துள்ளதால் வடகொரியாவின் சுற்றுலா துறைக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என்றும், இந்த தடைக் குறித்து எந்த கவலையும் இல்லை என்றும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

➢ கொரிய போர் 1953-ம் ஆண்டு ஜூலை 27-ம் தேதி முடிந்தது. இந்த வெற்றி தினத்தை முன்னிட்டு வடகொரியா மேலும் ஒரு ஏவுகணை சோதனையை நடத்த திட்டமிட்டுள்ளதாக அமெரிக்கா மற்றும் தென்கொரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

➢ ஆசிய பசிபிக் பகுதியில் தனது இலக்குகளை அடைவதற்கும் தனது செல்வாக்கை நிலைநிறுத்தவும் பல்வேறு தந்திரமான உத்திகளை சீனா பயன்படுத்தி வருகிறது என்று அமெரிக்க புலனாய்வு நிறுவனமான சிஐஏ தெரிவித்துள்ளது.

➢ உலகின் தொலைத்தூரப் பகுதிகளில் கீரின்லாந்தும் ஒன்று. அங்குள்ள உறைப்பனியின் நிறம் கருப்பாக மாறிவருகிறது. கருப்பு நிற பனி அதிக அளவு சூரிய கதிர்களை உட்கொள்வதால் மிக வேகமாக கரையும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் கடல் மட்டம் உயர்ந்து பிரிட்டன் மற்றும் வங்கதேசம் போன்ற நாடுகளுக்கு பாதிப்பு ஏற்படலாம் என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

➢ ஆமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பின் முகமுடியை அணிந்து கொண்டு இத்தாலியில் ஒரு ஏடிஎம் இயந்திரத்தை உடைத்து 1லட்சம் யூரோவைக் கொள்ளையடித்த இருவர் அந்நாட்டு போலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

➢ உலகின் மிகப் பரப்பரப்பான கப்பல் பாதையான இலங்கையில் புதிய துறைமுகம் அமைக்கும் சீனாவின் ஒப்பந்தத்தில் சிறிசேனா மந்திரிசபை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஒப்பந்தத்தின்படி சீனா இத்துறைமுகத்தை வர்த்தக பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தலாம் மேலும் இராணுவ நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஜுலை – 27**

➢ அமெரிக்க ராணுவத்தில் திருநங்கைகள் சேர அனுமதி கிடையாது என்று அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவித்துள்ளார்.

➢ ரஷியா, ஈரான், வடகொரியா மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கை அமெரிக்க பாராளுமன்ற மசோதாவில் நிறைவேறியது.

➢ அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் தீர்மானமான ரஷிய பொருளாதார தடை ரஷ்யாவுக்கும் அமெரிக்காக்கும் இடையேயான உறவுகளை சிதைக்கும் என்று ரஷ்யாவின் துணை வெளியுறவுத் துறை அமைச்சர் கூறியுள்ளர்.

➢ பெட்ரோல், டீசல் கார்களை 2040 ஆம் ஆண்டிற்குள் தடை செய்ய வேண்டும் என்றும் அதைதொடந்து 2050 ஆண்டிற்குள் படிம எண்ணெய் வகைகளான பெட்ரோல், டீசலை தடை செய்ய வேண்டும் என்றும் ஜெர்மன் திட்டமிட்டுள்ளது.

➢ ஜெர்மனியை சேர்ந்த பிரபல விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டனின் (1951ம் ஆண்டு 72வது) பிறந்த நாளின் போது எடுக்கப்பட்ட அரிய புகைப்படம் ஒன்று தற்போது அமெரிக்காவில் ஏலத்திற்கு வந்துள்ளது.

➢ அமெரிக்காவை தலைமையிடமாக கொண்டு இயங்கும் 'த்ரீ ஸ்கொயர் மார்கெட்' என்ற தொழில்நுட்ப நிறுவனமானது பல்வேறு அலுவலக பயன்பாடுகளுக்கு ஏற்ற வகையில், தனது ஊழியர்களின் உடலில் ரேடியோ அதிர்வெண் அடிப்படையில் இயங்கும் 'சிப்' ஒன்றை பொருத்த முடிவு செய்துள்ளது. அதற்கான விழா ஆகஸ்ட் 1ம் தேதி நடைபெறுகிறது.

➢ சனிக் கிரகத்தில் ஹெக்சாகன் வடிவிலான ரகசிய நுழைவு வாயில் இருப்பதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அவை ஏலியன்கள் பயன்படுத்தியதாக இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

➢ பூமிக்கு அடியில் மிக ஆழமாக(31மாடி) - மெட்ரோ இரயில் நிலையம் அமைக்க சீனா திட்டமிட்டுள்ளது.

- ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாத தடுப்பு பட்டியலில் இருந்து, இலங்கையின் விடுதலைப் புலிகள் அமைப்பினை நீக்க வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

- ஜப்பானில், வெளிநாட்டு சுவை கொண்ட கிட்கேட் சாக்லெட்டிற்கு ஏற்பட்டுள்ள தேவையால் 25 வருடங்களுக்கு பிறகு முதல்முறையாக நெஸ்லே நிறுவனம் அங்கு தொழிற்சாலையை திறக்கவுள்ளது.

**ஜூலை – 28**

- உலகின் மிகப்பெரும் பணக்காரார் பட்டியலில் முதலிடத்தில் இருந்த பில்கேட்சை(90 மில்லியன் டாலர்கள்), அமேசான் நிறுவனர் ஜெப் பேசாஸ்(90.60 மில்லியன் டாலர்கள்) பின்னுக்கு தள்ளினார்.

- பிரிக்ஸ் நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் பங்கேற்கும் 2 நாள் கூட்டம் சீன தலைநகர் பீஜிங்கில் நடந்தது. இந்த கூட்டத்தில் இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா, ரஷியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

- அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா பதவியில் இருந்த போது, ஏழை எளிய மக்களும் மருத்துவ காப்பீடு செய்துகொள்ள,குறைந்த பிரிமியத்தில் ‘ஒபாமா கேர்’ என்ற பெயரில் ஒரு திட்டத்தை கொண்டு வந்தார். சுமார் 2 கோடி மக்கள் இத்திட்டத்தால் பலன் அடைந்திருக்கின்றனர். தற்போதைய அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் இத்திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று பல்வேறு முயற்சிகளை கைக்கொண்டார், அம்முயற்சிகள் தோல்வியில் முடிந்தது.

- அமெரிக்காவில் அரசுக்கு தெரியாமல் துப்பாக்கியின் பாகங்கள் மற்றும் சைலன்சர்கள் விற்ற மொஹித் சவுகான் என்ற இந்தியர் அந்நாட்டு போலிசாரால் கைது செய்யப்பட்டார். அவருக்கு 30 மாதங்கள் சிறை தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

- சீனாவுடன் இந்திய அரசு கொண்டுள்ள உறவு பன்முகத்தன்மை வாய்ந்தது. இரு நாடுகளுக்கு இடையேயான கருத்து வேறுபாடுகள் பக்குவமான முறையில் கையாளப்பட்டு வருகின்றன என்று நாடாளுமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- அமெரிக்க மாணவர்கள் மிக உயர்தரமான கல்வியைப் பெற வேண்டும் என்று மாணவர்களின் நலன் கருதி அமெரிக்க கல்வித் துறைக்கு தனது மூன்று மாத ஊதியத்தை நன்கொடையாக வழங்க அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் முடிவு செய்துள்ளார்.
- ஆசிய நோபல் பரிசு - என்று அழைக்கப்படும் “மகசேசே விருதுக்கு” இலங்கையைச் சேர்ந்த தமிழ் சமூக சேவகர் ஞானதீபம் ஷன்முகம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- மலேசியாவில் தொழிலாளர்கள் மத்தியில் குடிவரவுத்துறை சோதனையை மேற்கொண்டது இதில் முறையாக பதிவு செய்யாத வெளி நாடுகளிலிருந்து வந்த 5065 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என மலேசிய குடிவரவுத்துறையின் இயக்குநர் ஜெனரல் முஸ்தாபர்அலி தெரிவித்துள்ளார்.

## ஜுலை – 29

- பல்வேறு நாடுகளின் எதிர்ப்பை மீறி ஏவுகணை சோதனையில் ஈடுபட்டுள்ள வடகொரியா அரசு, தற்போது ஒட்டுமொத்த அமெரிக்காவையும் எங்களால் தாக்க முடியும் என்று தெரிவித்துள்ளது.

- **பாகிஸ்தான்** பிரதமர் நவாஸ் ஷெரீப் ராஜினமா செய்தார். இவரின் இளைய சகோதரரும் பஞ்சாப் மாகாண முதல் மந்திரியுமான **ஷாபாஸ் ஷெரீப் புதிய பிரதமராக பதவி ஏற்க உள்ளார்**.

- புதிய பொருளாதார தடை விதிக்கும் மசோதா, அமெரிக்காவில் நிறைவேறியதால் அதற்கு பதிலாக ரஷிய தலைநகர் மாஸ்கோவில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைக்குமாறு ரஷிய வெளியுறவுத் துறை உத்தரவிட்டுள்ளது.

- வெனிசூலா, தலைநகர் கராக்கஸில் உள்ள அமெரிக்க தூதரக ஊழியர்களின் குடும்பத்தினர் நாடு திரும்புமாறு அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

- **அமெரிக்கா – மெக்ஸிகோ இடையே எல்லைச் சுவர் எழுப்ப தனி நிதி ஒதுக்கிடு ரூ.78,960 கோடி டாலருக்கான (சுமார் ரூ51.32 லட்சம் கோடி) பட்ஜெட்டுக்கு அமெரிக்க நாடாளுமன்றத்தின் கீழவை ஒப்புதல் வழங்கியுள்ளது.**

- **செயற்கைக் கோளை ஏற்றிச் செல்லும் திறன் கொண்ட சிமோர்க் ரக ஏவுகணையை விண்ணில் செலுத்தி புதிய சோதனையை ஈரான்** மேற்கொண்டுள்ளது என்று அமெரிக்க வெளியுறவுத் துறை குற்றஞ்சாட்டியுள்ளது

- தீவிரவாத அமைப்புக்கு ஆதரவாக செயல்படும் ‘பாண்டேசன் அல்கராமா’ எனும் தொண்டு நிறுவனம் மனித உரிமை ஆணையத்திற்கு ஆலோசனை வழங்குவதை ஐ.நா தடை செய்துள்ளது.

- **உலகில் முதன் முறையாக ஊழியர்களின் உடலில் மைக்ரோசிப் பொருத்தியது - ஸ்வீடன் நிறுவனம் ஏப்ரல் - 3, 2017**

## ஜுலை – 30

- இலங்கையில் உள்ள அம்பாந்தோட்டை துறைமுக மேம்பாடு, பயன்பாடு தொடர்பாக இலங்கை – சீனா இடையே 99 ஆண்டு காலத்துக்கான உடன்படிக்கை ஜுலை 29ல் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தின்படி துறைமுகத்தில் 70 சதவீதப் பங்கு சீன அரசுக்கு சொந்தமான வணிகத் துறைமுக நிறுவனத்துக்கு அளிக்கப்படும். துறைமுக பயன்பாடு மேம்பாட்டுக்கு சீனா 110 கோடி டாலர் முதலீடு செய்யவுள்ளது.

- பாகிஸ்தானில் நவாஸ் ஷெரீப் ராஜினாமாவை அடுத்து இடைக்கால பிரதமராக அப்பாசி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

- தென்சீனக் கடல் பகுதி எண்ணெய், இயற்கை எரிவாயு வளமிக்க பகுதி ஆகும். இந்த தென்சீனக் கடல்பகுதியில் சோதனை ரீதியில் எரியக் கூடிய பனி என்று அழைக்கப்படக் கூடிய மீத்தேன் ஹைட்ரேட்டில் இருந்து இயற்கை எரிவாயுவை சீனா சோதனை ரீதியில் உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது.

- தங்களது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள பயங்கரவாதத்தை உலக நாடுகள் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தக் கூடாது என ஐ.நாவில் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

- லண்டனில் உள்ள செயிண்ட் சார்ஜ் மருத்துவமனையில் உயிர்காக்கும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் உதவியால் கண்காணிக்கப் பட்டு வந்த இரட்டைக் குழந்தைகளை இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 37 வயதான சூரி என்ற பெண் பெற்றெடுத்துள்ளார்.

- தீவிரவாத அமைப்புகளுக்கு ஆதரவாக ‘பாண்டேசன் அல்கராமா’ எனும் தொண்டு நிறுவனம் செயல்படுவதாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அறிவித்தது. இது தொடர்பான விவாதம் ஐ.நா. பொருளாதார சமூக அமைப்பில் கடந்த 26ம் தேதி நடந்தது.

- கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து தாக்கவல்ல இரண்டாவது ஏவுகணைச் சோதனை முக்கிய அமெரிக்க நகரங்களையும் இலக்காக்கும் திறன் கொண்டது என வடகொரிய அதிபர் கிம் ஜோங் தெரிவித்துள்ளார்.

**ஜூலை - 31**

- உலகிலேயே மிக நீளமான தொங்கும் நடைபாதை : ஸ்விட்சர்லாந்தின் ஸெர்மாத் - 500 மீட்டர்(1,640 அடி) நீளம்.

- பாதசாரிகள் சாலையை கடக்கும் போது மொபைல் போன் மற்றும் பிற மின்னணு சாதனங்களை பயன்படுத்துவதற்கு அமெரிக்காவில் உள்ள ஹொனொலுலு நகர நிர்வாகம் தடை விதித்துள்ளது.

- இலங்கையில் உள்ள அம்பாந்தோட்டை துறைமுக மேம்பாடு தொடர்பாக இலங்கை – சீனா இடையே 99 ஆண்டுக்கான உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டன.

- இராணுவ தளவாடங்களையும், வீரர்களையும் சுமந்து செல்வதற்காக ரஷியாவிடமிருந்து அதிநவீன 48 எம்ஐ – 17 ரக ஹெலிகாப்டர்களை வாங்க இந்தியா முடிவு செய்துள்ளது.

- ரஷியாவில் இருந்து அமெரிக்க தூதரக அதிகாரிகள் 755 பேர் வெளியேற வேண்டும என ரஷிய அதிபர் விளாடிமீர் புதின் உத்தரவிட்டுள்ளர்

- தைவானில் “நேவாட்’ என்னும் புயல் நேற்று(30.07.2017) தாக்கியது. இதனால் 80-க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர். பல்லாயிரம் வீடுகள் இருளில் மூழ்கின.

- அமெரிக்கா, கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து தாக்கும் ஏவுகணைகளை துல்லியமாக குறி வைத்து இடைமறித்து தாக்கி அழிக்கும் "தாட்" என்ற ஏவுகணையை கண்டுபிடித்து சோதனையை மேற்கொண்டது இச்சோதனை வெற்றியில் முடிந்தது.

- பல்வேறு துறைகளில் முன்னேறி வரும் இந்தியாவிற்கு, ஜப்பான் எப்போதும் ஆதரவு தரும் என்று இந்தியாவிற்கான ஜப்பான் தூதர் ரியோஜி நோடா கூறியுள்ளார்.

- பிரான்ஸ் நாட்டிலுள்ள ஆல்ப்ஸ் மலையில் 1966ம் ஆண்டு ஏர் இந்தியா விமானம் ஒன்று விபத்துக்குள்ளானது. இதில் பயணித்த பெண்ணின் சிதைந்த கை தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டுச் செய்திகள்:

### ஜூலை – 1

- மண்டல வாரியாக பயிற்சி அளிப்பதற்காக இந்திய பாட்மிண்டன் சங்கம் உருவாக்கியுள்ள பயிற்சியாளர்கள் குழுவில் முன்னாள் வீரர்களான அரவிந்த் பாட், ஜூவாலா கட்டா உள்ளிட்டோர் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

- இலங்கைக்கு எதிரான முதல் ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டத்தில் 6 விக்கெட் வித்தியாசத்தில் ஜிம்பாப்வே வெற்றி கண்டது.

- இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் ஆசிய தடகள போட்டிகள் ஒடிஸா மாநிலம் புவனேஷ்வரில் 6ம் தேதி முதல் 9ம் தேதி வரை நடைபெறுகிறது. இது 22வது ஆசிய தடகள போட்டி ஆகும். இந்த தொடரில் இந்தியா சார்பில் 95 பேர் அடங்கிய அணி கலந்து கொண்டு விளையாட உள்ளது.

- மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 3ஆவது ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டத்தில் இந்தியா 93 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இப்போட்டியில் இந்திய அணியின் சுழல்பந்து வீச்சாளரான அஸ்வின் ஒரு நாள் போட்டியில் விரைவாக 150 விக்கெட்டுகள் எடுத்த சுழல் பந்து வீச்சாளர்கள் பட்டியலில் இடம் பிடித்தார்.

- மகளிர் உலக கோப்பை கிரிக்கெட் தொடரில் லீக் சுற்றின் 2வது ஆட்டத்தில் மேற்கிந்திய தீவுகளை 7 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணி வீழ்த்தி வெற்றி பெற்றது.

- இந்திய 'ஏ' மற்றும் ஜூனியர் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக உள்ள ராகுல் டிராவிட் ஒப்பந்தம் இந்த மாதத்துடன் முடிய உள்ள நிலையில் மேலும் 2 ஆண்டுகள் இந்த பதவியில் நீடிப்பார் என இந்திய கிரிக்கெட் வாரியம் நேற்று அதிகார பூர்வமாக அறிவித்தது. இவர் 2015ம் ஆண்டு முதல் இப்பதவியில் இருந்து வருகிறார்.

- 2016ம் ஆண்டு ரியோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பேட்மிண்டன் பிரிவில் பிவிசிந்து வெள்ளி பதக்கம் வென்றதற்காக பிவி சிந்து ஆந்திர அரசின் வருவாய் துறை அதிகாரியாக நியமிக்கப்பட உள்ளார். சிந்துவை நேரடியாக நியமிப்பதற்கான அரசு ஆணை கடந்த மாதம் ஆந்திர சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

## ஜூலை – 2

- மே.இ.தீவுகளுக்கு எதிரான 3–வது ஒருநாள் போட்டியில் தோனியின் அரைசதத்தினாலும் ஸ்பின்னர்களினாலும் இந்திய அணி 251 ரன்கள் இலக்கே வெற்றியாக மாறியது என்று தோனி கருத்து தெரிவித்துள்ளார்.

- இந்தியா ஏ அணியின் பயிற்சியாளரான ராகுல் ராவிட் ஊதியம் ரூ.2.5 கோடியிலிருந்து ரூ.5 கோடியாக உயர்ந்துள்ளது.

- புவனேஷ்வரில் நடைபெற உள்ள ஆசிய தடகள போட்டியில் 95 பேர் கொண்ட இந்திய அணி கலந்து கொள்ள போவதாக அறிவிப்பு வெளியாகிவுள்ளது.

- மெக்சிகோவின் பலவீனமான துடுப்பு உத்தியை சரியாக பயன்படுத்திய ஜெர்மணி கான்பெடரேஷன் கோப்பை அரையிறுதியில் 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியில் சிலி அணியை சந்திக்க உள்ளது.

- மகளிர் உலக கோப்பை கிரிக்கெட் தொடரில் ஸ்மிரிதி மந்தனா அதிரடி சதத்தால் மேற்கிந்திய தீவுகளை வீழத்தி வெற்றி பெற்றது இந்திய அணி.

- இலங்கைக்கு எதிரான முதல் ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டத்தில் 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது ஜிம்பாப்வே அணி.

- மகளிர் உலக கோப்பை கிரிக்கெட் தொடரில் இந்திய அணியும் பாகிஸ்தான் அணியும் இன்று(02—7-2017) மோதி கொள்கின்றன.

## ஜூலை – 3

- கான்பெடரேஷன் கோப்பை கால்பந்து போட்டியில் சிலியை வீழ்த்தி ஜெர்மணி அணி சாம்பியன் பட்டம் வென்றது.

- அடுத்த மாதம் நடைபெற உள்ள உலக சாம்பியன்ஷிப் பாட்மிட்ன் தொடரில் இந்திய வீரர்களுக்கு பதக்கம் வெல்ல வாய்ப்பு இருப்பதாக நட்சத்திர வீரர் கிடாம்பி ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.

- சென்னை மாவட்ட பி டிவிசன் லீக் கைப்பந்து போட்டி எழும்பூர் மேயர் ராதா கிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நடைப்பெற்று வருகிறது.
- மகளிர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது இந்திய அணி.

- கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் இன்று தொடங்குகிறது.

- 2017-2018 ம் ஆண்டுகளில் நடைபெறவுள்ள சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கான அம்பயர்கள் அறிவிப்பு வெளியானது. இந்தியாவில் இருந்து சுந்தரம் ரவி மட்டும் இடம் பெற்றுள்ளார்.

- ஜிம்பாவேக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 7 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கை அணி வெற்றி பெற்றது.

- **ஜூலை – 4**

- விம்பிடன் டென்னிஸ் போட்டியில் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே மற்றும் கஜகஸ்தானின் அலெக்ஸாண்டர் பப்ளிக் இருவரும் மோதி கொண்டர்.இப்போட்டியில் ஆன்டி முர்ரே வெற்றி பெற்றார்.

- பரபரப்பான போட்டியில் சிலியை வீழ்த்தி கான்பெடரேஷன் கோப்பையை வென்று உலகின் சிறந்த கால்பந்து அணி என்று நிரூபித்து காட்டியது ஜெர்மனி அணி.

- 189 ரன்கள் இலக்கை விரட்ட முடியாமல் மே.இ.தீவுகளுக்கு எதிராக இந்திய அணி தோல்வியுற்றது.

- உலக குத்துச்சண்டை போட்டி நேற்று நடைபெற்றது. இதில் பிலிப்பைன்ஸ் நாட்டின் வீரரான மானி பக்வாயோவும் ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த ஜெப் ஹார்னும் மோதினர். இதில் ஜெப் ஹார்ன் உலக சாம்பியன் பட்டத்தை வென்றார்.

- ஐஎஸ்எல் சென்னை அணியின் பயிற்ச்சியாளராக ஜான் கிரேகரி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

- பெண்கள் உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் **மேற்கு இந்திய தீவுகளை** 48 ரன்னில் சுருட்டியது தென் ஆப்பிரிக்கா அணி.

- சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் கவுதமாலா வீரர் ஹாம்பிளர்ஸ் ஹேமண்டை தமிழக வீரரான கே. கரண்ராஜ் வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றார்.

**ஜூலை -5**

- விம்பிள்டன் டென்னிசில் முதல் சுற்றில் செர்பியாவின் ஜோகோவிச் ஜெர்மனி கெர்பரை வீழ்த்தி வெற்றி பெற்று இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

- தமிழ்நாடு தடகள சங்கத்தின் அனுமதியுடன் 21 கிலோ மீட்டர் 5 கிலோ மீட்டர் என்று இரு பிரிவுகளாக மிகப் பெரிய மரத்தான் போட்டி விருதுநகர் மாவட்டம் இராஜபாளயத்தில் வரும் 9ம் தேதி நடைபெறவுள்ளது. இதில் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த வீரர் வீராங்கனைகளும் மாணவ மாணவிகளும் கலந்து கொள்ளலாம். இப்போட்டியை இராஜபாளையம் சுரன் நர்சிங் கல்லூரி நடத்துகிறது என்பது குறிப்பிடதக்கது.

- 3 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள சுவிட்சர்லாந்தின் வாவ்ரிங்கா விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் முதல் சுற்றில் அதிர்ச்சி தோல்வியுற்றார்.

- டிஎன்பிஎல் டி20 கிரிக்கெட் தொடர் ஜுலை 22ம் தேதி முதல் நடைபெற உள்ளதால் சென்னை உள்ளிட்ட 6 இடங்களில் ரசிகர்கள் பூங்கா என்ற தலைப்பில் பிரமாண்ட திரையில் ஆட்டத்தை நேரலையாக காணும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.இது ரசிகர்கள் மத்தியில் பெறும் வரவேற்பை பெற்றுள்ளது.

- பாகிஸ்தான் டெஸ்ட் கிரிக்கெட் அணியின் கேப்டனாக சர்ப்ராஸ் நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய தலைவர் அறிவித்துள்ளார்.

- 45 நாடுகள் பங்கேற்கும் ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போடடி புவனேஸ்வரத்தில் இன்று தொடங்கி 9ம் தேதி வரை நடை பெறுகிறது.

- யு-20 உலகக் கோப்பை கால்பந்து போட்டியை இந்தியாவில் நடத்துவதற்கு ஆர்வமுடன் இருப்பதாக அகில இந்திய கால்பந்து சம்மேளம் (ஏஐஎ.ஃப்எ.ஃப்) சர்வதேச கால்பந்து சங்கங்களுக்கான சம்மேளனத்திடம்(.ஃபி.ஃபா) தெரிவித்துள்ளது.

**ஜுலை -6**

- பெண்கள் உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி இலங்கையை வீழ்த்தி 4 வது முறையாக வெற்றி பெற்றது.

- விம்பிள்டன் டென்னிசில் போட்டியில் ஆண்கள் பிரிவில் பிரான்ஸ் வீரர் சோங்காவும் பெண்கள் பிரிவில் பெலாரஸை சேர்ந்த அஸரென்காவும் 3 வது சுற்றுக்கு முன்னேறிவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

- ஆஸ்திரேலிய ஓபன் டேபிள் டென்னிஸ் போட்டியில் பெண்கள் இரட்டையர் பிரிவில் இந்திய அணியினர் வெண்கல பதக்கம் பெற்றனர்.

- 17 வயதிற்கு உட்பட்டோருக்கான உலக கோப்பை கால்பந்து போட்டிக்கான அட்டவணை இன்று வெளியானது. இப்போடடியில் இந்தியா உள்ளிட்ட 24 அணிகள் கலந்து விளையாட உள்ளனர் என்பது தெரியவருகிறது.

- கடைசி ஒரு நாள் போட்டியில் இந்தியா அணியும் மேற்கிந்தியத் தீவும் இன்று விளையாட உள்ளனர். இன்று இந்திய அணியினர் வெற்றி பெறும் நோக்கத்தில் விளையாடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

- இங்கிலாந்து தென் ஆப்பிரிக்கா அணிகளுக்கான முதல் டெஸ்ட் போட்டி இன்று தொடங்குகிறது. இங்கிலாந்தின் முன்னணி பேட்டிங்மன் ஆன ஜோ ரூட் கேப்டன் ஆக நியமித்தப் பிறகு விளையாடும் முதல் போட்டி இது என்பது குறிப்பிடத்தக்கது.

**ஜுலை -7**

- விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் குடியரசின் பாவ்லஸ்கை வீழ்த்தி 3வது சுற்றுக்கு முன்னேறினார் செர்பியாவின் கோவிச்.


We Shine Academy ™

➢ கால்பந்து தரவரிசை பட்டியலில் இந்திய அணி 96 வது இடத்திற்கு முன்னேறி உள்ளது.

➢ ஆசிய இளைஞர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் உலக இளையோர் சாம்பியனும் இந்தியருமான சச்சின் சிவச் 49 கிலோ எடைப் பிரிவில் இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார்.

➢ ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய குண்டு எறிதல் வீராங்கனை மன்பிரீத் கௌர் தங்க பதக்கத்தையும் ஆடவர் வட்டு எறிதல் போட்டியில் இந்தியாவின் விகாஸ் கௌடா வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்கள்.

➢ இங்கிலாந்தில் நடந்து வரும் பெண்கள் உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் 16 வது லீக்கில் நியூசிலாந்து வெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோதின இதில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றது.

➢ ஜிம்பாவேக்கு எதிரான 3 வது ஒருநாள் போட்டியில் டிக்வெல்லா குணதிலகா ஆகியோரின் சதத்தால் இலங்கை அணி வெற்றி பெற்றது.

**ஜூலை - 8**

➢ வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி விராட்கோலி சதத்தால் இந்திய அணி அபார வெற்றி.

➢ தென் ஆப்பிரிக்காவிற்கு எதிரான முதலாவது டெஸ்ட் நேற்று தொடங்கியது இங்கிலாந்து அணி 458 ரன்கள் குவித்தனர்.

➢ 17 வது ஜூனியர் உலக கோப்பை கால்பந்து (17 வயதிற்குட்பட்டோர்) போட்டி அக்டோபர் 6ம் தேதி முதல் 28ந்தேதி வரை இந்தியாவில் ஆறு இடங்களில் நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

➢ ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இன்று ஒரே நாளில் 4 தங்கம் தலா 1 வெள்ளி மற்றும் வெண்கலம் வென்று அசத்தி உள்ளனர். தமிழ்நாட்டை சேர்ந்த லெட்மணன் என்ற வீரர் தங்கம் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

➢ இந்த ஆண்டின் சிறந்த விளையாட்டு வீராங்கனைக்கான மாருதி சுசுகி விருது ரியோ ஒலிம்பிக் போட்டியில் வெள்ளி பதக்கம் வென்ற பாட்மிண்டன் வீராங்கனையான பி.வி.சிந்துக்கு வழங்கப்பட்டது.

➢ ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் சச்சின் சிவக் 49 கிலோ எடைப்பிரிவில் வெள்ளி பதக்கம் வென்றார்.

➢ மகளிர் உலகக் கிரிக்கெட் தொடரில் இன்று தென் ஆப்பிரிக்கா அணியுடன் இந்திய அணி மோதுகிறது. அரை இறுதி சுற்றுக்கு முன்னேற வேண்டுமென்றால் இந்த போட்டியில் வென்றாக வேண்டிய கட்டாயத்தில் தென் ஆப்பிரிக்கா அணி உள்ளது.

## ஜூலை -9

- இலங்கைக்கு எதிரான 4வது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் ஜிம்பாப்வே அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

- ரியோ ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற பாட்மிண்டன் வீராங்கனை பி.வி.சிந்துவுக்கு இந்த ஆண்டின் சிறந்த விளையாட்டு வீராங்கனைக்கான மாருதி சுசுகி விருது வழங்கப்பட்டது.

- தெற்கு ஆஸ்திரேலிய ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்திய வீரர் ஹரிந்தர் சாந்து சாம்பியன் பட்டம் வென்றார்.

- ஒடிஸா தலைநகர் புவனேசுவரத்தில் நடைபெற்று வரும் 22வது ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியின் மகளிர் 3000 மீ ஸ்டீபிள்சேஸ் பிரிவில் இந்தியாவின் சுதாசிங் தங்கப் பதக்கம் வென்றார்.

- இலங்கையின் அம்பணத் தோட்டத்தில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் டக்வொர்த் லீவிஸ் விதிப்படி 4 விக்கெட் வித்தியாசத்தில் ஜிம்பாப்வே அணி இலங்கை அணியைத் தோற்கடித்தது.

- தமிழகத்தை சேர்ந்த கிரிக்கெட் வீரர் அருண் கார்த்திக் வரும் சீசனில் கேரள கிரிக்கெட் அணிக்காக விளையாட ஒப்பந்தம் செய்யப்படுகிறார். அருண் கார்த்திக் கடந்த ஆண்டில் அசாம் அணிக்காக விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜூலை -10

- ஆசிய தடகள போட்டியில் 10 ஆயிரம் மீட்டர் ஓட்டத்திலும் தமிழக வீரர் லெட்மணன் தங்கப்பதக்கம் வென்று அசத்தினார்.பதக்கப் பட்டியலில் இந்தியா முதலிடத்தை பிடித்து புதிய வரலாறு படைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

- இந்தியாவிற்கு எதிரான முதல்டி-20 போட்டியில் மே.இந்திய தீவுகள் அணி 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

- பிரிட்டனில் நேற்று நடந்த பெண்கள் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணியும் ஆஸ்திரேலிய அணியும் மோதிக் கொண்டனர்.3 ரன் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது. ஆஸ்திரேலிய அணிக்கு இதல் முதல் தோல்வியாகும்.

- இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தென் ஆப்பிரிக்கா அணி படுதோல்வியை சந்தித்தது.

- சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் (எ.ஃப்.ஐ.எச்.) சார்பில் 2019 ஆம் ஆண்டு முதல் நடைபெறவுள்ள தொழில்முறை (புரோ) ஹாக்கி லீக் போட்டியிலிருந்து விலகுவதாக ஹாக்கி இந்தியா அறிவித்துள்ளது.

- இலங்கைக்கு எதிரான 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ள 16 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் மிடில் ஆர்டர் பேட்ஸ்மேன் கருண் நாயருக்குப் பதிலாக ரோஹித் சர்மா சேர்க்கப்பட்டுள்ளார்.

- 800 மீட்டர் சாம்பியன்ஷிப் போட்டிகள் புவனேஸ்வரில் நடைபெற்று வருகிறது. இப்போட்டிக்கான கடைசி நாளான நேற்று நடந்த 800மீட்டர் ஓட்டத்தில் இந்திய வீராங்கனை அர்ச்சனா யாதவ் தங்கம் வென்றார்.

**ஜுலை -11**

- 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் வெஸ்ட்இண்டீஸ் அணியிடம் இந்தியா தோல்வி ‘வாய்ப்புக்களை தவறவிட்டால் வெற்றி பெற முடியாது’ விராட்கோலி கருத்து தெரிவித்துள்ளார்.

- இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களிடம் நேற்று நேர்காணல் நடைப்பெற்றது.புதிய பயிற்ச்சியாளர் அறிவிப்பு தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

- இலங்கைக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் ஜிம்பாவே அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடர் கைப்பற்றியது.

- ஆப்கானிஸ்தானில் உள்ளுர் டி20 போட்டிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதில் 71 பந்துகளில் இரட்டை சதம் அடித்து ஆப்கான் வீரர் சாதனை படைத்துள்ளார்.

- சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் இந்தியாவின் ரவீசந்திர ஜடேஜா 898 புள்ளிகள் பெற்று முதலிடத்தையும் 865 புள்ளிகள் பெற்று அஸ்வின் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர். அது போலவே ஆல்ரவுண்டர் தரவரிசையில் ஜடேஜா இரண்டாம் இடத்திலும் அஸ்வின் மூன்றாம் இடத்திலும் உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

- ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியின் பதக்க பட்டியலில் இந்தியா முதலிடத்தையும் 20 பதக்கங்களுடன் சீனா இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளது. இந்தியா முதன்துறையாக பதக்கப்பட்டியலில் முதலிடம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

- லார்ட்ஸ் டெஸ்ட் போடடியில் தென் ஆப்பிரிக்கா அணியை வீழ்த்திய இங்கிலாந்து அணியை சேர்ந்த மொயின் அலி ஐசிசி டெஸ்ட் தரவரிசையில் ஆல்ரவுண்ட்க்கு முன்னேற்றம் பெற்றுள்ளார்.

**ஜுலை -12**

- பெண்கள் உலக கோப்பை கிரிக்கெட் - இன்றைய ஆட்டத்தில் இந்தியா ஆஸ்திரேலியா அணிகள் மோதுகின்றன.

- விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் அரை இறுதிக்கு முகுருஜா வீனஸ் வில்லியம்ஸ் முன்னேறியுள்ளனர்.

- 600 வீரர்-வீராங்கனைகள் பங்கேற்கும் தமிழ்நாடு சிறப்பு போலீஸ் சூட்டிங் ரேஞ்சில் நாளை துவங்குகிறது.

- ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான ஐசிசி தரவரிசை - பேட்ஸ்மேன்கள் பிரிவில் இந்திய கேப்டன் விராட்கோலி முதலிடத்தையும் தோனி இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

- இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக அணியின் முன்னாள் இயக்குனரான ரவி சாஸ்திரி நியமிக்கப்பட்டுள்ளார்.அதே வேளையில் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக முன்னாள் வீரர் ஜாகீர்கான் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

- மகளிர் உலகப் கோப்பை கிரிக்கெட் போட்டியின் 21 ஆவது ஆட்டத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான 50 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 285 ரன்கள் மேற்கிந்தியத் தீவுகள் அணி எடுத்துள்ளனர்.

- காமன்வெல்த் மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் பெற்ற ஸ்குவாஷ் வீராங்கனை ஜோஷ்னா சின்னப்பாவுக்கு மின்வாரியத்தில் அரசுப்பணி வழங்கப்பட்டது.

**ஜூலை - 13**

- மகளிர் ஹாக்கி உலக லீக் அரை இறுதி தொடரில் இந்திய அணி சிலி அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கால் இறுதிக்கு முன்னேறியது.

- விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் 23 வருடங்களுக்கு பிறகு மிகவும் வயதான வீராங்கனையான அமெரிக்காவின் வீன்ஸ் வில்லியம்ஸ் அரை இறுதிக்கு முன்னேறி சாதனை படைத்துள்ளார்.

- ஸ்பெயினில் நடைப்பெற்ற சர்வதேச செஸ் போட்டியில் ஈரோடு மாணவர் ப.இனியன் மூன்றாமிடம் பெற்றுள்ளார். இதன் மூலம் சர்வதேச செஸ் கூட்டமைப்பின் கிராண்ட் மாஸ்டர் பட்டத்தைப் பெறுவதற்கான முதல் தகுதியைப் பெற்றுள்ளார்.

- கனடா ஓபன் பேட்மிண்டன் போட்டி அல்பெர்டாவில் நடந்து வருகிறது. இதன் ஆண்கள் முதலாவது சுற்று ஆட்டத்தில் இந்திய வீரர்கள் காஷ்யப் பிரனாய் ஆகியோர் 2வது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.
- சர்வதேச மகளிர் கிரிக்கெட் ஒருநாள் போட்டியில் 6000 ரன்களை எட்டிய முதல் வீராங்கனை என்று உலக சாதனைப் படைத்துள்ளார் இந்திய அணியின் மிதலிராஜ்.

- ஜிம்பாப்வே அணிக்கு எதிரான ஒருநாள் போட்டி தொடரை இழந்ததை தொடர்ந்து இலங்கை டெஸ்ட் அணியின் கேப்டனாக தினேஷ் சன்டிமாலும் ஒருநாள் மற்றும் 20 ஓவர் போட்டிக்கான கேப்டனாக உபுல் தரங்காவும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

- மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

**ஜூலை -14**

- 2015 அம் ஆண்டு எழுந்த சூதாட்ட புகார் காரணமாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு இரண்டு ஆண்டுகளுக்கு விளையாட தடை விதிக்கப்பட்டிருந்தது. இத்தடை இன்றுடன் நிறைவடைகிறது.

- சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள மாநகராட்சி திடலில் இன்று மாநில கைப்பந்து போட்டி தொடங்குகிறது. இப்போட்டி வருகிற 16ந் தேதி வரைக்கும் நடைபெறும்.

- இந்திய கிரிக்கெட் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக பாரத் அருணை நியமிப்பதற்காக தீவிர முயற்சி காட்டி வருகிறார் இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் ரவி சாஸ்திரி.

- மகளிர் கிரிக்கெட் போட்டியில் சாதித்துக் காட்டிய இந்திய மகளிர் அணியின் கேப்டன் மிதாலி ராஜ் ஒரு தமிழ் குடும்பத்தை சேர்ந்த பெண்ணாவார்.

- விம்பிள்டன் டென்னிஸ் போட்டி ஆடவர் ஒற்றையர் பிரிவில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் பட்டம் வெல்ல வாய்ப்புள்ளதாக கருதப்படுகிறது.

- இலங்கை ஜிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி கொழும்புவில் இன்று தொடங்குகிறது.

- விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் கால் இறுதி சுற்றில் காயம் காரணமாக வெளியேறிய செர்பியாவின் ஜோகோவிச் நீண்ட காலம் ஓய்வு எடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்

**ஜூலை - 15**

- தென் ஆப்பிரிக்கா - இங்கிலாந்து அணிகள் இடையிலான 2- வது டெஸ்ட் போட்டி நாட்டிங்காமில் நேற்று தொடங்கியது. தென் ஆப்பிரிக்காவை சேர்ந்த டி காக் மற்றும் அம்லா அரை சதம் எடுத்துள்ளனர்.

- இலங்கைக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஏர்வின் சதத்தால் ஜிம்பாப்வே அணி 344 ரன்கள் குவித்துள்ளனர். கிரெய்க் இர்வின் 151 ரன்கள் எடுத்துள்ளார்.

- பெண்கள் உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் முக்கியமான லீக் ஆட்டத்தில் இந்தியா – நியூசிலாந்து அணிகள் இன்று மோதுகின்றனர்.

- விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஸ்சுவிட்சர்லாந்தின் ரோஜர் ஃபெடரர் குரோஷியாவின் மரின் சிலிக் ஆகியோர் இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

- விக்டோரியா ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ஹரிந்தர் சாந்து அரையிறுதிக்கு முன்னேறியுள்ளா்.

- தமிழ்நாடு கைப்பந்து சங்கம் மற்றும் சென்னை மாவட்ட கைப்பந்து சங்கம் சாா்பில் மாநில பள்ளி கைப்பந்து போட்டி வருகிற ஆகஸ்ட் 17ந் தேதி முதல் 20ம் தேதி வரை சேலத்தில் நடைபெற உள்ளது. இதில் எல்லா பள்ளி அணிகளும் கலந்து கொள்ளலாம் என்று தமிழ்நாடு கைப்பந்து சங்க பொதுச் செயலாளா் தெரிவித்துள்ளாா்.

- கனடா ஓபன் கிராண்ட் பாட்மிட்டன் தொடரில் ஆடவா் ஒற்றையா் பிரிவில் இந்தியாவின் பிரணாய் தோல்வியடைந்தாா். அதே வேளையில் இரட்டையா் பிரிவில் நடப்பு சாம்பியனாக இந்தியாவின் மனு அட்ரி சுமித் ரெட்டி கால் இறுதிக்கு முன்னேறினா்.

**ஜுலை - 16**

- லண்டனில் நடைபெற்று வரும் விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் மகளிா் ஒற்றையா் பிரிவில் ஸ்பெயினின் காா்பைன் முகுருஸா முதல் முறையாக சாம்பியன் பட்டம் வென்றாா்.

- பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் சுந்தா்சிங் குா்ஜாா் தங்கப் பதக்கம் வென்றுள்ளாா். இதன் மூலம் 2017 பாரா தடகள சாம்பியன்ஷிப்பில் இந்தியாவுக்கு முதல் பதக்கம் பெற்று தந்தவா் என்ற பெருமையை பெறுகிறாா்.

- 5வது சீசன் புரோ கபடிப் போட்டிக்கான பரிசுத் தொகை ரூ.8 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு பிரீமியா் லீக் கிரிக்கெட் திருவள்ளுவா் வீரன்ஸ் அணியின் ஆலோசகராக முரளிதரன் நியமனம் செய்யப்பட்டுள்ளாா்.

- இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக ரவி சாஸ்திரி நியமிக்கப்பட்டதற்கு பிசிசிஐ நிா்வாகக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

- மகளிா் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி தனது கடைசி லீக் ஆட்டத்தில் நியூசிலாந்தை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

- விக்டோரியா ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ஹரிந்தா் சாந்து இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளாா்.

**ஜுலை 17**

- விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் சுவிட்சா்லாந்து வீரா் ரோஜா் பெடரா் வெற்றி பெற்றாா்(தொடா்ந்து 8 முறை)

- இலங்கைக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஜிம்பாப்வே அணி முன்னிலையில் உள்ளது.

- இந்த ஆண்டுக்கான பார்முலர 1 கார் பந்தயம் உலகம் முழுவதும் 20 சுற்றுகளாக நடைபெறவுள்ளது. இதுவரை நடந்த 10 சுற்றுகளின் முடிவில் ஹால்மில்டன் முதலிடத்தில் உள்ளார்.

- உலக கோப்பை சரிவிலிருந்து மீண்டு வந்திருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக இந்திய கேப்டன் மிதாலிராஜ் கூறியுள்ளார்.

- 5 வது சீசன் புரோ கபடி லீக் போட்டியில் பங்கேற்கும் பெங்களூரு புல்ஸ் அணியின் கேப்டனாக நட்சத்திர ரைடர் ரோஹித் குமாரும் துணை கேப்டனாக பின்கள வீரர் ரவீந்தர் பாஹூலும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- விக்டோரியா ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்திய வீரர் ஹரிந்தர் சாந்து சாம்பியன் பட்டம் வென்றார்.

- இந்திய கிரிக்கெட் அணி பயிற்சியாளராகத் தேர்வு செய்யப்பட்டுள்ள ரவிசாஸ்திரிக்கு ஆண்டுக்கு ரூ.7 கோடி முதல் ரூ.7.5 கோடி வரை சம்பளம் வழங்கப்படலாம்.

**ஜுலை -18**

- இங்கிலாந்துக்கு எதிரான 2வது டெஸ்ட் போட்டி : தென் ஆப்பிரிக்கா அணி அபார வெற்றி

- இலங்கை , ஜிம்பாப்வே இரு அணிகளும் வெற்றி பெற வாய்ப்பு –கொழும்பில் நடைபெறும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பரபரப்பான கட்டத்தில் உள்ளது.

- ஏடிபி டென்னிஸ் தரவரிசையில் ஸ்சுவிட்சர்லாந்தின் ரோஜர் ∴பெடரர் இரு இடங்கள் முன்னேறி 3வது இடத்தைப் பிடித்துள்ளார்.

- ஜெர்மனியின் ஹம்பர்க் நகரில் நடைபெறவுள்ள உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்க இந்தியாவின் கௌரவ் பிதுரி தகுதி பெற்றுள்ளார்.

- மாற்றுத் திறனாளிகளுக்கான உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டி - இந்தியாவிற்கு 2 வது பதக்கம்.

- மகளிர் டென்னிஸ் உலகத் தரவரிசை பட்டியலில் ஒற்றையர் பிரிவில் செக் குடியரசின் கரோலினா பிளிஸ்கோவா முதலிடம் பிடித்துள்ளார்.

- உலக டென்னிஸ் தரவரிசை பட்டியலில் சென்னையை சேர்ந்த ராம்குமார் ராமநாதன் ஒற்றையர் பிரிவில் 168 வது இடத்தை பிடித்துள்ளார்.

- தென் ஆப்பிரிக்காவில் நடைபெற உள்ள 3 நாடுகள் கிரிக்கெட் தொடரில் இருந்து ஆஸ்திரேலியா ஏ அணி விலகி இருந்தது. இந்நிலையில் அந்த அணிக்கு பதிலாக ஆப்கானிஸ்தான் ஏ அணி சேர்க்கப்பட்டுள்ளது.

**ஜுலை – 19**

- 2016 -17 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்று தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கம் பெற்ற விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட உள்ளன.

- தமிழ்நாடு பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் நடப்புச் சாம்பியனான தூத்துக்குடியின் 'டியூட்டி பேட்ரியாட்ஸ்' அணி விளையாட ஒரு மாதம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

- இந்திய கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளரான உமேஷ் யாதவ் இந்திய ரிசர்வ் வங்கியின் நாகபுரி கிளை உதவி மேலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- சச்சின் டெண்டுல்கர் உரிமையாளராக உள்ள தமிழ் தலைவாஸ் கபடி அணியின் விளம்பர தூதராக கமல் அறிவிக்கப்பட்டுள்ளார்.

- சர்வதேச அளவில் மாற்றுத் திறனாளிகளுக்கான செஸ் போட்டியில் தொடர்ந்து 5 முறை ஜெனிதா சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

- சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் இந்தியாவின் ரவீந்திர ஜடேஜா முதலிடத்தைப் பிடித்துள்ளார். மற்றொரு இந்திய சுழற்பந்து வீச்சாளரான அஸ்வின் 3ம் இடமும், இலங்கை பந்து வீச்சாளரான ஹெராத் 2ம் இடமும் பிடித்துள்ளனர்.

**ஜுலை - 20**

- காமன்வெல்த் யூத் ஜுடோ போட்டியில் இந்தியா 1 தங்கம், 3 வெண்கலம் என மொத்தம் 4 பதக்கங்கள் வென்றுள்ளது.

- சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசையில் இந்திய வீரர் அஸ்வின் 2 வது இடத்தில் இருந்து மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டார். இலங்கை சுழற்பந்து வீச்சாளர் ரங்கனா ஹெராத் 2 வது இடத்துக்கு முன்னேறியுள்ளார்..

- 10 அணிகள் இடையிலான 4 வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து போட்டி இந்தியாவில் அக்டோபர் 1-ந் தேதி முதல் டிசம்பர் 18-ந் தேதி வரை நடக்கிறது என்று சென்னை அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

- இந்தியா, சீனா, பிரேசில், ரஷ்யா மற்றும் தென்ஆப்பிரிக்கா நாடுகள் பங்கேற்கும் பிரிக்ஸ் விளையாட்டு போட்டிகள் நேற்று தொடங்கியது. இதில் இந்தியா மற்றும் சீனா அணிகள் மோதிக்கொண்டன . இந்த கூடைப்பந்து போட்டியில் இந்தியா சீனாவிடம் தோல்வியை சந்தித்தது.

- 5 வது புரோ கபடி லீக் போட்டி வருகிற 28ந் தேதி தொடங்குகிறது. இந்த போட்டியில் சென்னை நகரை மையமாகக் கொண்ட தமிழ் தலைவாஸ் என்ற அணி முதல் முறையாக களம் காணுகிறது. இவ்வணியின் தூதராக நடிகர் கமல்ஹாசன் நியமனம் செய்யப்பட்டார்.

- பெண்கள் உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் 2வது அரை இறுதிப் போட்டியில் இந்தியா ஆஸ்திரேலியா அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

- டிஎன்பிஎல் 2வது சீசன் போட்டிகள் வருகிற 22ம் தேதி முதல் தொடங்குகிறது. இவ்வாட்த்திற்க்கான டிக்கெட்டுகள் இன்று முதல் விநியோகம் செய்யப்படுகின்றன.

- இந்திய கிரிக்கெட் அணியின் புதிய தலைமை பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ள ரவிசாஸ்திரியுடன் பணியாற்றுவது சுமூகமான முறையில் செல்லும் என்று எதிர்ப் பார்ப்பதாக இந்திய அணியின் கேப்டன் விராட் கோலி தெரிவித்துள்ளர்.

### ஜுலை - 21

- டெர்பியில் நடைப்பெற்ற மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் அரையிறுதியில் ஆஸ்திரேலிய அணியை 36 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய இந்திய அணி உலகக் கோப்பை இறுதி சுற்றுக்கு முன்னேறியது.

- இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி 3 டெஸ்ட், 5 ஒரு நாள் போட்டி மற்றும் ஒரு 20 ஓவர் போட்டியில் பங்கேற்கிறது. பயிற்சி ஆட்டத்தில் இன்று களம் இறங்குகிறது.

- சென்னை ஓபன் டென்னிஸ் போட்டி சென்னையில் இருந்து புனேக்கு மாற்றப்படுவதாகவும், இனி 'மகாராஷ்ட்ரா ஓபன்' என்ற பெயரிலும் அழைக்கப்படும் என ஐ.எம்.ஜி அமைப்பு அறிவித்துள்ளது.

- புரோ கபடி லீக் போட்டியில் பங்கேற்கும் தமிழ் தலைவாஸ் அணி வீரர்கள் அறிமுக நிகழ்ச்சி நேற்று சென்னையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கிரிக்கெட் ஜாம்பவான் டெண்டுல்கர் மற்றும் நடிகர் கமல்ஹாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

- ஊக்கமருந்து சோதனையில் சிக்கிய (ஆசிய தடகள போட்டியில் பதக்கம் வென்ற) இந்திய வீராங்கனை மன்பிரீத் கவுர் இந்திய அணியிலிருந்து உடனடியாக இடைநீக்கம் செய்யப்பட்டார்.

- டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அடிப்படையில் அணிகள் மற்றும் வீரர்களின் தர வரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி இந்தியா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது.

- ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 171 ரன்கள் குவித்து அசத்திய இந்திய வீராங்கனை ஹர்மன்பிரீத் கவுரை இந்திய அணியின் முன்னாள் ஆட்டக்காரர் ஷேவாக் "நான் பார்த்த சிறந்த ஆட்டம்" இதுதான் என்று பாராட்டி வாழ்த்துகள் தெரிவித்துள்ளார்.

- இந்தியன் சூப்பர் லீக்(ஐஎஸ்எல்) கால்பந்து போட்டியின் நான்காவது சீசனில் விளையாடவுள்ள சென்னையின் எ.ஃ.ப்.சி அணி. பிரேசிலைச் சேர்ந்த மில்பீல்டரான ர.ஃ.பேல் அகஸ்டோவுடன் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்துள்ளது.

## ஜூலை - 22

- 8 அணிகள் பங்கேற்கும் தமிழ்நாடு பிரிமியர் லீக் 20 ஓவர் கிரிக்கெட் சென்னையில் தொடங்குகிறது. முதல் ஆட்டத்தில் தூத்துக்குடி, திண்டுக்கல் அணிகள் மோதுகின்றன.

- இந்தியாவுக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் இலங்கை லெவன் அணி 187 ரன்னில் ஆல்அவுட் ஆனது.

- ஆசிய தடகள போட்டியில் 2 தங்கப்பதக்கம் வென்ற தமிழக வீரருக்கு தென்சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஆர் தியாகராஜன் ரூ.50 ஆயிரம் பரிசளித்து நேரில் சந்தித்து வாழ்த்தினார்.

- யுஎஸ் ஓபன் கிராண்ட் பிரிக்ஸ் பாட்மிட்டேன் போட்டியின் கால் இறுதிச் சுற்றுக்கு இந்திய வீரர்களான காஷ்யப், சமீர் வர்மா , பிரணாய் ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.

- உலக ஜூனியர் ஸ்குவாஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் அபய் சிங் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

- இந்திய டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணியின் பந்து வீச்சு பயிற்சியாளராக அந்த அணியின் முன்னாள் கேப்டன் சமீந்தா வாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

- தமிழ்நாடு பிரீமியர் லீக் டி20 கிரிக்கெட் போட்டியில் விளையாட தூத்துக்குடி ஆல்பர்ட் டியூட்டி பேட்ரியாட்ஸ் அணிக்கு தடை விதிக்கப் பட்டிருந்தது. நேற்று தூத்துக்குடி நீதிமன்றம் இத்தடையை நீக்கி தீர்பளித்தது.

- உலக பாரா தடகளத்தில் இந்திய வீராங்கனை கரம் ஜோதி வட்டு எறிதல் போட்டியில் வெண்கல பதக்கம் வென்றார்.

## ஜூலை – 23

- உலக ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியின் காலிறுதியில் இந்தியாவின் அபய் சிங் தோல்வியடைந்தார்.

- உலக மகளிர் ஹாக்கி லீக் அரையிறுதிப் போட்டியில் இந்திய அணி 8ஆவது இடத்தைப் பிடித்தது.

- முன்னாள் ஆஸ்திரேலிய டென்னிஸ் வீரர் பீட்டர் ரோஹன் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் மரணமடைந்தார்.

- இலங்கை அணியின் கேப்டன் தினேஷ் சந்திமால், நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார். இதனால் இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் அவர் விளையாட மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சந்திமாலுக்குப் பதிலாக இலங்கை அணியின் கேப்டனாக ரங்கனா ஹெராத் நியமிக்கப்பட்டுள்ளார்.

- கஜகஸ்தான் தலைநகர் அஸ்தானாவில் நடைபெற்ற பிரெஸிடென்ட் கோப்பைக்கான ஏடிபி சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் விஷ்ணுவரதன் - ஜப்பானின் டோஷிஹைடு மட்சுய் சாம்பியன் பட்டம் வென்றது.

- மொனாக்கோவில் நடைபெற்ற டைமண்ட் லீக் தடகள போட்டியின் 100 மீ ஓட்டத்தில் ஜமைக்கா வீரர் உசேன் போல்ட் தங்கம் வென்றார். பந்தய தூரத்தை அவர் 9.95 விநாடிகளில் கடந்தார். அமெரிக்காவின் இசியா யங் 9.98 விநாடிகளுடன் 2வது இடத்தைப் பிடித்தார்.

**ஜூலை - 24**

- மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் 9 ரன்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி இந்தியாவை வீழ்த்தியது. தொடர்ந்து 4 ஆவது முறையாக உலகக் கோப்பையைக் கைப்பற்றி சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

- உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டி - இந்தியாவின் சரத்குமார், வருண் பட்டி ஆகியோர் வெள்ளி மற்றும் வெங்கலப் பதக்கங்கள் வென்றுள்ளனர்.

- டி.என்.பி.எல். கிரிக்கெட் : சேப்பாக் சூப்பர் கில்லீஸ் மற்றும் திருவள்ளூர் வீரன்ஸ் அணிகள் இன்று மோதல்.

- இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் தொடரில் இலங்கை அணியுடன் மோதுகிறது.

- டி.என்.பி.எல். கிரிக்கெட்டில் காரைக்குடிக்கு எதிரான ஆட்டத்தில் கோவை கிங்ஸ் அணி வெற்றி பெற்றது.

- மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் சிறப்பாக செயல்பட்ட இந்திய அணியில் இடம் பெற்றுள்ள 10 வீராங்கனைகள் இரயில்வேயில் பணிபுரிகின்றனர். அவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட உள்ளதாக இரயில்வே அமைச்சர் சுரேஷ் பிரபு அறிவித்துள்ளார்.

- மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட்டில் சிறப்பாக செயல்பட்ட பஞ்சாப் வீராங்கனை ஹர்மன்பீரித் கௌருக்கு ரூ.5 லட்சம் ரொக்கப் பரிசு வழங்கப்படும் என்று அம்மாநில முதல்வர் அமரீந்தர் சிங் தெரிவித்துள்ளார்.

- அமெரிக்க ஓபன் கிராண்ட்பிரி கோல்டு பேட்மிண்டன் போட்டி கலிபோர்னியாவில் உள்ள அனாஹெய்ம் நகரில் நடந்து வருகிறது. இறுதிப் போட்டியில் காஷ்யப், பிரனாய் மோதுகின்றனர்.

## ஜூலை - 25

- ஆசிய யூத் மற்றும் ஜூனியர் பளுதூக்குதல் போட்டியில் இந்தியாவின் கொன்சாம் ஊர்மிளா தேவி தங்கப் பதக்கம் வென்றார்.

- காமன்வெல்த் இளைஞர் விளையாட்டுப் போட்டியில் குத்துச் சண்டையில் இந்திய வீரர் சச்சின் சிவாச் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

- இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடும் 15 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் அறிமுக வீரராக சுழற்பந்து வீச்சாளரான மலின்டா புஷ்பகுமாரா இடம் பெற்றுள்ளார்.

- மாற்று திறனாளிகளுக்கான உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டி நேற்று லண்டனில் நிறைவடைந்தது. இப்போட்டியில் இந்தியா 1 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலம் என்று மொத்தம் 5 பதக்கங்களை வென்றுள்ளது.

- மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் சிறப்பாக விளையாடிய ஹர்மான் பிரித் கவுருக்கு பஞ்சாப் காவல் துறையில் டிஎஸ்பி பணி வழங்கப்படும் என அம்மாநில முதல்வர் அமரீந்தர் சிங் தெரிவித்துள்ளார்.

- டி.என்.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சேப்பாக் சூப்பர் கில்லீஸ் அணி தனது முதல் ஆட்டத்தில் 6 விக்கெட் வித்தியாசத்தில் திருவள்ளூர் **அணியை** வீழ்த்தி வெற்றியுடன் தொடங்கியது.

- அமெரிக்க ஓபன் பேட்மிண்டன் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இந்திய வீரர் பிரனாய் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

- தமிழ்நாடு பிரிமீயர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று திண்டுக்கல் டிராகன்ஸ், மதுரை சூப்பர் ஜெயன்ட் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

## ஜூலை - 26

- இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது. இந்திய அணியின் வீரர் ஷிகர் தவான் சதம் விளாசினார்.

- டி.என்.பி.எல். கிரிக்கெட் போட்டியில் திண்டுகள் அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் மதுரை அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

- 5 ஆண்டுகளுக்கு பிறகு சர்வதேச பெண்கள் டென்னிஸ் போட்டி வருகிற நவம்பர் மாதம் மும்பையில் நடத்தப்படுகிறது.

- பெண்களுக்கான உலகக் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி 2018 டெல்லியில் நடைபெறும்.

- மகளிர் கிரிக்கெட்டுக்கான ஐசிசி தரவரிசையில் இந்தியாவின் ஹர்மன்பிரீத் கௌர் 6வது இடத்தைப் பிடித்துள்ளார்.

- இந்திய கிரிக்கெட் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளர் பாரத் அருண், முன்னாள் ஆல்ரவுண்டர் ராபின் சிங் உட்பட 55 முன்னாள் கிரிக்கெட் வீரர்களுக்கு நிதியுதவி வழங்க இந்திய கிரிக்கெட் வாரியம் (பிசிசிஐ) திட்டமிட்டுள்ளது. இதன்படி ஒவ்வொரு வீரருக்கும் ரூ.35 லட்சம் வரை வழங்கப்படவுள்ளது.

- ஆண்களுக்கான உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி டெல்லியில் 2021ம் ஆண்டில் நடைபெறும்.

- மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் சிறப்பாக விளையாடிய இந்திய வீராங்கணைகள் அனைவருக்கும் தலா ரூ.50 லட்சம் வழங்கப்படும் என்றும் இவர்களை கௌரவிக்கும் பொருட்டு பாராட்டு விழா நடத்த உள்ளதாகவும் பிசிசிஐ அறிவித்துள்ளது.

**ஜுலை - 27**

- உலக நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிர் 100மீ பேக்ஸ்ட்சோக் பிரிவில் கனடா வீராங்கனை கைலீ மாஸோ உலக சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றார்.

- 10 அணிகள் பங்கேற்கும் 91-வது எம்.சி.சி-முருகப்பா தங்ககோப்பைக்கான அகில இந்திய ஹாக்கி போட்டி சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் இன்று(27.07.17) முதல் ஆகஸ்ட் 6ம் தேதி வரை நடைபெறும்.

- இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணியினர் 503 ரன்கள் குவித்தனர்.

- பெண்களுக்கும் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி நடத்த வேண்டும் என்று இந்திய அணியின் கேப்டன் மிதாலிராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

- டி.என்.பி.எல். கிரிக்கெட் போட்டியில் தூத்துக்குடி அணி திருச்சி வாரியர்சை 10 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி 2வது முறை வெற்றி பெற்றது.

- தென் ஆப்பிரிக்கா - இங்கிலாந்து அணிகள் இடையிலான 3வது டெஸ்ட் போட்டி இங்கிலாந்து ஓவல் மைதானத்தில் (27.07.17) இன்று தொடங்குகிறது.

- நியூஸிலாந்தின் டௌரங்கா நகரில் நடைபெற்ற உலக ஜுனியர் ஸ்குவாஷ் போட்டியில் இந்திய அணி காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

## ஜுலை - 28

- இந்தியா - இலங்கை கிரிக்கெட் அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி காலேபில் நடந்தது இதில் இந்திய அணி 600 ரன்கள் குவிப்பு.

- டி.என்.பி.எல். கிரிக்கெட்டில் மதுரை அணிக்கு எதிரான ஆட்டத்தில் காரைக்குடி அணி வெற்றி பெற்றது.

- இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் 10 வீராங்கனைகளுக்கு தலா ரூ.13 லட்சம் பரிசளிக்கவுள்ளதாக மத்திய ரெயில்வே மந்திரி சுபாஷ் பிரபு அறிவித்துள்ளார்.

- 5வது சீசன் புரோ கபடி லீக் போட்டி ஹைதராபாத்தில் 28.07.2017(இன்று) தொடங்குகிறது. முதல் ஆட்டத்தில் தமிழ் தலைவாஸ் அணியும், தெலுகு டைட்டன் அணியும் மோதுகின்றன.

- ரியோ ஒலிம்பிக் போட்டியில் பெண்களுக்கான பாட்மிண்டனில் வெள்ளிப் பதக்கம் வென்ற பி.வி.சிந்துவை ஆந்திர மாநிலத்தில் உதவி ஆட்சியராக நியமனம் செய்ய அம்மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு உத்தரவு வழங்கியுள்ளார்.

- எம்.சி.சி.முருகப்பா தங்கக் கோப்பை ஹாக்கிப் போட்டியின் முதல் நாளில் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (பிபிசிஎல்) அணி வெற்றி பெற்றது.

- 2017 – ஆம் ஆண்டுக்கான ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது - இந்திய அணியின் முன்னாள் தொடக்க வீரர் சேவாக், முன்னாள் தடகள வீராங்கனை பி.டி.உஷா உள்ளிட்ட 12 பேர் இடம் பெற்றுள்ளனர்.

## ஜுலை - 29

- செக் நாட்டில் நடக்கும் கிராண்ட் பிரிக்ஸ் குத்துச்சண்டை போட்டியின் அரையிறுதியில் 69 கிலோ எடைப் பிரிவில் மனோஜ் குமார், 81 கிலோ எடைப் பிரிவில் மணிஷ் பன்வார், 91 கிலோ எடைப் பிரிவில் சதிஷ் குமார், ஆகிய மூன்று இந்தியர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

- 91-வது எம்சிசி முருகப்பா தங்கக் கோப்பை ஹாக்கிப் பொட்டியின் 2-வது நாளில் நடைபெற்ற ஆட்டங்களில் இந்தியன் ரயில்வே, ஓஎன்ஜிசி,பஞ்சாப் மற்றும் சிந்து வங்கி அணிகள் வெற்றி பெற்றன.

- விராட்கோலி உள்பட 100 கிரிக்கெட் வீரர்கள் தங்கள் தனியார் நிறுவன பதவியை ராஜினாமா செய்ய பிசிசிஐ வற்புறுத்தியுள்ளது.

- இலங்கையில் நடைபெற்றுள்ள முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் சார்பில் களமிறங்கிய **ஹார்திக் பாண்டியா முதல் போட்டியிலே அதிக சிக்சர் விளாசிய முதல் இந்தியர்** என்ற சாதனையை படைத்துள்ளார்.

- டி.என்.பி.எல். கிரிக்கெட்டில் திருவள்ளுர் வீரன்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் திண்டுக்கல் டிராகன்ஸ் அணி தோல்வி அடைந்தது.

- **சர்வதேச பாட்மிண்டன் தரவரிசையில்** இந்திய வீரர் எச்**.எஸ்.பிரணாய்** 6 இடங்கள் முன்னேறி **17-வது இடத்தைப்** பிடித்துள்ளார்.

- புரோ கபடி லீக் போட்டி ஐதராபாத்தில் நேற்று(28.07.2017) தொடங்கியது. முதல் ஆட்டத்தில் தமிழ் தலைவாஸ் அணி தெலுங்கு டைட்டன்ஸ் அணியிடம் தோல்வி கண்டது.

- ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் 1500 மீட்டர் ஓட்டத்தில் தங்கப் பதக்கம் வென்ற கேரளாவைச் சேர்ந்த பி.யூ. சித்ராவை உலக தடகள போட்டியில் பங்கேற்கும் இந்திய அணியில் சேர்க்க வேண்டும் என மத்திய அரசுக்கு கேரள ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

**ஜூலை – 30**

- தமிழ்நாடு பிரீமியர் லீக் (டிஎன்பிஎல்) டி20 கிரிக்கெட் போட்டியின் 8-ஆவது ஆட்டத்தில் 6 விக்கெட் வித்தியாசத்தில் கோவை கிங்ஸ் அணியைத் தோற்கடித்தது சேப்பாக் சூப்பர் கில்லீஸ் அணி.

- 5ஆவது சீசன் புரோ கபடி லீக் போட்டியின் 2ஆவது நாளில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் டபாங் டெல்லி அணி ஜெய்ப்பூர் பிங்க் பாந்தர்ஸ் அணியைத் தோற்கடித்தது.

- இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 304 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி கண்டது.

- முத்தரப்பு கிரிக்கெட் போட்டியில் இந்தியா ‘ஏ’ அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தான் ‘ஏ’ அணியை வென்றது.

- புடாபெஸ்ட் நகரில் நடைபெற்ற உலக சாம்பியன்ஷிப் நீச்சல் போட்டியில் ரஷ்ய வீரர் ஆண்டன் சப்கோவ் புதிய சாதனை படைத்துள்ளார். 200மீ பிரஸ்ட் ஸ்ட்ரோக் நீச்சல் போட்டியில் இவர் பந்தய தூரத்தை 2 நிமிடங்கள் 6.96 விநாடிகளில் கடந்து சாதனை படைத்துள்ளார்.

- 91ஆவது எம்சிசி –முருகப்பா தங்கக் கோப்பை ஹாக்கிப் போட்டியின் மூன்றாவது நாளில் இந்தியன் ரயில்வே, பஞ்சாப் தேசிய வங்கி, ஓஎன்ஜிசி ஆகிய அணிகள் வெற்றி பெற்றன.

**ஜூலை - 31**

- ஆசிய பள்ளிகளுக்கான செஸ் போட்டி சீனாவின் பன்ஜின் நகரில் நடந்தது, இதில் 10 நாடுகளை சேர்ந்த 26 வீரர்கள் களந்து கொண்டனர். 7 மற்றும் 9 வயதிற்குள்ளான சிறுமிகளுக்கான போட்டியில் இந்தியாவை சேர்ந்த ஆதித்யா மற்றும் சுஹானி ஆகியோர்

வெண்கலப் பதக்கம் வென்றனர்.

- டி.என்.பி.எல். கிரிக்கெட்டில் நேற்று(30.07.2017) நடந்த ஆட்டத்தில் விருவள்ளூா வீரன்ஸ் அணி 57 ரன்கள் வித்தியாசத்தில் திருச்சி வாரியா்ஸ் அணியை வீழ்த்தியது.

- 2017ம் ஆண்டுக்கான பாா்முலா1 காா்பந்தயம் உலகம் முழுவதும் 20 சுற்றுகளாக நடத்தப்படுகிறது. இதில் 11வது சுற்றான ஹங்கேரி கிராண்ட்பிரியில் ஜொ்மணியை சோ்ந்த வீரா் செபாஸ்டியன் வெட்டல் முதலிடத்தை பிடித்துள்ளாா்.

- ஹங்கேரியின் புரோபெஸ்ட் நகரில் நடந்த உலக நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டியில் ஒரே இரவில் 3 தங்கப்பதக்கம் வென்று அமெரிக்க நீச்சல் வீரர் காலெப் டிரஸ்செல் சாதனைப் படைத்துள்ளாா்

- 5வது புரோ கபடி லீக் போட்டியில் நேற்று(30.07.2017) நடந்த போட்டியில் ஹாியானா ஸ்டீலா்ஸ் அணியை மும்பை அணி வீழ்த்தியது.

- டி.என்.பி.எல் கிரிக்கெட்டில் காரைக்குடி காளை அணியை வீழ்த்தி தூத்துக்குடி பேட்ரியாட்ஸ் ‘ஹாட்ரிக்’ அணி வெற்றி பெற்றது.

- 91வது எம்சிசி-முருகப்பா தங்கக்கோப்பை ஹாக்கிப் போட்டியில் 4வது நாளாக நடைபெற்ற ஆட்டங்களில் பஞ்சாப் நேஷனல் அணி, ராணுவ லெவன் அணி மற்றும் ஹாக்கி பெங்களுா் அணிகள் வெற்றி பெற்றனா்.

- ஜோா்டான் தலைநகா் அம்மானில் நடைபெற்ற ஜோா்டான் ஜுனியா் மற்றும் கேடட் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா 7 தங்கம், 7 வெள்ளி, 10 வெண்கலம் என்று மொத்தம் 24 பதக்கங்களைக் கைப்பற்றியது.

- தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் ஆல்ரவுண்டரான ஜான்டி ரோட்ஸ், தமிழ்நாடு பிரீமியா் லீக் டி20 கிரிக்கெட் போட்டியில் திருச்சி வாரியா்ஸ் அணியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளாா்.

## வா்த்தக செய்திகள்:

### ஜுலை – 1

- நாட்டின் வளா்ச்சிக்கு அடிப்படையாக உள்ள மின்சாரம், உருக்கு, சிமெண்ட், உரம், சுத்திகரிப்பு பொருள்கள், இயற்கை எரிவாயு, கச்சா எண்ணெய், நிலக்கரி ஆகிய எட்டு துறைகளின் உற்பத்தி சென்ற மே மாதத்தில் 3.6சதவீதம் சரிந்துள்ளது.

- பஜாஜ் ஆட்டோ நிறுவனம் பஸ்லா் ‘என்எஸ்160’ என்ற புதிய மாடல் பைக்கை புது தில்லியில் அறிமுகப்படுத்தியது.

- சரக்கு மற்றும் சேவை வரி இன்று முதல் அமலுக்கு வரவுள்ளதால் புதிய குடியிருப்புகளின் விலை உயரும் என கட்டுமான மேம்பாட்டாளா் அமைப்பான கிரெடாய் தெரிவித்துள்ளது.

- எல் அண்டு டி நிறுவனத்தின் தலைமை செயலதிகாரி மற்றும் நிர்வாக இயக்குநராக எஸ்.என்.சுப்ரமணியன் இன்று பதவி ஏற்கிறார்.

- பி.எம்.டபிள்யு (பவேரியன் மோட்டார் ஒர்க்ஸ்) கார்நிறுவனம் மும்பையில் நேற்று முன்தினம் புதிய 5 சீரிஸ் கார்களை அறிமுகம் செய்தது. இதன் துவக்க விலை 49.90 லட்சம் ரூபாய் ஆகும்.

- மாருதி சுசுகி இந்தியா தனது கார் விலைகளை 3% வரை குறைத்து சரக்கு மற்றும் சேவை வரிதிட்டத்தின் பயன்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்க முடிவெடுத்துள்ளது.

**ஜுலை – 2**

- உணவு தானியங்கள் பால் தயிர் முட்டை இதர பால் பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால் இவற்றின் விலைகள் குறைக்கப்படுகின்றன.

- வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் செல்போன்களின் சில குறிப்பிட்ட உதிரிபாகங்களுக்கு அடிப்படை சுங்க வரி 10 சதவீதம் விதிக்கப்பட்டு இருக்கிறது.

- நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படையாக உள்ள மின்சாரம் உரம் சிமெண்ட் கச்சா எண்ணெய் நிலக்கரி உள்ளிட்ட 8 துறைகளின் உற்பத்தி வளர்ச்சியில் 3.6 சதவீதம் சரிவு ஏற்ப்படுள்ளது.

- மத்திய அரசு சிறுசேமிப்பு திட்டங்களுக்கான வட்டி விகிதத்தை 0.1 சதவீதமாக குறைத்துள்ளது.

- நாட்டின் மிகப்பெரிய கார் தயாரிப்பு நிறுவனமான மாருதி சுஸுகியின் இந்தியாவின் கார் விற்பனை சென்ற ஜுன் மாதத்தில் 7.6 சதவீதம் அதிகரித்தது.

- சி.எஸ்.எஸ் நிறுவனத்தின் முதல் நாள் வர்த்தகம் நேற்று தொடங்கியது. முதல் நாள் வர்த்தகத்திலே 75 சதவீதம் வரை உயர்வடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

- லாபம் இல்லாமல் ஏர் இந்தியாவை வாங்க மாட்டோம் என்று பணியாளர்களுக்கு இண்டிகோ நிறுவனத்தின் சிஇஒ ஆதித்யா கோஷ் வாக்குறுதி அளித்துள்ளார்.

**ஜுலை - 3**

- ஜிஎஸ்டியால் கட்டுமானத்தில் உள்ள திட்டங்களுக்கு 12 சதவீதம் ஜிஎஸ்டி விதிக்கப்பட்டுள்ளது. கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளின் விலை உயரும்.

- நாடு முழுவதும் சரக்கு-சேவை வரி அல்லது ஜிஎஸ்டி என்கிற சீரான வரி விதிப்பு நடைமுறைக்கு வந்துவிட்டது.வரி விலை இன்னும் விரியும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

- டிராக்டர்ஸ் அண்ட் பார்ம் எக்யூப்மெண்ட் (டாபே) டிராக்டர் உதிரிபாகங்களுக்கான சரக்கு மற்றும் சேவை வரி குறைக்கப்பட்டது.

➢ ஆப்பிள் கூகுளுக்கு போட்டியாக களமிறங்குகின்றன கார் நிறுவனங்கள்.

➢ ஹீண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனத்தின் உள்நாட்டு கார் விற்பனை 5.6 சதவீதம் சரிந்தது.

➢ சரக்கு மற்றும் சேவை வரியால் வரி செலுத்துவோர் எண்ணிக்கை உயரும் என இந்திய தொழில் கூட்டமைப்பு கருத்து தெரிவித்துள்ளது.

**ஜுலை – 4**

➢ ஜிஎஸ்டி அமலாக்கத்திற்கு பிறகு இந்திய பங்குச் சந்தைகளின் வர்த்தகம் புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

➢ மும்பை பங்கு சந்தையில் இன்று காலை வர்த்தகம் தொடங்கியதும் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 9 காசுகள் உயர்ந்து 64.79 ரூபாயாக உள்ளது.

➢ மும்பை பங்கு சந்தையில் திங்கட்கிழமை நடைபெற்ற வர்த்தகத்தில் சென்செக்ஸ் 300 புள்ளிகள் அதிகரித்தது என்பது குறிப்பிடதக்கது.

➢ ஜிஎஸ்டி வரி குறைப்பின் பலனாக டி.வி.எஸ்.மோட்டார் கம்பெனியின் இருசக்கர வாகனங்களின் விலை ரூ.4150 வரை குறைந்துள்ளது. என டிவிஎஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

➢ பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.65.46எனவும் டீசல் விலை லிட்டருக்கு ரூ.56.25 காசுகள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**ஜுலை – 5**

➢ ஜிஎஸ்டி வரி விதிப்பால் இந்தியாவின் கடனை திருப்ப செலுத்தும் திறன் அதிகரிக்கும் என தர மதிப்பீட்டு நிறுவனமான மூடிஸ் கூறியுள்ளது.

➢ சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் ஜிஎஸ்டி வரி தாக்கல் செய்ய உதவும் வகையில் ‘இலட்ஜர்ஸ்’என்ற மென்பொருளை ‘இந்தியா.ஃ. பைலிங்ஸ்’ நிறுவன மேலாண்மை இயக்குனர் லயனல் சார்லஸ் சென்னையில் அறிமுகப்படுத்தினார்.

➢ சரக்கு சேவை வரி அமல்படுத்தப்பட்டப் பின்பு கியாஸ் சிலிண்டரின் விலை ரூ. 435லிருந்து ரூ. 23 விலை உயர்ந்து ரூ. 462 ஆக உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

➢ பொது துறையைச் சேர்ந்த நேஷனல் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் மொத்த பிரீமியம் சென்ற நிதி ஆண்டில் 18.8 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது.

- இந்திய நவரத்தின ஆபரணங்கள் ஏற்றுமதி ஏப்ரல் மற்றும் மே மாத காலத்தில் 11 சதவீதம் அதிகரித்துள்ளது என நவரத்தின மற்றும் ஆபரணங்கள் ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் (ஜி.ஜே.இ.பி.சி) தெரிவித்துள்ளது.

- 4ஜி வேகத்தில் ரிலையன்ஸ் ஜியோ தொடர்ந்து முதலிடத்தை பெற்றுள்ளது என்று தொலை தொடர்பு ஒழுங்காற்று ஆணையம் (டிராய்) தெரிவித்துள்ளது.

**ஜுலை - 6**

- பெட்ரோல் விலை 12 காசுகள் உயர்ந்து ரூ 65.58 காசுகளாகவும் டீசல் 16 காசுகள் உயர்ந்து ரூ.56.43 காசுகள் எனவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது எனவும் எண்ணெய் சிறுவனங்கள் தெரிவித்துள்ளது.

- ஜிஎஸ்டியால் தங்கத்தின் மீதான வரி 3 சதவீதமான உயர்ந்துள்ளது. இதனால் கள்ளசந்தைகள் பெருகும் என்று தங்க வர்த்தகர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

- அரசியல் நிச்சயமற்ற சூழல் குறைந்து வருவதால் வரும் மாதங்களில் பொதுபங்கு வெளியீடுகளின் (ஐபிஓ) எண்ணிக்கை உயர்வதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது என எர்னஸ்ட் அண்ட் யங் நிறுவனத்தின் அறிக்கையின் மூலம் தெரியவருகிறது.

- கடன் பத்திரிக்கைகளில் முதலீடும் செய்யும் அளவை 2 சதவீதம் உயர்த்தியிருப்பதன் மூலம் கூடுதலாக ரூ.3000 கோடி வரை முதலீடு வரும் என்று வருங்கால வைப்பு நிதி ஆணையம் முடிவு செய்துள்ளது.

- அரசியல் அமைதியின்மையின் காரணமாக டார்ஜிலிங் மாவட்டத்தில் தேயிலை ஏற்றுமதி முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

- அணில் சேமியா நிறுவனம் ஜிஎஸ்டி வரி விதிப்பை எண்பதிவு செய்வதற்காக ஜிஎஸ்டி மித்ரா என்கிற திட்டத்தை தொடங்கியுள்ளது.

**ஜுலை -7**

- நடப்பு நிதி ஆண்டுக்கான வட்டி விகிதம் அடுத்த மாதம் முடிவு செய்யப்படும் என மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் பண்டாரு தத்தாத்ரேயா தெரிவித்துள்ளார்.

- பொதுத்துறை காப்பீட்டு நிறுவனமான நேஷனல் இன்ஷீரன்ஸ் நடப்பு நிதி ஆண்டின் நான்காம் காலாண்டில் வெளியிட (ஐபிஓ) திட்டமிட்டுள்ளது என்று அந்நிறுவனத்தின் தலைவர் கூறியுள்ளார்.

- சர்வதேச பொருளாதார வளர்ச்சிக்கு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியே அடிப்படை என்று ஹார்வர்டு பல்கலைக்கழகம் தனது ஆய்வில் தெரிவித்துள்ளது.

- சர்வதேச இ-டெயில் நிறுவனமான அமெசான் இந்தியாவில் ரூ1680 கோடி முதலிடு செய்ய திட்டமிட்டுள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

- சூப்பர் பைக் கடன் பிரிவில் அதிக கவனம் செலுத்தவுள்ளதாக ஆக்சிஸ் வங்கி அறிவித்துள்ளது.

- மும்பை பங்கு சந்தையில் இன்று சென்செஸ் குறியீட்டு எண் 36 புள்ளிகள் உயர்ந்து 31245 புள்ளிகளாக உள்ளது.

**ஜூலை – 8**

- ரிலையன்ஸ் ஜியோ நிறுவனம் தொலைத்தொடர்புத் துறையில் தொடர்ந்து புரட்சி செய்து இருக்கிறது. ஆர் ஜியோ ரூ.500க்கு புதிய 4ஜி வோல்ட் ஸ்மாட்போனை அறிமுகம் செய்ய திட்டமிட்டுள்ளது.

- சென்னையை சேர்ந்த ஸ்ரீராம் கேபிடல் மற்றும் ஐடிஎப்சி வங்கி ஆகிய இரு நிறுவனங்கள் இணைய திட்டமிட்டிருக்கின்றன.இதன் மூலம் ஒருங்கிணைந்த நிறுவனங்களின் சந்தை மதிப்பு ரூ.60000 கோடிக்கு மேல் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

- இந்தியன் ஓவர்சிஸ் வங்கி சிறு தொழிலுக்கான கடன்களை அதிகரிப்பதங்கான முன்னுரிமையை அளித்து வருகிறது.சில்லறை வர்த்தக நிறுவனங்கள் தங்கள் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவது மற்றும் டிஜிட்டல் முறைக்கு மாற்றுவது போன்றவற்றிற்கு கடனுதவி வழங்கப்படும் என்று அவ்வங்கி கூறியுள்ளது.

- தங்கத்திற்கான வரி விதிப்பு அதிகரித்துள்ளதால் இந்தியாவில் தங்கத்திற்கான தேவை குறையும் என்று தங்க கவுன்சில் கூறியுள்ளது.

- பொதுத்துறை வங்கிளான பேங்க் ஆப் இந்தியாவில் கூடுதலாக 3.12 சதவீதம் பங்குகளை ஆயுள் காப்பீட்டு நிறுவனமான எல்.ஐ.சி.கையகப்படுத்தியுள்ளது என அவ்வங்கி கூறியுள்ளது.

- அகர்வால் ஹெல்த்கேர் நிறுவனத்தின் கீழிலான கண் மருத்துவமனைகள் விரிவாக்கத்திற்க்காக ரூ.160 கோடி நிதி திரட்டப்பட்டுள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

- தேசிய பங்குச் சந்தையில் நேற்று நடைபெற்ற வர்த்தகத்தில் நி∴ப்டி 8 புள்ளிகள் குறைந்து 9665 புள்ளிகள் நிலைத்தது. மும்பை பங்கு சந்தையில் சென்செக்ஸ் 8 புள்ளிகள் குறைந்து 31360 புள்ளிகளில் நிலைத்தது.

**ஜூலை -9**

- ஏர் இந்தியா நிறுவனத்தின் சர்வதேச செயல்பாடுகளை மட்டும் வாங்க இண்டிகோ நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

- ஜிஎஸ்டி அமல்படுத்தப்பட்ட பிறகு பொருள்களின் விலை விவரத்தை அறிந்து கொள்ள உதவும் செயலியை மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி நேற்று அறிமுகப்படுத்தியுள்ளார். ‘GST Rates Finder’ என்ற பெயரிலான இந்த செயலியில்

அனைத்து பொருள்களுக்கும் எவ்வளவு வரி என்ற விவரம் உள்ளது.

- ‘நிறுவனங்களும் வணிகர்களும்’ தங்கள் பொருட்களின் புதிய விலை குறித்து மக்கள் அறியும் வண்ணம் பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்ய வேண்டும் என மத்திய வருவாய் துறை செயலர் ஹஷ்முக் ஆதியா கோரிக்கை விடுத்துள்ளார்.

- அன்னிய நிதி நிறுவனங்கள் ‘பி-நோட்’ மூலம் ‘டெரிவேட்டிவ்’ பிரிவில் முதலீடு செய்ய ‘செபி’ தடை விதித்துள்ளது.

- எத்தகைய தடைகள் வந்தாலும் சிறிதும் தயக்கமின்றி தீவிரமாக வாராக்கடனை வசூலிக்க வேண்டும் என மத்திய நிதியமைச்சகம் வங்கிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

- ஐ.டி.எப்.சி வங்கி மற்றும் ஸ்ரீராம் கேபிடல் ஆகியவற்றை இணைப்பதற்கு நிர்வாகக் குழு கூட்டத்தில் ஒப்புதல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து இணைப்புக்கான வழிமுறைகளை வகுப்பதற்காக 90 நாள்கள் அவகாசத்தை நிர்வாகக் குழுக்கள் வழங்கியுள்ளன.

**ஜுலை -10**

- டிஜிட்டல் பரிவர்த்தனையின் வளர்ச்சி பாதுகாப்பு உட்பட பல்வேறு அம்சங்களில் அதிக கவனம் செலுத்துவதாக தேசிய பேமென்ட்ஸ் நிறுவனத்தின் (என்.பி.சி.ஐ) தலைவர் கூறியுள்ளார்.

- ஜிஎஸ்டி அமலாகும் போது உரங்கள் மீதான வரி ரத்து செய்யப்படும் என விவசாயிகள் எதிர்பார்த்திருந்த நிலையில் அதற்கு மாறாக 5 சதவீதம் வரி விதிப்பால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு விவசாயிகள் சங்க திண்டுகல் மாவட்ட செயலர் கூறியுள்ளார்.

- ஏர் இந்தியா நிறுவனத்தை பகுதி பகுதியாக பிரித்து விற்பதற்கு மத்திய அரசு திட்டமிட்டு வருகிறது. தற்போது ஏர் இந்தியா நிறுவனம் நஷ்டத்தில் இயங்கி வருவதால் பகுதி பகுதியாக பிரித்து விற்பதாக மத்திய அரசு அதிகாரிகள் தெரிவிக்கின்றன.

- நடப்பு நிதி ஆண்டின் முதல் காலாண்டு ஜுன் 30ம் தேதியுடன் முடிவடைந்தது. இன்னும் சில நாட்களில் காலாண்டு முடிவுகள் வெளிவரத் தொடங்கும். ஐ.டி நிறுவனத்தின் இத்தகைய காலாண்டு வெளியிடு சிறப்பாக இருக்காது என அத்துறை வல்லுநர்கள் தெரிவிக்கின்றன.

- சர்க்கர நாற்காலி மட்டுமன்றி மாற்று திறனாளிகள் பயன்படுத்தும் பல்வேறு சாதனங்களுக்கும் ஜிஎஸ்டி வரி விதிக்கப்பட்டுள்ளது. இவ்வரி இப்பொருட்களின் மீதான விலையைக் குறைப்பதற்காகதான் என தகவல்கள் வெளியாகின.

- ஜிஎஸ்டி பலன்களை வாடிக்கையாளர்களுக்கு கொண்டு செல்லும் விதமாக (எப்.எம்.சி.ஜி.) துறையைச் சேர்ந்த கோல்கேட் பாமோலிவ் இந்தியா நிறுவனம் பற்பசை மற்றும் பல் துலக்கும் பிரஷ்களின் விலையை 8-9 சதவீதம் குறைப்பதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

➢ சரக்கு மற்றும் சேவைகள் வரி (ஜிஎஸ்டி) அமலாக்கத்தில் உள்ளது. இந்நிலையில் கன்னியாகுமரி மாவட்டத்தின் விவசாய உற்பத்திப் பொருளாகவும் தொழிற்சாலை கச்சாப் பொருளாகவும் இருக்கும் ரப்பருக்கு வரி விதிப்பு சாதகமா பாதகமா என புரியாமல் பெரும்பாலான வணிகர்களும் விவசாயிகளும் தவிப்பில் உள்ளதாக ரப்பர் துறையினர் கூறுகின்றனர்.

**ஜூலை -11**

➢ பரஸ்பர நிதி சார்ந்த பல்வேறு திட்டங்களிலிருந்து முதலீட்டாளர்கள் நிதி திரட்டி அதனை பங்குகள் நிதி சந்தைகள் கடன்பத்திரங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்கின்றன. இந்நிலையில் பரஸ்பர நிதி திட்டங்களிலிருந்து ரூ.16592 கோடி வெளியேறியுள்ளது என அவ்வமைப்பின் கூட்டமைபு தெரிவித்துள்ளது.

➢ மும்பை பங்கு சந்தையில் வாரத்தின் முதல் நாள் நடைப்பெற்ற வர்த்தகத்தில் சென்செக்ஸ் 355 புள்ளிகள் அதிகரித்து வரலாற்றில் முதன்முறையாகப் புதிய உச்சம் தொட்டது.

➢ இந்தியாவில் உணவுப் பொருள்களின் சில்லறை விற்பனைத் துறையில் அமேஸானின் ரூ.3250 கோடி மதிப்பிலான அந்நிய நேரடி முதலீட்டு திட்டத்துக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

➢ உள்நாட்டில் பயணிகள் வாகன விற்பனை சென்ற ஜுன் மாதத்தில் 11.31 சதவீதம் சரிவடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

➢ தேசிய விமான சேவை நிறுவனமான ஏர் இந்நியாவின் உள்ளூர் விமான சேவையில் இனி அசைவ உணவு வழங்கப்படமாட்டாது என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

➢ நடுத்தர கால கடன்களுக்கான வட்டி விகிதத்தை 0.15 சதவீதத்திலிருந்து 0.25 சதவீதம் வரை குறைந்துள்ளதாக சிண்டிகேட் வங்கி தெரிவித்துள்ளது.

**ஜூலை -12**

➢ வருமான வரித்துறையினர் வரி செலுத்துவோரின் வசத்திக்காக ஆயகர் சேது எனும் செயலியை அறிமுகம் செய்துள்ளனர்.வரி தொடர்பான சந்தேகங்களுக்கு இச்செயலி மூலம் விடை கிடைக்கும். இதன் மூலம் நிரந்தர கணக்கு எண் மற்றும் ஆதார் அடையாள எண் இணைக்கும் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

➢ தனியார் துறையைச் சேர்ந்த இண்டஸ்இண்ட் வங்கியில் லாபம் முதல் காலாண்டில் 26 சதவீதம் உயர்வு கண்டுள்ளது என அவ்வங்கி அறிக்கையில் வெளியிட்டுள்ளது.

➢ எஸ்பிஐ லை.்.ப் காப்பீட்டு நிறுவனத்தின் பங்கு வெளியீட்டுக்கு பாரத் ஸ்டேட் வங்கியின் (எஸ்பிஐ) மத்திய நிர்வாகக் குழுவின் ஒப்புதல் கிடைத்துள்ளது என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

- கேரளத்தில் தலையிடத்தைக் கொண்டு இயங்கி வரும் சௌத் இந்தியன் வங்கி முதல் காலாண்டில் ரூ.101.47 கோடி ஈட்டியது என அவ்வங்கியின் நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

- மும்பை பங்குச் சந்தையில் இன்றைய வர்த்தக நேர முடிவில் சென்செஸ் குறியீட்டு எண் 31 புள்ளிகள் உயர்ந்து 31747 புள்ளிகளாக உள்ளது. பஜாஜ் ஆட்டோ டாடா மோட்டார்ஸ் என்டிபிசி ஆகிய நிறுவனங்களின் பங்கு விலைகள் 2.44சதவீதம் 2.28 சதவீதம் 1.81 சதவீதமாக உயர்ந்துள்ளது.

- நடப்பு நிதிஆண்டின் முதலாம் காலாண்டுக்கான நிதி நிலை முடிவுகளை அந்நிறுவனங்கள் அடுத்தடுத்து வெளியிட்டு உள்ளன. இந்தியப் பங்கு சந்தைகள் தொடர்ந்து இரண்டாவது சாதனை ஏற்றத்துடன் முடிவடைந்தன.

**ஜூலை - 13**

- இந்திய ரூபாயின் மதிப்பு 16 காசுகள் உயர்ந்துள்ளது . இந்திய ரூபாய் படி ஒரு டாலரின் மதிப்பு 64.54 ரூபாயாக உயர்துள்ளது.

- காய்கறிகள் பருப்பு வகைகள் பால் பொருள்களின் விலை குறைந்ததால் சில்லறை பணவிறக்கம் 1.54 சதவீதமாக குறைந்துள்ளது.

- பிளாஸ்டர் ஆப் பாரீஸ் என்கிற வேதிப்பொருளால் விநாயகர் சிலைகள் தயாரிக்க பெங்களூருவில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் கிருஷ்ணகிரியில் விநாயகர் சிலைகள் விற்பனை அதிகரிக்கும் என தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

- மும்பை பங்குசந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் முதல் முறையாக 32000 புள்ளிகளைக் கடந்து வர்த்தகமாகியுள்ளது. தேசிய பங்குச் சந்தையில் நிப்.்.டி 9879 புள்ளிகள் உயர்ந்து உச்சத்தை தொட்டுள்ளது.

- ரிலையன்ஸ் ஜியோ புதிய அறிவிப்பை அறிவித்ததை தொடர்ந்து ரிலையனக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் பங்கு 9 ஆண்டு உச்சத்தில் உள்ளது.

- வட மாநிலங்களில் கன மழை காரணமாக சென்னை கோயம்பேடு சந்தையில் தக்காளி இறக்குமதி குறைந்துள்ளது. தக்காளி ஒரு கிலோ ரூ.100 க்கு விற்கப்படுகிறது. பண்ணை பசுமை கடைகளில் தக்காளி ரூ.50 க்கு விற்கப்படுகிறது.

- நாட்டின் மிகப் பெரிய பொதுத்துறை வங்கியான எஸ்பிஐ ஐஎம்பிஎஸ் என்கிற உடனடி பண பரிமாற்றத்துக்கான கட்டணங்களை மாற்றியமைத்துள்ளது. இதன்படி ரூ.1000 வரையிலான பரிமாற்றத்திற்கு ஐஎம்பிஎஸ் கட்டணம் நீக்கப்பட்டுள்ளது என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

**ஜூலை -14**

- சர்வதேச சந்தையில் டிசிஸ் நிறுவனம் வளர்ச்சி கண்டு வருவதாக அந்நிறுவன இயக்குனர் ராஜேஷ் கோபிநாத் தெரிவித்துள்ளார்.

- மும்பை பங்கு சந்தையில் நடைப்பெற்ற வர்த்தகத்தில் சென்செக்ஸ் 32000 புள்ளிகளை கடந்து புதிய சாதனைப் படைத்தது.

- நாட்டின் மிகப் பெரிய ஐடி நிறுவனமான டிசிஎஸ் நிறுவனத்தின் ஜுன் காலாண்டு நிகர லாபம் 6 சதவீதம் சரிந்திருக்கிறது.

- கடுமையான நிதி நெருக்கடி காரணமாக உள்ள அம்மா உணவகங்களின் எண்ணிக்கையை குறைக்க சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.

- ஜிஎஸ்டி வரி விதிப்பை காரணம் காட்டி கேஸ் சிலிண்டர் டெலிவரிக்கு ரூ.60 கூடுதல் கட்டணம் பொதுமக்களிடையே வசூலிக்கப்பட்டது.

- வகுப்பு வாரிய நிர்வாக மானியம் ரூ.2 கோடியாக உயர்ந்துள்ளது.

- சிறு குறு நடுத்தர நிறுவனங்களுக்கு மானியம் அறிவிக்கப்பட்டுள்ளதாக சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

**ஜுலை - 15**

- ஹட்கோ கோல் இந்தியா ஹிந்துஸ்தான் காப்பர் போன்ற ஆறு நிறுவனங்களில் மத்திய அரசின் பங்கு 75 சதவீதத்திற்கு மேல் இருக்கிறது. சரியான நேரத்தில் இந்த நிறுவனங்களின் பங்குகள் விலக்கிக் கொள்ளப்படும் என்று நிதி அமைச்சக அதிகாரி தெரிவித்துள்ளார்.

- பண மதிப்பு நீக்கம் செய்யப்பட்ட சமயத்தில் மக்கள் தங்களிடம் உள்ள பழைய 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுக்களை வங்கியில் டெபாசிட் செய்தனர். இதில் 5.56 லட்சம் நபர்கள் டெபாசிட் செய்த தொகைக்கும் அவர்கள் வருமானத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும் அதற்கான தகுந்த விளக்கம் அளிக்க வேண்டும் நோட்டீஸ் அனுப்பியுள்ளதாக வருமான வரித்துறை தெரிவித்துள்ளது.

- இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் ஜுன் காலாண்டு நிகர லாபம் 1.4 சதவீதம் உயர்ந்து ரூ.3843 கோடியாக உயர்துள்ளது என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

- ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் இணையதளம் மூலம் பணப்பரிமாற்றம் செய்யும் வாடிக்கையாளர்கள் இனி 75 சதவீதம் அளவுக்குக் குறைவான கட்டணம் செலுத்தினால் போதும் என்று எஸ்பிஐ உயர் அதிகாரி தெரிவித்துள்ளார். டிஜிட்டல் முறையிலான பணப்பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் விதத்தில் இந்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

- பங்கு சந்தையில் திடீர் சரிவு.மும்பை பங்குச் சந்தையில் சென்செக்ஸ் 16 புள்ளிகளை இழந்து 32020 புள்ளிகள் உள்ளது.

- நாட்டின் பணவீக்கம் கடந்த எட்டு மாதங்களில் இல்லாத அளவிற்கு சென்ற ஜுன் மாதத்தில் 0.90 சதவீதமாக சரிந்ததாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- சென்னையில் பண்ணை பசுமை நுகா்வோா் கடைகளில் தக்காளி கிலோ ரூ.66 க்கும் சின்ன வெங்காயம் ரூ.45க்கும் விற்பனை செய்யப்படுவதால் அங்கு பொது மக்களின் வரத்து அதிகரித்துள்ளது.

**ஜுலை - 16**

- ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் இந்தியாவில் முதலீடு செய்வதற்கும் தொழில் துவங்குவதற்கும் உரிய ஆலோசனைகளை வழங்க 'ஐ.எப்.எம்' என்ற தனிஅமைப்பு ஏற்படுத்தப்படும் என மத்திய வா்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

- மூக்கு கண்ணாடி கடைகளின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்த மத்திய அரசு புதிய விதிமுறைகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இதற்காக மத்திய சுகாதாரம அமைச்சகம் தனிகுழுவை அமைத்துள்ளது.

- ஐசிஐசிஐ லோம்பாா்டு ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனத்தில் 19 சதவீத பங்குகளை பொதுப்பங்கு வெளியீடு வாயிலாக விற்பனை செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதற்கு அனுமதி கோரி இந்திய பங்குச் சந்தை ஒழுங்காற்று ஆணையமாக செபியிடம் விண்ணப்பித்துள்ளதாக ஐசிஐசிஐ வங்கி தெரிவித்துள்ளது.

- மும்பை பங்குச் சந்தையில் கடந்த வாரம் நடைபெற்ற வா்த்தகத்தில் சென்செக்ஸ் 32000 புள்ளிகள் என்ற மைல்கல்லை எட்டி வரலாறு சாதனை படைத்தது.

- இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் ஜுன் காலாண்டு நிகர லாபம் 1.4 சதவீதம் உயா்ந்து ரூ 3843 கோடியாக இருக்கிறது.

- பட்டியலிடப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களில் பொதுமக்களின் பங்கு குறைந்தபட்சம் 25 சதவீதம் இருக்க வேண்டும் என 2014ம் ஆண்டில் பங்குச்சந்தை ஒழுங்கு முறை ஆணையமான செபி விதியை உருவாக்கியது.

**ஜுலை 17**

- இலங்கையில் தொடா் வறட்சி காரணமாக நெல் உற்பத்தியில் ஏற்ப்பட்டுள்ள வீழ்ச்சியையடுத்து ஆசிய நாடுகளிலிருந்து அவசரமாக அரிசியை இறக்குமதி செய்ய அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

- பணமதிப்பு நீக்கத்துக்குப் பிறகு டெபிட் காா்டுகள் மற்றும் கிரெடிட் காா்டுகள் மூலம் மேற்கொள்ளும் பரிவா்த்தனைகள் 7 சதவீதமாக அதிகரித்துள்ளது. பணமதிப்பு நீக்கத்திற்குப் பிறகு டிஜிட்டல் பரிவா்த்தனை 23 சதவீதமாக உயா்ந்துள்ளது.

- புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சரக்கு மற்றும் சேவை வரியின் (ஜிஎஸ்டி) கீழ் வா்த்தகா்கள் ஜுலை 30ம் தேதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று மத்திய

அரசு தெரிவித்துள்ளது.

- இரு சக்கர வாகன விற்பனையில் டிவிஎஸ் நிறுவனம் இரண்டாவது இடத்தில் உள்ளது.

- நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இண்டர்நெட் செயலிகளின் பங்களிப்பு ரூ.14 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது என தொலை தொடர்புத் துறை அமைச்சர் மனோஜ் சின்ஹொ தெரிவித்துள்ளார்.

- ஜாப் ஒரக் நிறுவனங்களுக்கு 18 சதவீதம் வரி அறிவிக்கப்பட்டுள்ளதால் பின்னலாடைத் தொழில்த்துறை தடுமாறிய நிலையில் உள்ளது.

- மூலப்பொருளின் கடுமையான விலையேற்றம் மற்றும் ஜிஎஸ்டி காரணமாக தமிழகத்தின் பாரம்பரிய கோரைப் பாய் தயாரிக்கும் தொழில் அடியோடு நசியும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

- வங்கி அட்டை வாயிலான பணப் பரிமாற்றகள் 7 சதவீதம் மட்டுமே வளர்ச்சியடைந்துள்ளது.

- ஜன் தன் வங்கிக் கணக்குகளில் டெபாசிட் இதுவரை இல்லாத அளவு ரூ.64564 கோடி உயர்ந்துள்ளது.

**ஜுலை -18**

- சிகரெட் மீது கூடுதலாக 5 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

- வறட்சி அதிகரித்ததால் வாழை விவசாயம் பாதிப்பு : வரத்து குறைவால் உச்சத்தில் வாழைத்தார் விலை.

- அடுத்த நான்கு ஆண்டுகளுக்கான விரிவாக்கத் திட்டங்களில் ரூ.61000 கோடியை முதலீடு செய்துள்ளதாக எச்பிசிஎல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

- சிமெண்ட் தயாரிப்பு நிறுவனமான ஏசிசி இரண்டாம் காலாண்டு லாபம் 32.57 சதவீதம் அதிகரித்தது.

- தேசிய பங்கு சந்தையின் முன்னாள் தலைவர் சித்ரா ராமகிருஷ்ணாவுக்கு எட்டு மாத ஊதியமாக ரூ 22.98 கோடி வழங்கப்பட்டது.

- பங்கு சந்தையில் இந்திய ரூபாயின் மதிப்பு 54 புள்ளிகள் உயர்ந்துள்ளது.

- ரூ.999 க்கு நோக்கியா செல்லிடப்பேசி நாளை முதல் விற்பனை செய்ய உரிமம் பெற்றுள்ளதாக எச்எம்டி குளோபல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

## ஜூலை – 19

- வங்கி சாரா நிதி நிறுவனமான சுந்தரம் பைனான்ஸ் நிறுவனம் முதல் காலாண்டில் ரூ. 117 கோடி லாபம் ஈட்டியது.

- தொழில் தொடங்குவதை எளிதாக்கும் வகையில் 1200க்கும் மேற்பட்ட சட்டங்களை மத்திய அரசு நீக்கியுள்ளது.
- ஹெச்எப்சி ஸ்டாண்டர்ட் ஆயுள் காப்பீட்டு நிறுவனம் பொதுப்பங்கு வெளியிட அந்நிறுவனத்தின் இயக்குநர் குழு ஒப்புதல் வழங்கி இருக்கிறது.

- வேகமாக விற்பனையாகும் நுகர்பொருள்கள் துறையைச் சார்ந்த ஹிந்துஸ்தான் யுனிலீவரின் முதல் காலாண்டு லாபம் 9சதவீதம் அதிகரித்தது.

- பேட்டரியால் இயங்கும் பேருந்துகளை தமிழக அரசுக்கு குறைந்த விலையில் அளிக்க முடியும் என அசோக் லேலண்ட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும் தலைமைச் செயலதிகாரியுமான வினோத் கே. தாசரி தெரிவித்தார்.

## ஜூலை - 20

- மன் கி பாத் நிகழ்ச்சியின் மூலம் ஆல் இந்தியா ரேடியோவிற்கு ரூ.10 கோடி வருமானம் ஈட்டியுள்ளதாக மத்திய அமைச்சர் தெரிவித்முள்ளார்.

- ஹிந்துஸ்தான் பெட்ரோலிய நிறுவனத்தின் (ஹெச்பிசிஎல்) 51 சதவீத பங்குகளை எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம் (ஓஎன்ஜிசி) நிறுவனத்துக்கு விற்பனை செய்வதாக மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- ஏப்எம்சிஜி துறையைச் சேர்ந்த ஹிந்துஸ்தான் யுனிவேர் (ஹெச்யுஎல்) நிறுவனத்தின் ஜூன் காலாண்டு நிகர லாபம் 9 சதவிதம் அதிகரித்து. ரூ1.283 கோடியாக உயர்ந்துள்ளது.

- பொதுத்துறை வங்கியான கனரா வங்கியின் நிகரா லாபம் 9.9 சதவீதம் உயர்ந்து ரூ.251.60 கோடியாக இருக்கிறது என்று அவ்வங்கி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

- வங்கிகள் தங்களது வாரக்கடனில் 60 சதவீதத்தை தள்ளுபடி செய்ய வேண்டியிருக்கும் என்று தர மதிப்பீட்டு நிறுவனமான கிரிஸில் கூறியுள்ளது.

- பொதுத்துறையை சேர்ந்த மிகப் பெரிய பொது காப்பீட்டு நிறுவனமான நியூ இந்தியாவின் (ஐபிஓ) பொதுப்பங்கு வெளியீடு வரும் அக்டோபர் மாதம் வெளியாகும் என்று அந்நிறுவனத்தின் மூத்த அதிகாரி தெரிவித்துள்ளர்.

- சரக்கு மற்றும் வேவை வரி காரணமாக பொருட்களின் விலை 4 சதவீதம் முதல் எட்டு சதவீதமாக குறையும் என்று மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லி கூறியுள்ளர்.

## ஜூலை - 21

- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் முதல் காலாண்டில் ரூ.9,108 கோடி லாபம் ஈட்டியதாக அந்நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

- நடப்பு ஆண்டில் இந்திய பொருளாதாரம் 7.4 சதவீதம் வளர்ச்சி காணும் என ஆசிய மேம்பாட்டு வங்கி (ஏடிபி) தெரிவித்துள்ளது.

- கோடக் மஹிந்திரா வங்கியின் நிகர லாபம் நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் 23 சதவீதம் உயந்துள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

- விப்ரோ நிறுவனத்தின் நிகர லாபம் 1.2 சதவீதம் உயர்ந்து ரூ.2,076.7 கோடியாக உள்ளது என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

- தனியார் துறை வங்கிகளில் முன்னணியில் உள்ள ஐசிஐசிஐ வங்கி ஏடிஎம் மூலம் தனி நபர் ரூ.15 லட்சம் வரை கடன் பெறலாம் என்ற புதிய வசதியை அந்நிறுவனம் உருவாக்கியுள்ளது.

- மும்பை பங்குச் சந்தையில் இன்றைய வர்த்தகத்தில் சென்செக்ஸ் குறியீட்டு எண் 51 புள்ளிகள் குறைந்து 31.904 புள்ளிகளாக உள்ளது.

- 100 கோடி பேருக்கு 4ஜி ஜியோ போன் இலவசமாக வழங்கப்படும் என்று முகேஷ் அம்பானி அறிவித்துள்ளார்.

## ஜூலை – 22

- என்எல்சி இந்தியா நிறுவனத்துக்கு சிறந்த நிதி மேலாண்மைக்கான தேசிய விருது வழங்கப்பட்டது.

- இந்தியன் வங்கியின் நிகரலாபம் நிகழ் நிதி ஆண்டின் முதல் காலாண்டில் ரூ.372.41 கோடியாக உயர்ந்துள்ளது என்று அந்த வங்கியின் நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

- ஹிந்துஜா குழுமத்தை சேர்ந்த அசோக் லேலண்டு நிறுவனம் முதல் காலாண்டில் ரூ.111.23 கோடி லாபம் ஈட்டியுள்ளது.

- நடப்பு ஆண்டின் முதலாம் காலாண்டில் தங்கம் இறக்குமதி இரட்டிப்புக்கும் அதிகமாகி 11.25 பில்லியன் டாலர்களுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

- ரூ.1500 டெபாசிட்டில் விலையில்லா 4ஜி செல்லிடைப்பேசிகளை வழங்க உள்ளதாக ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் தலைவர் கூறியுள்ளார்.

- பார்தி ஏர்டெல், வோடஃபோன், ஐடியா உள்ளிட்ட 6 தொலைதொடர்பு நிறுவனங்கள் தங்கள் ஆண்டு வருவாயைக் (2014-2015)ஆண்டுகளில் ரூ.61.064.5 கோடி அளவுக்கு குறைத்து காட்டியுள்ளதாக தலைமை கணக்குத் தணிக்கையாளர் (சிஏஜி) அறிக்கையில்

தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஜூலை – 23**

- 12 ஆண்டுகளுக்கு பிறகு ரிலையன்ஸ் நிறுவனம் ஒரு பங்கு வைத்திருப்பவர்களுக்கு கூடுதலாக ஒரு பங்கினை போனஸ் வழங்குவதாக அறிவித்துள்ளது. இந்தியாவில் அறிவிக்கப் பட்டிருக்கும் மிகப்பெரிய போனஸ் பங்கு அறிவிப்பு இதுவாகும்.

- நடப்பு நிதியாண்டு ஏப்ரல் முதல் ஜூன் காலாண்டில் தங்கம் இறக்குமதி இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது.

- வங்கிகளின் வாராக் கடன் அளவு ரூ 7 லட்சம் கோடியாக உள்ளது. வங்கிகளின் வாராக் கடன் அளவைக் குறைப்பதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என ரிசர்வ் வங்கியின் துணை கவர்னர் வீரல் ஆச்சார்யா வலியுறுத்தியுள்ளார்.

- பொதுத் துறை வங்கியான இந்தியன் வங்கியின் ஜூன் காலாண்டு நிகர லாபம் 21.16 சதவீதம் உயர்ந்து ரூ 372.40 கோடியாக உள்ளது.

- காதி முத்திரையைப் பயன்படுத்தி பொருள்களை விற்க வகை செய்யும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஜவுளி உற்பத்தி நிறுவனமான அரவிந்த் மற்றும் கதர் கிராமத் தொழில் நிறுவன வாரியம் ஆகியவை கையெழுத்திட்டன. இந்த ஒப்பந்தப்படி அரவிந்த் நிறுவனம் தயாரிக்கும் டெனிம் காதி மற்றும் இதர காதி தயாரிப்புகளில் கே.வி.ஐ.சி. முத்திரை இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

- விலையில்லா 4ஜி வசதி கொண்ட 'ஜியோபோன்' செல்லிடப்பேசியை ரிலையன்ஸ் அனைவருக்கும் வழங்க உள்ளதாக ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவன தலைவர் முகேஷ் அம்பானி அறிவித்தார். இந்த செல்லிடப்பேசியை பெற விரும்புவோர் வைப்புத்தொகையாக ரூ 1500 செலுத்த வேண்டும்.

- என்எல்சி இந்தியா நிறுவனம் சிறந்த நிதி மேலாண்மைக்கான தேசிய விருதைப் பெற்றது.

**ஜூலை – 24**

- முதலீட்டுக்கு சிறந்தது "கோல்டு ஈடிஎ∴ப்" எனவும், உலக அளவில் பார்த்தால் தங்கப் பயன்பாட்டில் இந்தியர்கள் முன்னணியில் உள்ளதாகவும் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

- காதி முந்திரையைப் பயன்படுத்தி பொருள்களை விற்க வகை செய்யும் பரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஜவுளி உற்பத்தி நிறுவனமான அரவிந்த் மற்றும் கதர் கிராமத் தொழில் நிறுவன வாரியம் (கே.விஜ.சி.) கையெழுத்திட்டுள்ளன.

- கணக்கில் வராத பணம் ரூ.71941 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக உச்ச நீதி மன்றத்திடம் மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.

- நடப்பு நிதி ஆண்டின் வளர்ச்சி 7.5 சதவீதமாக இருக்கும். இருந்தாலும் நல்ல வேலை வாய்ப்புகளை உருவாக்குவது சவால் மிகுந்ததாக இருக்கும் என நிதி ஆயோக் துணைத் தலைவர் அர்விந்த் பன கொரியா தெரிவித்துள்ளார்.

- டாடா குழுமம், செயல்படாத நிறுவனங்களை விற்க திட்டம் செய்யப்பட்டுள்ளதாக டாடா சன்ஸ் தலைவர் என். சுந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

- ஜப்பானின் ஹோண்டா மோட்டார் கார்ப்பரேஷன் நிறுவனம் தனது 10வது தலைமுறை ஹோண்டா அக்கார்ட் காரை அமெரிக்காவில் சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- மும்பை பங்குச் சந்தையில் கடந்த வாரம் ரூ.21,009.59 கோடி மதிப்பிலான வர்த்தகமும், தேசிய பங்கு சந்தையில் ரூ.1,36,048.72 கோடி வர்த்தகமும் நடைபெற்றது. இது பங்கு சந்தைகளுக்கான "புதிய சாதனை வாரம" என கருதப்படுகிறது.

- வங்கிகளில் டெபாசிட் செய்யப்பட்ட பழைய ரூபாய் நோட்டுகளில் கள்ள நோட்டுகளைத் தனியே கண்டறிவதற்கு 12 பண சோதனை இயந்திரங்களை ரிசர்வ் வங்கி குத்தகைக்கு எடுத்துள்ளது.

**ஜூலை - 25**

- இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி இந்த நிதியாண்டிலும் அடுத்துவரும் நிதியாண்டிலும் சீனாவின் பொருளாதார வளர்ச்சியை முந்தும் என்று சர்வதேச செலாவணி நிதியம் தெரிவித்துள்ளது

- வோடா∴போன் - ஐடியா நிறுவனத்தின் இணைப்பிற்கு தொழில் தாவாக்களை விசாரிக்கும் அமைப்பான காம்படிஷன் கமிஷன் ஆ∴ப் இந்தியாவின் அனுமதி கிடைத்துள்ளது.

- எண்ணெய் வினியோகம் செய்யும் இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனத்தில் அரசுக்கு சொந்தமான 51 சதவீத பங்குகளையும் ஓ.என்.ஜி.சி.க்கு (எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம்) விற்க திட்டமிடப்பட்டுள்ளது.

- தனியார் துறையைச் சேர்ந்த ஹெச்டிஎப்சி வங்கியின் முதல் காலாண்டு லாபம் ரூ.3,893.84 கோடியாக உள்ளது என வங்கி கூறுகிறது.

- ரிலையன்ஸ் நிப்பான் லை∴ப் அஸட் மேனேஜ்மெண்ட் நிறுவனத்தின் முதல் காலாண்டு லாபம் 27 சதவீதம் அதிகரித்துள்ளது.

- முருகப்பா குழுமத்தைச் சேர்ந்த வென்ட் இந்தியா நிறுவனத்தின் லாபம் முதல் காலாண்டில் 56 சதவீதம் அதிகரித்தது.

- இந்திய பங்குச் சந்தையில் நடைபெற்ற வர்த்தகத்தில் நி∴ப்டி 10000 புள்ளிகளை தொட்டு சென்செக்ஸும் புதிய உச்சத்தை தொட்டுள்ளது.

- அசோக் லேலண்ட்டு நிறுவனம் கா்நாடக மாநில போக்குவரத்துக் கழகத்திடமிருந்து (கேஎஸ்ஆர்டிசி) ரூ.650 கோடிக்கு ஆர்டரை பெற்றுள்ள செய்தியை அந்நிறுவனம் வெளியிட்டுள்ளது.

**ஜுலை - 26**

- சஹாரா குழுமத்தின் தலைவா் சுப்ரதா ராய் ரூ.1500 கோடி தொகையை செப்டம்பா் 7ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

- வங்கி கடன் வழங்குவதை 10 சதவீதம் அதிகரிக்க இலக்கு நிா்ணயிக்கப்பட்டுள்ளதாக யூனியன் வங்கி நிா்வாக இயக்குநா் ஜி.ராஜ்கிரண் ராய் தெரிவித்தாா்.
- காலாண்டு நிகர லாபம் 9 சதவீதம் உயா்ந்து ரூ.66.12 கோடியாக உள்ளது என லஷ்மி விலாஸ் வங்கி நிா்வாக இயக்குநா் பாா்த்தசாரதி முகா்ஜி தெரிவித்தாா்.

- கரூா் வைஸ்யா வங்கியின் விற்றுமுதல் ரூ.95,135 கோடியாக உயா்ந்துள்ளது என்று வங்கியின் நிா்வாக இயக்குநா் கே.வெங்கட்ராமன் கூறியுள்ளாா்.

- இந்திய இரு சக்கர வாகனத் துறையில் முதலிடத்தில் உள்ள ஹீரோ மோட்டோகாா்ப் நிறுவனத்தின் முதல் காலாண்டு நிகர லாபம் 3.5 சதவீதம் அதிகரித்து ரூ.914.04 கோடியாக உள்ளது என்று அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

- கடந்த 1952ம் ஆண்டு ஃபின்லாந்து தலைநகா் ஹெல்சிங்கியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியின் போது மல்யுத்தப் பிரிவில் இந்திய வீரா் காஷாபா ஜாதவ் வெண்கல பதக்கம் வென்றாா். இந்தியாவுக்கு கிடைத்த முதல் பதக்கம் இது தற்போது இப்பதக்கம் ஏலத்துக்கு வந்துள்ளது.

- 2 தனியாா் நிறுவனத்தின் பால் மாதிரிகளை எடுத்து பரிசோதனை செய்ய தமிழக அரசுக்கு இடைக்கால தடை விதித்து ஐகோா்ட்டு உத்தரவிட்டுள்ளது.

**ஜுலை - 27**

- தனியாா் வங்கியான யெஸ் வங்கியின் ஜுன் காலாண்டு நிகர லாபம் 32 சதவீதம் உயா்ந்து ரூ.731 கோடியாகவும் மொத்த வருமானம் ரூ.5,785 கோடியாக உயா்ந்துள்ளது.

- பொதுத்துறை நிறுவங்களான எம்எஸ்டிசி மற்றும் நீப்போ நிறுவனங்களின் பங்குகளை விற்பனை செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

- மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்கும் அமைப்பான நிதி ஆயோக் சில குறிப்பிட்ட பணிகளை நிறைவேற்ற தனியாா் ஆலோசனை நிறவனங்களான யா்னஸ்ட் அண்ட்யங், மெக்கென்ஸி, பாஸ்டன் கன்சல்டிங் குரூப் ஆகியவற்றின் சேவையைப் பயன்படுத்த முடிவு செய்துள்ளது.

- நிரந்தர கணக்கு எண்(பான்) வைத்துள்ள வரி செலுத்தாத நிறுவனங்களின் எண்ணிக்கை 6.83 லட்சமாக உள்ளது என்று மத்திய நிதித்துறை இணை அமைச்சா் சந்தோஷ் குமாா் கங்வாா் தெரிவித்துள்ளாா்.

- ஸ்நாப்டீல் நிறுவனத்தை வாங்குவதற்கு பிளிப்கார்ட் நிறுவனம் ரூ.95 கோடி டாலர் நிர்ணயம் செய்துள்ளது.

- இந்திய குடிமக்களுக்கு வழங்கப்படும் ஆதார் அட்டைக்கு இதுவரை ரூ.9,055 கோடியை மத்திய அரசு செலவு செய்துள்ளதாக மத்திய எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் பி.பி சௌத்ரி தெரிவித்துள்ளார்.

- தமிழகத்தில் மின்சார நுகர்வு குறித்து மாநில மின்சுமை பகுப்பு மையம்(எஸ்எல்டிசி) நடத்திய ஆய்வில் வடசென்னையில் தான் அதிகமாக மின்நுகர்வு செய்யப்பட்டதாகவும் இதுவரை 2 ஆயிரத்து 100 மொவாட் அளவு மின்சாரம் நுகரப்பட்டதாகவும் தெரியவருகிறது.

**ஜுலை - 28**

- ஸ்நாப்டீல் குழுமத்தை சேர்ந்த பிரீசார்ஜ் நிறுவனத்தை 385 கோடி ரூபாய்க்கு வாங்குவதற்கு ஆக்ஸிஸ் வங்கி முடிவெடுத்துள்ளது.

- செக்யூரெட்டி அண்ட் இன்டெலிஜன்ஸ் சர்வீஸ்(எஸ்ஐஎஸ்) நிறுவனம் பொதுப்பங்கை(ஐபிஓ) ஜுலை 31ம் தேதி வெளியிடுகிறது.

- சென்னையைச் சேர்ந்த கால்டாக்சி நிறுவனமான பாஸ்ட் டிராக், செயலி மூலமான சேவைகளுக்கு குறைவான கட்டணத்தை அறிவித்துள்ளது.

- மாருதி சுசூகியின் ஜுன் காலாண்டு நிகர லாபம் 4.4 சதவீதம் உயர்ந்து ரூ.1,556 கோடியாக உள்ளது.

- சென்னை முருகப்பா குழுமத்தைச் சேர்ந்த சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் மற்றும் பைனான்ஸ் நிறுவனத்தின் முதல் காலாண்டு லாபம் ரூ.206.58 கோடியாக உள்ளது.

- நாட்டின் மென்பொருள் ஏற்றுமதியில் நான்காவது பெரிய நிறுவனமாகத் திகழும் ஹெச்.சி.எல் டெக்னாலஜீஸ் நிறுவனம் முதல் காலாண்டில் ரூ.2,171 கோடி லாபம் ஈட்டியது.

- டியூப் இன்வெஸ்ட்ஸ் ஆப் இந்தியாவின் (டிஐஐ), துணை நிறுவனமான சாந்தி கியர்ஸ் விற்றுமுதல் ஏப்ரல் - ஜுன் காலாண்டில் 22 சதவீதம் அதிகரித்தது.

**ஜுலை - 29**

- நாட்டின் மிகப் பெரிய தனியார் துறை வங்கியான ஐசிஐசிஐ வங்கி முதல் காலாண்டில் ரூ.2,604.73 கோடி லாபம் ஈட்டியுள்ளது.

- பங்குகளை பரிமாற்றம் செய்தது தொடர்பாக வழக்கில் ஸ்பைஸ்ஜெட் நிறுவனம் கலாநிதி மாறனுக்கு ரூ.579 கோடி வழங்க வேண்டும் என்று உச்ச நிதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

- தனியார் வங்கியான கரூர் வைஸ்யா வங்கியின் ஜூன் காலாண்டு நிகர லாபம் 1 சதவீதம் உயர்ந்து ரூ.147.97 கோடியாக உள்ளது.

- இந்தியாவில் இயற்கை வேளாண்மை மற்றும் அது சார்ந்த தொழில்கள் 15 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை வளர்ச்சி பெற்று வருவதாக ஸ்ரெஸ்டா நேச்சுரல் பயோபுராடெக்ட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ராஜசேகர ரெட்டி சீலம் தெரிவித்துள்ளார்.

- ஐடிசி நிறுவனத்தின் முதல் காலாண்டு லாபம் ரூ.2560.50 கோடியாக உள்ளது.
- இந்தியா சிமென்ட்ஸ் நிறுவனம் கடந்த ஜூன் 30ம் தேதியுடன் முடிவடைந்த காலாண்டில் ரூ.26 கோடி நிகர லாபம் ஈட்டியுள்ளதாக அந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் என்.ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்.

**ஜூலை – 30**

- நிறுவனங்களுக்கான விதிமுறைகளைக் கடுமையாக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. குறிப்பாக நிறுவனங்கள் உருவாக்கும் துணை நிறுவனங்கள் விஷயத்தில் அதைக் கண்காணிக்க விதிமுறைகளைக் கடுமையாக்க அரசு திட்டமிட்டுள்ளது.

- நாட்டின் மிகப்பெரிய தனியார் துறை வங்கியான ஐசிஐசிஐ வங்கி முதல் காலாண்டில் ரூ2604.73 கோடி லாபம் ஈட்டியது.

- ஐடிசி நிறுவனம் மருத்துவமனைகளை கட்ட முடிவு செய்துள்ளது. கொல்கத்தாவில் நடைபெற்ற ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

- சரக்கு மற்றும் சேவை வரி அமைப்பின் கீழ் இதுவரை 12 லட்சம் வணிக நிறுவனங்கள் பதிவு செய்துள்ளதாக மத்திய வருவாய்த் துறை செயலாளர் ஹஷ்முக் ஆதியா தெரிவித்துள்ளார்.

- அடிப்படைக் கட்டமைப்புகளில் மத்திய அரசு கொண்டு வந்துள்ள சீர்திருத்த நடவடிக்கைகள் நாட்டின் வளர்ச்சியை ஊக்குவிக்க உதவும் என எல்&டி குழுமத்தின் தலைமை நிதி அதிகாரி ஆர்.சங்கர் ராமன் தெரிவித்துள்ளார்.

- நிறுவன திருத்த சட்டம் 2016க்கு ஒப்புதல் பெற மக்களவையில் கடந்த வியாழக்கிழமை குரல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. இந்த திருத்த மசோதா விரைவில் மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட உள்ளது.

**ஜூலை - 31**

- இந்தியாவின் மிகப் பெரிய தொழில் குழுமங்களில் ஒன்றான டாடா குழுமம், பொதுத் துறை நிறுவனமான ஏர் இந்தியாவை வாங்க முடிவு செய்துள்ளது.

- ஐஐஎம் நிறுவனங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. இனி டிகிரியும், முனைவர் பட்டமும் அந்நிறுவனங்களே வழங்கும்.

- தொடர்ந்து 4வது வாரமாக இந்தியப் பங்கு சந்தை புதிய உச்சத்துடன் நிறைவடைந்திருக்கின்றன.

- அடிப்படைக் கட்டிடங்களில் மத்திய அரசு கொண்டுள்ள சீர்த்திருத்த நடவடிக்கைகள் நாட்டின் வளர்ச்சியை ஊக்குவிக்க உதவும் என்று எல் மற்றும் டி குழுமத்தின் தலைமை நிதி அதிகாரி ஆர்.சங்கர் ராமன் தெரிவித்துள்ளார்.

- கலைநயமிக்க இந்திய நவரத்தினங்கள் மற்றும் தங்க ஆபரணங்கள் ஏற்றுமதி அதிகரித்துள்ளது.
- கார் தயாரிப்பு நிறுவனங்கள் உயிர் காக்கும் ஏர் பேக், ஆன்டி லாக் பிரேக்கிங் சிஸ்டம் என பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மத்திய தரைவழி போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

- டாடா மோட்டார்ஸ் நிறுவனம், டாடா டியாகோ இவி என்ற பெயரில் பேட்ரிக் கார்களை அறிமுகம் செய்யவுள்ளது.

We Shine Academy™